
ௐ

# ஸ்ரீ சங்கர விஜய டிண்டிமம்



கிரி பிரதர்ஸ்

திருவல்லிக்கேணி, சென்னை.

26045
1971

3952.

# ஸ்ரீ சங்கர விஜய டிண்டிமம்

ஸ்ரீமத் பரமஹம்ஸ ஜகத்குரு சிருங்கேரி
ஸ்ரீ பிரும்மவித்யாநந்த நாத பாரதி ஸ்வாமிகளால்
எழுதப்பட்டது.

RECEIVED
JUL 1971
TANJORE

1946

All Rights Reserved.

FIRST EDITION
1946

ரூபாய்
விலை அணா 1/2 (1-2-0)

*Printed & Published by*
K. Kylasam Iyer
at GIRI PRESS
Triplicane, Madras

THE TANJORE ... SERFOJI'S ... TANJORE

# முன்னுரை

ஜகத்குரு சிருங்கேரி ஸ்ரீ பிரம்மவித்யானந்த நாத பாரதி ஸ்வாமிகள் அருளிச் செய்த ஸ்ரீ சங்கர விஜய டிண்டிமத்தை மிகவும் மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம். ஸ்ரீமத் சங்கர விஜயத்தை எத்தனையோ வித்வான்கள் எழுதியிருக்கிறார்கள். ஆனால், ஸ்வாமிகளைப்போல் தெளிவாகவும், சுருக்கமாகவும், அர்த்த புஷ்டியுடனும் எழுத சிலரால்தான் முடியும். ஸ்ரீமத் சங்கரரின் அவதார மகிமையையும், ஜீவிய சரித்திரத்தையும், அவர் திக்விஜயத்தின்போது நடந்த பல அற்புதங்களையும், அவர் அருளிய உபதேசங்களையும்; சாங்கோபாங்கமாய் வர்ணித்திருக்கிறார்கள். ஸ்ரீமத் சங்கரரின் வாழ்க்கை விமரிசைகள் தேதி வாரியாகக் குறிப்பிடப்பட்டிருப்பது இந்தப் புத்தகத்தில் ஒரு முக்கிய அம்சம். அவரது சிஷ்யகோடிகளின் விவரங்களும் ஸ்ரீமதாசாரியாளைப் பின்தொடர்ந்து ஆசாரியாளின் வரலாறுகளையும் இதில் கூறியிருக்கிறார்கள். ஸ்ரீ பிரம்மவித்யானந்த நாத பாரதி ஸ்வாமிகள் ஸ்ரீ சங்கரருக்குப் பின் வந்த 69-வது ஆசார்யாள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நியாயமாக அவருக்குக் கிடைக்க வேண்டிய சிருங்கேரி பீடம் எதிர்பாராதவிதமாக அவருக்குக் கிடைக்காமல் போய்விட்டதையும் இந்தப் புத்தகத்தி

லிருந்து வாசகர்கள் தெரிந்துகொள்ளலாம். ஸ்வாமிகள் அவர்களின் பக்திச் செல்வமும், சாஸ்திர ஞானமும் பிரசித்தமானவை. பெரிய அரசாங்க உத்தியோகத்திலிருந்து விலகி, ஸகலத்தையும் துறந்து ஞான மார்க்கத்தில் ஈடுபட்ட மகான். ஸ்வாமிகள் அவர்களுக்கு தற்போது 98 வயதாகிறது. இன்னும் அநேக காலம் திடகாத்திரராய் இருந்து ஆஸ்திக ஜனங்களுக்கு சத்விஷயங்களைப் போதித்து வரவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

ஸ்வாமிகள் ஆக்ஞைப்படியே அவர்கள் அருளிய இப்புத்தகத்திலுள்ள கருத்துக்களையோ, வாசகங்களையோ மாற்றாமல் அப்படியே பிரசுரித்திருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். இப்புத்தகம் ஆஸ்திக சிரோமணிகளுக்குப் பெரிதும் உபயோகமாயிருக்குமென்று நம்புகிறோம்.

திருவல்லிக்கேணி,
20-7-16.

பதிப்பாளர்.



ஜகத்குரு, ச்ருங்கேரி

ஸ்ரீ ப்ரும்ம வித்யாநந்த நாத பாரதி ஸ்வாமிகள்

THE TANJORE MAHARAJAH SERFO[JI'S] ... LIBRARY + TANJORE +



# ஸ்ரீ சங்கர விஜய டிண்டிமம்

---

அகண்ட பூமியிலே, அதிக சிரேஷ்டமான, தர்ம, ஆசார, கர்ம, வித்யா, தயா, பரோபகார, யோக ஞானுதிகளிலும், விளைபொருள் இயற்கைப் பொருள், செயப்படுபொருள்களோடு, பற்பல நாகரீகத்தொழில் களிலும், அத்தொழில்களுக்காகவே, கடவுளால் சிருஷ்டிக்கலான, ஜாதிமுறைகளிலும், நீதி நியமாதி களிலும், ஒப்புமுயாவு மற்றதான [ஜம்பூத்வீபத்திய நவ (9) கண்டங்களிலே] பாரத கண்டமானது (அந்நிய கண்டவாசிகளாலே ஹிந்துதேசமென வழங்கப்படு வது) சிறந்த புண்ணிய பூமியாகும்.

ஸ்ரீ பாரதமாதாவின் புத்திர, புத்திரி, பௌத்திர, பௌத்திரிகளுக்கு உலக சிருஷ்டி காலம் முதல் ஜன்ம ஜன்மாந்திரமாய்ப் பிதிராஜ்ஜிதமாய்ச் சிறப்புக்குக் காரணமென்பதுவும் நம்மவரெல்லாம் (அக்ரஜன்ம, அந்தணர்முதல் அந்தியஜர்வரை) புண்ய புருஷோத்த மர்களென்பதுவும் நிர்விவாதமானது.

தர்ம ஸத்யசீலர்களே! பாரதவன்னையின் சந்ததி யாரே! செவியுறுங்கள்.

இப்போதைக்கு (ஆங்கில ஆண்டு 1942 க்கு) 1986 ஆண்டுகளுக்குமுன் நமது புண்ய சத்யஞான பூமியிலே, அயல்கண்ட வாசிகளின் பிரவேச ஸம்பர்க்கத்தாலே, அக்ஞானம், அதர்மம், அஸத்யமாதி, பாவங்கள் தோன்றி, ஸ்வதேசதர்மம், கர்மம், ஸத்ய, ஞானுதிகள் குன்றி, பலரால் பலகொள்கைகளால் பல ஜனங்களது புத்தி பேதிக்கப்பட்டு, கடவுளின் கட்டளையாகிய "சுருதி ஸ்மிருதி" கள் ஸம்பந்தமான ஜாதி முறைகள் இகழப்பட்டும், விடப்பட்டும், வல்லான் வகுத்ததே வாய்க்கால், என்றபடி மனம்போனபடியெல்லாம் மற்றவருடைய வழக்க பழக்கங்களிலேயீடுபடவே, இவ்வுலகிலும் மேலுலகிலும், அதிருப்தியாலே குழப்பமுண்டாகப் பகவான் சிருஷ்டி கர்த்தாவின் கட்டளைபபடி ஸ்ரீ நாரதமுனிவர் நமது பாரத பூமியையும் ஜனங்களையும் கண்டு சென்று ஸத்ய லோகத்திலே தமது தந்தையர் முன்பாக, தேவர் ரிஷிகளை யெல்லாம் ஒருங்கே கூட்டி, ஸபையிலே ஸ்ரீ பிரஹ்மதேவர் ஸன்னிதியிலே. தாம பாரதபூமி வாசிகளிடம் கண்டதைக் கண்டபடி விண்ணப்பித்துக்கொண்டார்.

மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும் கடவுளால் ஸம்பந்தம் வைத்திருப்பதாலே, மண்ணுளோராலே விண்ணுளோர்க்குச் சிறப்பும், சுகமும், ஜீவனமும் பரஸ்பரமிருப்பதினுலே, மண்ணுளோர் கடமையற்ருல் விண்ணுளோரையும் பாதிப்பதாலே, பயந்து விண்ணுளோர்களெல்லாங் கூடி வைகுண்டநாதரான ஸ்ரீ மகாவிஷ்ணு தேவரிடம் சென்று விநய பக்தி பூர்வகமாய்த் தமது சங்கடங்களை விண்ணப்பித்தார்கள். விண்ணப்பிக்கக் கேட்ட பகவான் விஷ்ணுவானவர், இதற்குப் பரமசிவ பரப்பிரம்மதேவரன்றி, நாமெல்லாருமாகச் செய்த குற்றங்களைத் திருத்தி நன்ருய் நல்வழியிலமைக்க வேறு யாவராலும் முடியாது. நாராயணனுகிய நானே பௌத்தனுயும், நான்முகனே

ஜீனதேவனையும், பிரஹஸ்பதியே சார்வாகமதகர்த்தா வாயும் தோன்றி யல்லவோ, வேதசாஸ்திர விஹிதா ஸதசாரங்களைக் கெடுத்து, துச்சமான பயங்கர நிலைமையில் நாமும் பூலோகவாஸிகளுமானோம், என்று மிகவும் பரிதாபப்பட்டவர்களாய் எல்லாருமாகப் பரிகாரம் தேடக் கைலாயஞ் சென்று, ஸ்ரீபார்வதி பரமேச்வரர் சன்னிதியிலே தமது ஸங்கடங்கள் ஸ்வயங் கிருதா பராதத்தால் ஏற்பட்டதை நிவர்த்தித்துக் கருணையால் காக்கவேண்டித் துதித்தார்கள்.

பக்தபராதீனரும் கருணாகரக் கடவுளுமாகிய உமாஸஹாயர் (பரமேச்வரர்) அடியிற்கண்டவாறு கட்டளையிட்டருளினார் :—

அதாவது :—தேவர்களும் மஹரிஷிகளும் உடனே பூவுலகிலே, ஸத்குலங்களிலே, பாரதபூமியிலங்காங்கு, நரராயவதரித்து இயன்றமட்டில் நரருக்கு நல்வழி காட்டி வரும்படியாயும், தாமும் உமாதேவியாரும் குமரக்கடவுளும் ஸ்வயமஹிமையால், நரரூபவதார மெடுத்துக் குமரக்கடவுளால் சுருதி ஸ்மிருதி விஹித கர்மதர்மாசார மார்க்கமும் தம்மாலும் உமாதேவியாராலும் ஸர்வகர்ம தர்மாசார ஞானமும் நிலை நிறுத்த அனுகூலமாய் ஸ்ரீபரசுராம க்ஷேத்திரமாகிய கேரள "சஜல" கிராமத்திலே நந்திகேச்வரர் விருஷபாசலமாகவும் தோன்றி (ஸ்ரீசங்கரராக) தமது அவதாரத்துக்குமுன் சென்றிருக்கும்படியாய்க் கட்டுத்திட்டம் செய்தனுப்பிவிட்டார்.

அதன்படி நந்திகேச்வரர் விருஷபாசலமானார், ஸ்ரீகங்காதேவி சூர்ணிகாநதியானாள். பரமசிவனும் உமாதேவியாரும் மற்றத் தேவர்களும் மஹரிஷிகளும் அடியில் குறித்தவாறு நம்மையெல்லாம் நமது பூர்வ ஜன்மங்கள் முதல் இஜ்ஜென்மமும் இனிவரும் ஜன்மங்களிலும் காத்தருள் புரியவும், துராசார துஷ்கிரியைகளை நீக்கி, ஸதாசார ஸத்வித்யா ஸத்யஞானதி

களால் ஜன்ம ரஹிதமாக்கி, அகண்டாத்வயப் பிரஹ்மா நந்திகளாக்கவும் அவதரித்தார்கள்.

இவைகளுக்கெல்லாம் பரம்பரைக் குருபோதமும் வேதசாஸ்திராதிகளுமே பிரமாணமாகும்.

[இனி அவதாரங்களை விவரிப்போம்.]

அவதாரத்துக்கும், ஆகாரத்துக்கும், பூர்வம் பிரஸ்தாபப் பரமசிவனார் எந்த லக்ஷண லக்ஷிதமாயிருந்தார், எங்ஙனமவதரித்தார்? சொல்கிறோம்.

ஆகாச சரீரம் பிரஹ்மம், ஸத்யாத்ம ப்ராணாராமம், மந ஆநந்தம், சாந்திஸம்ருத்தமம்ருதம், என்ப சுருதியாலே குறிக்கப்படுகிற ஆகாச சரீரம், ஸ்தூல ஆகாயத்தினும் பரம ஸூக்ஷ்மமான ஆகாயமே சரீரமாயுள்ள எங்கும் பரவிய, அதாவது இங்கு அங்கு அது இது வெனவியலாத பரிபூர்ணர் அளவிலாத அநந்தர், "ஸத்யாத்ம" முக்காலங்களிலும் பாதிக்கப் படாத மூர்த்தா மூர்த்தமாய் ஸர்வ அஸர்வபூரண ஏகாத்மாவாகியவரும் "பிராணாராமம்" (1. பிராண, 2. அபான, 3. வியான 4. உதான 5. ஸமான, 6. நாக 7. கூர்ம, 8. க்ரகர, 9. தேவதத்த 10. தனஞ்சய) என்னும் தசவாயுக்களையே (சரீரிகளிடத்தில்) க்ரீடாஸ்தானமாகவுள்ள சிதாகாயமென்னும் ஞான சிதம்பர சிவநடராஜரும், "மந ஆநந்தம்" ஸமஸ்த தேவரிஷி நராதிகளாயுள்ளவர்களின் மனத்தைத் தமது ஆனந்த நடனத்தால் களித்து சந்தோஷிக்கச் செய்பவரும், "சாந்தி ஸம்ருத்தம்" தன்னிலே ஸர்வமும் தானும் ஸர்வத்தினிலுமிருக்கையால் யாதுமடைய வேண்டிய குறையில்லாமல் எல்லாம் நிறைந்திருக்கிற தால் சாந்தியும் ஸம்ருத்தியுமானவரும், "அம்ருதம்" இறத்தல் பிறத்தல் ஸம்பந்த ஷடூர்மி, ஷட்பாவ, ஷட்விகாராதிகளற்ற சிவமெனும் பரமாத்மா, மற்றும் "ருதமாத்மா பரம்பிரஹ்ம ஸத்யமித்யாதிகா புனத:"

நபய: ப்ரக்ஞம்
என்ற சுருதிக்கும் மற்றும் "நாந்த: ப்ரக்ஞம், நோபயத: பிரக்ஞம், நப்ரக்ஞானகனம், நப்ரக்ஞம், அத்ருஷ்டம் அவ்யவஹார்ய மக்ராஹ்ய மலக்ஷண மசிந்திய மவ்யபதேச்ய, ப்ரத்யயஸாரம், பிரபஞ்சோபசமம், சாந்தம் சிவ மத்வைதம், சதுர்த்தம், மந்யந்தேஸ ஆத்மா, ஸவிக்ஞேய:" என்ற சுருதி ப்ரதிபாத்யமான சிவபர பிரஹ்மம். தமது ஆமூர்த்த மூர்த்தங்களாலே "சிவ" "சக்தி" எனப்படுகிறது. சிவழ் அரூப அமூர்த்தம் சுருதி. "அபாணி பாதேள ஜவ்ஞ க்ரஹீத பச்யத்ய சக்ஷுஸ் ஸச்ருணோத்ய கர்ண: ஸவேத்தி வேத்யம் நசதஸ்யாஸ்தி வேத்தா தமாஹு ரக்ரியம் புருஷம் மஹாந்தம்" என்றும் யோ தேவானாம் ப்ரபவச்சோத்பவச்ச விச்வாதியோ ருத்ரோ மஹர்ஷி: ஸஹஸ்ரசீர்ஷாபுருஷ: ஸஹஸ்ரபாத்ஸபூமின் விச்வதோ வ்ருத்வா அதயதிஷ்டத் தசாங்குலம் புருஷவேதகும் ஸர்வம் யத்பூதம் யச்சபவ்யம் உதாம்ருதத்வஸ்யேசான: யதன் எனதி ரோஹதி ஏதாவான் அஸ்யமஹிமா ஸர்வத: பாணி பாதம் தத் ஸர்வதோஷி சிதோமுகம் ஸாவத: ச்ருதி மல்லோகே ஸர்வ மாவ்ருத்யதிஷ்டதி :— ஸர்வேந்திரிய குணபாஸகும் ஸர்வேந் திரிய விவர்ஜிதம் ஸர்வஸ்ய ப்ரபு மீசானகும் ஸர்வஸ்யசரணம் ஸுஹ்ருத். நவத்வார புரே தேஹீ ஹம்ஸோலேலாயதே மஹி: வசீஸர்வ ஸ்யலோகஸ்ய ஸ்தாவரஸ்ய சரஸ்யச என்ற பலவித பிரபல சுருதி பிரதிபாத்யமான ஸர்வ சக்தர்சிவம் என்றும் ஸர்வசக்திசிவை யென்றும் சக்தி சிவங்களது ஐக்யபாவத்தாலே பரம் பிரஹ்மமென்றும் ~~சிவ-சக்தி~~ சிவசக்திகளுக்கு மஹேதமென்றும் அறிந்து கொள்க. இப்படி ஸர்வாதிஷ்டான சிவ-சக்திகள் தமது ஆகாய சரீரத்திலே, அதாவது சிதம்பரத்திலே "ஸன்மயரான நடராஜமூர்த்தியும் சின்மயமான சிவகாம ஸௌந்தரியும் ஆநந்த நடனம் செய்யும் நடராஜருக்கு இசைகளான மத்தளம் தாளம் முதலிய ஒத்துகளால் தாமே விஷ்ணு ப்ரஹ்ம ரூபியாய காலகதிகளைக் காட்ட, காலகதிகளுக்குட்பட்ட தேவர், ருஷிகளுடைய, ஹ்ருதயகுஹா ஸபையிலும், பஹிர் கனகரத்ன ஸபையிலும், ஆநந்த நடராஜர் தாண்டவ தர்சனம் தருவதையும் அவர்களெல்லாரும் ஆனந்திகளாயிருப்பதையும்,

எல்லாவற்றிற்கும் காரண கார்யரூபமாயும் கார்ய
காரணமற்ற ஸர்வ ஸாக்ஷிணி அத்வயப் பிரஹ்மமான
ஸச்சிதாநந்த லஹரி ஸ்ரீமஹா த்ரிபுரஸுந்தரியே
யாகிய சிவகாம சுந்தரி ஸ்ரீ காமாக்ஷியெனும் வேத
வேதாந்த வித்யாராக்ஞையும் சிவ ஸஹோதரி சிவை
சந்திரமௌலி யெனப்படுகிற ஸ்ரீ மஹாஸரஸ்வதி தேவி
யாரும் தமது அம்ச சக்திகளாலே மேலே குறித்த "ருத
மும்" பரம்பிரஹ்மமும் ஸத்யமும் ஆத்மாவுமாகிய அகண்
டாத் வயாத்மாவிலிருந்தே தங்களிலும் அன்யமல்லா
ததும், பாஹ்ய திருஷ்டிக்கு மாத்திரம் வேறுபோல்,
அகத்ருஷ்டிக்கு ஜீவ, ஈச்வர, ஜகத்போலும், இவ்விரு
திருஷ்டிகளுக்கும் சம ஐக்ய ஞான திருஷ்டியிலே
"த்ருஷ்டிம் ஞானமயீம் க்ருத்வா பச்யேத் பிரஹ்ம மயீம்
ஜகத்" என்ற சுருதியை யநுஸரிக்கும் "ஏதஸ் மாதாத்மன:
ஆகாசம்பூத: ஆகாசாத்வாயு: வாயோரக்னி: அக்னேராப:
அத்ப்ய: ப்ருதிவீ ப்ருதிவ்யா ஓஷதய: ஓஷதீப்யோ அன்னம்
அன்னாத்புருஷ:" என்ற சுருதிப்படிக்கு அந்த ஆத்
மாவே ஆகாயம் வாயு அக்னி ஜலம்தரை உணவுப்
பொருளாயும் ஓஷதிகளும் அன்னமும் அன்னமே புரு
ஷனும் ஸ்வகத பேதமாய் ஸம்பவிக்கிறது யென்பது
(ஸஜாதீய விஜாதீய ஸ்வகதாதிபேத ரஹித)சிவ சக்தி
களாகிய அத்வயாத்ம சக்தியே சற்றுமாறி, எல்லா
சராசர உருவமாயும், சற்று அருவமாயும், மறுபடியும்
~~பூர்வஸத்மாயும், சற்று அருவவாயும் மறுபடியும்~~ பூர்
வத்தான, அத்வய அகண்டாத்மாவாயுமாகிறது
யென்பது, ஸமஸ்த நித்யஞானிகளும் அனுபவஸித்த
மாய் நிரதிசயாநந்தமாய், ஸர்வோபாதி ரஹித ஸாக்ஷி
மாத்திரமாய் பரம்பிரஹ்மமேயாய், ஸர்வ, அஸர்வ
மும், தமக்குளுள்ளதாய் தமக்கோ ரன்யமாவது,
பாஹ்யாந்தரமாவதில்லாதாய், ஏகாத்மமாய் "ஸர்வம்
கலு இதம் பிரஹ்மம்" "அஹமே வேதகும்ஸர்வம்" என்ற
சுருதி யுக்தி அனுபவ பிரஹ்மம். அதிக மெழுதினல்
விரியுமாதலாலே சுருக்கிச் சொல்லலாயிற்று. இப்
படி விவரிக்கலான ஸர்வத்துக்கும் ஆத்மாவாகிய

பிரஹ்மம் தம்முடைய அம்சரூபி தர்மஞான தேவதா நந்திகேச்வரரைத், தமது சிதம்பரத்திலே, விருஷபா சலமாகத் தோற்றிவைத்திருந்தமையாலும், தமது ஞான கங்கையை. ஏவி க்ஷேத்திரத்தையும் வாஸிகளை யும் புனிதமாக்கும்படி நியமித்திருந்தபடி கங்கை சூர் ணிகாநதி ரூபமாயும் தோன்ற, ஸப்த மஹாருஷிகளின் அம்சத்தாலே அங்கு அக்கிரஹாரமும் அந்தணரும் அவதிரிக்க, ஸர்வராஜாதி ராஜன் தேவேந்திராம்ச ஸம்பூதன் இராஜசேகரன் அத்தேசத்துக் கதிபதியாய் அரசனாய் ஆண்டுவருங்கால், இவ்வரசனது ஸ்வப்னத் திலும், அக்கிரஹாரப் பிராஹ்மணர்கள் கனவிலும், ஸ்ரீ சிவசிதம்பராதீச்வரீ ஈச்வரர்களுமான நடராஜ ரும், சிவகாமசுந்தரீயம்மையே யாகிய, காமாக்ஷி தேவியாரும் தோன்றி, விருஷபா சலத்திலே ஸ்வம்பூ லிங்கமாயும், சிதம்பரத்திலிருந்து ஸ்ரீநடராஜர் ஸர் வக்ஞமுனிதீக்ஷதரும் காமாக்ஷி தேவியாரும் அங்கு அக்கிரஹாரத்திலே வந்திருந்து தமது அவ்யக்த வடி வான தமது லிங்கத்தையே தாம் பூஜிப்பதாயும், இடம் ஏவல் பொருள்களால் தம்மைச் சேவிக்க வேண்டுமென்றும் ஆக்ஞாபிக்க, அதன்படியே அரச னாகிய இராஜசேகரன், அவ்விருஷபாசலத்திலே சுவயம்பு லிங்கோத்பவமாயிருக்கக்கண்டு, அக்கிரஹாரத்தாரும் தானும் கண்ட கனவுப்படி திருக்கோயில் கட்டி வைத்து, வழிபாட்டிற்கு வேண்டிய திரவியமும், பரி சாரகர்களையும், நியமித்து, சிதம்பரத்துக்குச் சென்று கனவில் கண்ட ஸர்வக்ஞ முனியென்னும் தீக்ஷிதரை யும், காமாக்ஷிதேவியாரையும், வேண்டிக்கொண்டு, அவர்களுடைய பந்து ஜனங்களோடு அழைத்துச் சென்று, அந்த விருஷ்பாசல சருவிலிருந்த "பழமலம்" கிராமத்துக்குச் சிதம்பர நடராஜபெருமான் பெயரால் காலாடி என்று பெயராக்கி தில்லைக் கோவிந்த ராஜப் பெருமாளையும், ஸ்ரீ கிருஷ்ணராக ஆலயம் கட் டிப் பிரதிஷ்டித்து ஸேவித்து ஸத்கீர்த்தியடைந்தான்.

இப்படி ஏற்பட்ட சுத்தப் பிரஹ்ம ஸ்வயம்பு லிங்கமும் நடராஜப் பெருமானேயாகிய சர்வஞ்ய முனி தீக்ஷிதரும் சிவகாமசுந்தரி யம்மையுமாகிய காமாக்ஷிதேவியாரும் "அர்ச்ச அர்ச்சகயோரபேதத்வாத்" "நாருத்ரம் ருத்ரமர்ச்சயேத்" "நாவிஷ்ணும் கீர்த்தயேத் விஷ்ணும் நாவிஷ்ணும் விஷ்ணுமர்ச்சயேத்" நாதேவோப்யர்ச்சயேத் தேவமிதிவேத விதோவிது: யென்பதற்கிணங்க சித்சக்தி: சேதனரூப ஜடசக்தி: ஜடாத்மிகா யென்றபடி நடராஜரான ஸர்வக்ஞ முனிதீக்ஷிதர் மற்றும் விருஷபாசலேஶ்வர ஸ்வயம் பிரஹ்மம் லிங்கம் ஸ்ரீகாமாக்ஷி யம்மையாகிய மூன்று வடிவமுமாகிய த்ரிபுரஸுந்தரி தேவியும் ஒருவரே மூன்று வடிவமாய் சர்வ சிரேஷ்ட அனுக்கிரக ரூபியாயிருந்தனர். உலகும் ஆநந்தித்தது. ஶௌதஸ்மார்த்த ஆசாரசீலர்களான பஞ்சஸூதகம் அனுஷ்டிக்கவேண்டிய காலங்களிலே பாஹ்யபூஜை செய்யக்கூடாதாதலாலே, தம்முடன் சிதம்பரத்திலிருந்து, அழைத்துப்போனதில்லை மூவாயிரத்தார் சந்ததியாராகிய வைதீக (ஆகமீகர்களல்ல) தீக்ஷித பந்து ஜனங்களாலே பூஜைகள் நடத்திக் கொண்டுமிருந்தார்கள். இப்படி நெடுங்காலமாகவே சிவாத்மானனியரான சர்வக்ஞமுனி தீக்ஷிதீஶ்வரருக்கும், காமாக்ஷியம்மைக்கும், விசிஷ்டஞான சைதன்ய ரூபிணியாகிய பராசக்தியே "விசிஷ்டா தேவி" என்ற பெயர்கொண்ட புத்திரி யவதாரமானுள். இதற்குச் சற்று பூர்வம் இக்காமாக்ஷியம்மையின் சகோதரரான ஸ்ரீ கோவிந்த தீக்ஷித வித்யாதிராஜருக்குப் பார்யாளான விமலாம்பிகைக்குப் புத்திரராய் விஶ்வாதியோருத்ரோ மஹர்ஷி: என்பதரிலிங்கமூர்த்தி அதாவது 1 தேஜோ 2 வாயு 3 ஆகாசலிங்கங்களான ஸதாசிவ ஈஶானரும் வாயு தத்புருஷரும், தேஜஸ் அகோரருத்ரர்களாகிய மூன்றம்சமும் கூடிய ஜமதக்னி அவதார சிவமே "விஶ்வஜித்" யெனும் பெயரால் புத்ரோத்ஸவமாகி லோகாநந்தம் பெருகியது. ஸ்ரீஸர்வக்ஞ தீக்ஷித முனிவருக்கு ஆத்ரேயகோத்திரம். ஸ்ரீகோவிந்த

தீக்ஷித வித்யாதி ராஜருக்கு ஸ்ரீவத்ஸகோத்திரம் இருவருக்கும் வயது முதிர்ந்தவர தமது புத்திரிக்கும் புத்திரருக்கும் விவாஹம்நடத்தி பௌத்திரனைப்பெற்றுக் களித்துப் பின் ஜன்ம ஸாபல்யம் செய்துகொள்ள இச்சைகொண்டு ஒரு சுப முகூர்த்தத்திலே சமஸ்த தேவப் பிராமணர்கள் கூடிய சதஸ்ஸிலே வைதிக விதிப்படி ஸ்ரீ ஸர்வக்ஞமுனி தீக்ஷிதர் குமாரி "ஸ்ரீவிசிஷ்டா தேவியை" ஸ்ரீகோவிந்த தீக்ஷிதவித்யாதி ராஜருடைய குமாரர் "விஶ்வஜித் சர்மருக்கு" ஸர்வாலங்கார கன்யாதானம் செய்து பாணிக்கிரஹணமும் செய்வித்து அனைவரும் சபையிலே சந்தோஷித்து ஆசீர்வதிக்கக் களிகூர்ந்தார்கள். ஸ்ரீவிஶ்வஜித் சர்மா தமது (மாதுல) தாய் மாமனும் விசிஷ்டா தேவியின் தந்தையுமான ஸர்வக்ஞமுனி தீக்ஷிதரிடம் ஸர்வவித்யையுங் கற்றுத் தேர்ந்தவராய்க் குருவினருளால் ஸர்வக்ஞரே யானார்.

இப்படி அனன்ய "அர்ச்ச அர்சசகயோரபேத அத்வயரான சிவாவதார மூர்த்திகளான க்ஷேத்திர சுத்தி பீஜசுத்திகள் கூடின பிரஶஸ்தவம்ஶத்திலே தமது ஸ்வக்ஷேத்திரத்திலே தாமே பீஜரூபியாய் தமது மஹிமையால் (பிரஹ்ம பீஜமிதம் ஸர்வம் பிரஹ்மயோநே ஸமுத்பவம்" "ஸ்வஜாதி விஜாதீனம் வர்ணனம்கிம் பிரயோஜனம்".

பிரஹ்ம தேஹத்வமாபன்னம், வாரி புத்புததாமிவ, யதைவ ம்ருண்மய: கும்ப: ஸ்தத்வத் தேஹோபி சின்மய:—எஸ்மின் ஸர்வம், யதஸ் ஸர்வம், யஸ்ஸர்வம், ஸர்வதச்சய: யத்சஸர்வ, மயோநிதயம், தஸ்மை ஸர்வாத்மனே நம:") முன் தேவர்களுக்கும் மஹரிஷிகளுக்கும் அநுக்கிரக பூர்வமாய் வாக்களித்த கைலாஸநாதரான பரமசிவ தக்ஷிணமூர்த்தி குரு ப்ரஹ்மம் விருஷபாசலேஶ்வரரென்னும் ஜமதக்னி லிங்கத்தில் பிரவேசித்து "காலாடி" அக்கிரஹார வாசிகளுக்குக் கனவில் தாம் ஸ்ரீ விஶ்விஜித்-விசிஷ்டா

தேவிகளான (சிவகௌரி) தம்பதிகளின் புத்திரராய வதரித்து ஷோடஸ வருஷம் தர்மம் கர்மம் ஆசார வைதீக வித்யாப் பிரசாரமும் மற்ெருரு ஷோடஸ வருஷம் யோக ஞானவித்யா ப்ரசாரமும் செய்து, பூவுலகிலும் மேலுலகுகளிலும் அனைவரையும் பரமானந்திகளாக்கவும் நரகசுவர்க்காதிகளிலிருந்தும்ஜனனமரணாதிகளிலுமிருந்து விடுபட அபயங்கர சங்கரரென்னும் பெயரால் அவதரிக்கப்போகிறேன் என்பதாய்த் தெரிவித்து, தெரிவித்தபடியே, தெரிந்த சர்வரும் சிவமே சங்கரராய் அவதரித்து, நமக்கெல்லாம் சுபஸந்ததி பெருக்குவாரென்று எதிர்நோக்கியிருக்க, அந்தக் காலாடி அக்ரஹாரிகர்களும் தேவரிஷிகளும் மற்றவரும் எதிர்நோக்கிக் காத்திருந்தபடியே, பரமசிவ விருஷபாசல ஜமதக்னி லிங்கத்தினிலிருந்து தமது சிவசக்தி கலைகளில் முக்ய கலைகளாலே விஸ்வஜித் தேவர் சரீரம் பிரவேசித்து, மும்மாதங் கழிந்தபின் விசிஷ்டா தேவியாரின் கர்ப்பத்திலே பாய்ந்து, நவ மாதங்கள் செல்ல தஸமமாதமாகிய யுதிஷ்டிரசகம் 2631 வைசாக சுக்ல பஞ்சமிக்கு (5) விக்ரமார்க்க சகாப்தம் 14 ஆண்டு ஈஸ்வர வருஷம் வைசாக சுத்த பஞ்சமி ஆருத்திரா நக்ஷத்திரம் ஸோமவாரங் கூடியதும் லோகத்துக்கெல்லாம் சுபகரமான முகூர்த்தத்திலே பரமசிவ தக்ஷிணாமூர்த்திப் பிரஹ்மம் ஸ்ரீசங்கரராய் லோக சங்கரர் திருவவதாரமானார்.

காட்சி கண்ட தாயாருக்கும் மற்றவருக்கும் பகவர்ன் தந்த தர்ஸனமும் தேசத்திலுண்டான மஹிமைகளும் ஒருவாறு நன்ருய் வர்ணிக்க யாராலுமியலாததாகும். ஆயினும் சிறிதளவாவது பக்த கோடிகளின் திருப்திக்காக வர்ணித்தே தீரவேண்டியதாதலால் பகவான் ஸ்ரீசங்கரருடைய திவ்யபாத கமலங்களை சிரஸில் வஹித்து நினைத்துச் சிறிது வர்ணிக்கிறேன்.

அவதார காலத்தில் ஸ்ரீவிசிஷ்டாதேவியாருக்கு சிவஞானப்பிரகாசம் தோன்றி,தன்னைச்சுற்றிக்கொள்ளவே, “ அந்தப் பிரகாசத்திலே மனம் புத்தி அஹங்காராதிகளோடு சரீரமும் மூழ்கி ஆனந்தமு மதிகரித்தது.” ப்ரசவமானதுங்கூடத் தோன்றாமலிருந்து சிறிது நேரத்துக்கெல்லாம் ஸ்வதேகாபிமான தேவதையால்தான் பிரஸவித்ததாகவும் நினைவுண்டாயிற்று. வெளிப்பார்வையு முண்டாயிற்று. உண்டாகவே தனக்கெதிரிலே “ பகவான் ஸ்ரீகங்காதர சந்திரமௌளீ, த்ரிநேத்ரன், த்ரிசூல, டமருக, ம்ருக, அபயஹஸ்தன், உமாஸஹாயன், கஜவ்யாக்ராஜின தரன், பஸ்மோத்தூளித ஸர்வாங்கன் தரிசனமானார்.” தரிசிக்கவே சந்தோஷ மேலீட்டால் துதித்து நான் புத்திரனை வேண்ட, நீ ஜன்ம, ஜராதிகள், ரஹித பரமசிவன் தோன்றினையே! பயமாயிருக்கிறதே! யாது செய்யத் தக்கது? பரமசிவா! நீ ஸர்வ பூர்ண அரூபி ஸரூபியாய தெங்ஙனம்? எனக் கேட்க அது கேட்ட பகவான் மஹா தேவராகிய சிவன் மறுமொழி கூறியதாவது: பூஜிக்கத் தகுதியான பூஜையையே கேள் “ நான் வேறு மற்ற உலகம் வேறு என்ற பாவனையால் நீயே நானாயிருந்தும்” என்னை நீ இங்ஙனம் வினவினாய். ஆயினும் மறுமொழி கூறுகிறேன். செவியுற்றுக் கேள். தாயே “ 1. ஓங்கார ஏவேதகும் ஸர்வம் 2. ஸயேவாதஸ்தாத், உபரிஷ்டாத், ஸபஶ்சாத். ஸபூர்வாத், ஸதக்ஷிணஸ்ஸ உத்தரஸ்ஸ ஏவேதகும், “ ஓ மஹாம்” “ஓமிதிபிரஹ்மா” அஹமே வாதஸ்தாத். அஹமுபரிஷ்டாத் அஹம்பஶ்சாதஹம் பூர்வாத்ஹம் தக்ஷிணதோ ஹமுத்தரத: அஹமாத்மா ஆத்மை வேதகும் ஸர்வம் ஆத்மைவாதஸ்தாத் ஆத்மோபரிஷ்டாத் ஆத்மாபஶ்சாத் ஆத்மா புரஸ்தாத் ஆத்மா தக்ஷிணத: ஆத்மோத்தரத: ததேவோஹம். ஆத்மைவேத மம்ருதமிதம் பிரஹ்மேதம் ஸர்வம் ஏதத்ப்ரஹ்மை தத்ஸர்வம் நாராயணோஹம் நாராயணே வேதம் ஸர்வம். ஸத்சிதா நந்தரூபமிதம்

ஸர்வம் ஸத்தாமாத்ரம், ஸத்ஸ்வரூபமே வேதம் ஸர்வம் யத்பூதம் யத்சபவ்யம் ஸனாதனம் ஸ்வயம் ப்ரஹ்மா, ஸ்வயம் விஷ்ணு ஸ்வயமிந்திர: ஸவயம் சிவ: ஸ்வயம் விஸ்வமிதம் ஸர்வம் ஸ்வஸ்மாதன்யம் நகிஞ்சன மருபூமௌ ஜலம் ஸர்வம் மருமாத்ர மேவ தத் ஜகத்ரய மிதம்ஸர்வம் சின்மாத்ரம் ஸ்வவிசாரத: அஜோபி ஸன்னவ்ய யாத்மா பூதானுமீஸ்வரோபிஸன் ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாம்யாத்ம மாயயா. யதா யதா ஹி தர்மஸ்ய க்லானிர்பவதியம்பிகே. அப்யுத்தானம் தர்மஸ்யததா ஆத்மானம் ஸ்ருஜாம்யம். பரித்ராணாய ஸாதூனும் விநாசாய சதுஷக்ருதாம் தர்ம்ம ஸம்ஸ்தாபனார்த்தாய ஸம்பவாமியுகே யுகே," என்று சொல்லி மற்றும், மாதா பூர்வரூபம். (அ) பிதா உத்தரரூபம் (உ) ப்ரஜனனம் ஸந்தானம் (ம) என்ற சுருதியானுஸாரம் ப்ரணவம் ஓமிம் மூன்று ரூபத்திலே முதல் வர்ணமாகிய "அ" காரம் மாதாவாகிய நீயும் மத்யவர்ணமாகிய இரண்டாவது "உ" காரம் உத்தரரூபமாகிய பிதாவும், கடைவர்ணமாகிய "ம" காரம் ப்ரஜனம் புத்திரன் யென்றும் ஸந்தானம் அதாவது அகாரம் உகாரம் மகாரம் என்ற அ, உ, ம, மூன்றுக்கும் சேர்க்கை அல்லது ஐக்கியம் "ஓம்" ஆதலாலே நீயும் பிதாவும் நானும் ஒன்றேயாவோம், நீ யறிந்த தெரிந்த ஞானியாயிருந்தும் அறியாதவள்போல் தாயையும் புத்திரனையும் வேறாக்கிக் கேட்கலாமாவெனப் பகவான் மொழியக் கேட்ட ஸ்ரீவிசிஷ்டா தேவியானவள், தனது பூர்வ ஸ்வஸ்வரூப நினைவுக்கு வரவே மிகவும் சந்தோஷித்தவளாய்ப் பகவானைப் பார்த்து, நீ சொன்னது எல்லாம் ஸத்யம்; நான் வேறு வேறல்லாத ஒரே ஆத்ம ப்ரஹ்மமே ஆயினும், லோகதர்ம ஸம்ரக்ஷணார்த்தமாய் நான், நீ, உன் பிதாவாக அவதரித்திருப்பதால் கேவலம் வைதிகஞானரூபம் விட்டு லௌகிக தர்மாவலம்பனம் அவஸ்யமாதலால் ஜகத்திலே இதம் இத்தம் என்று யாரும் அறியாதபடிக்கே கார்யத்தை ஸாதிக்க

வேண்டியதற்கு நானும் என்பதியும் ஸங்கல்பித்துக் கொண்டபடியே இப்போதய நிஜஸ்வரூபம், மாற்றி ஸ்வாத்மஞானம் மறவாதீனுய், நரசிசுரூப புத்திரனுய் எங்களைக் களிக்கச் செய்வாயாக.

சிவா! சங்கரா! என்று வேண்டவே பகவான் ஸர்வ லக்ஷணலக்ஷிதனுன நரபாலனுய்மாறித் தர்ஶனம் கொடுக்கக் கண்டு ஆனந்த மதிகரித்துச் சிசுவை வாரி யெடுதது மார்பிலணைத்துக்கொண்டு மஹாதானந் தத்தை, "ஸ்ரீவிஶ்வஜித் தேவருக்கும் ஸர்வஜ்ஞ முனி தீக்ஷதர் ஸ்ரீகாமாக்ஷி தேவியார் முதலியவர்களுக்கும்" சுபமாக சுகப்ரஸவமானது தெரிவிக்க அனைவரும் சிசு சங்கரரைத் தர்சித்து நேத்ரோத் ஸவத்தாலானந்தி களானுர்கள்.

இப்படியாக அவதரித்த பகவான் ஸர்வ தேவ லோகனுதனுகிய சங்கரர் மாதா பிதாக்களுடையவும், ஸ்வயமஹிமையாலும், ஸர்வவிதத்திலும், அபிவிருத்தி யடைந்து வந்தார். ஜகதானந்தத்திற்குக் காரணமா யிற்று. அதாவது ஸத்துக்களுக்கெல்லாம் நிர்ப்பய மும் அஸத்துக்களுக்கு ஸத்குண ப்ராப்தியாகி ஸர்வா னந்தமாயிற்று.

இப்படியிருக்கையில் "காலாடி" க்ஷேத்திரத் திலேயே பகவான் (சிவ) சங்கராவதாரமானதை ஞானதிருஷ்டியால் அறிந்த தேவ ப்ரஹ்மரிஷிகள் பலர் நேரில் வந்து நேத்ரானந்தமாய்த் தரிசித்துப் பக வானை, பிரபோ, கைலாஸநாதா, ஸர்வேச்வர, உம தருளால் நாங்களும் உலகமும் உஜ்ஜீவிக்கச் செய்வீ ராக. பரமேச்வரனே. உமது காருண்யத்தால் எங்க ளுக்கு ரக்ஷையாய்க் கிடைத்த ஸப்தகோடி மஹாமந் திர, யந்திர, தேவதா யோக, ஞான ஸித்திகளையெல் லாமும் உமது திருவடியிலே காணிக்கையாய் ஸமர்ப் பிக்கிறேம், என்று சொல்லி விண்ணப்பித்து, பக வான் நாரதர், தத்தாத்திரேயர், வசிஷ்டர், அகஸ்

தியர், துர்வாஸர், உபமன்யு, ததீசி, கௌதமர், ஸ்ரீ பரசுராமர், முதலிய அநேக மஹான்கள் தமது வித்யா சக்திகளையும் ஸித்திகளையும் காணிக்கையாய் ஸமர்ப்பித்துச் சென்றனர்.

இவ்விதமாக ஸமஸ்த சக்திகளும், ஸித்திகளும், தம்மை வந்தடைய, ஸ்ரீபாலசங்கரர் ஸர்வா ஸர்வ, ஸர்வாதீத சக்தர், யாதொருவிதமாயும் மஹிமையாதிகள் தோன்றவைக்க இச்சையில்லாதவரா யிருந்தும், "யதா வ்ருக்ஷஸ்ய புஷ்பிதஸ்ய கந்தந்தூரோவாதி" யென்ற பழமொழிக்கொப்பாக நவரந்திரரூப தேஹத்திலே யுள்ள அந்தர்குப்தானந்த கோடி விவித சக்திகளானது விருக்ஷத்தில் மலர்ந்த மலர்களின் மணத்தை வாயு தூரக்கொண்டுபோய் வியாபிக்கச் செய்வது போலவும், பழுத்த பழத்தையும் புஷ்பங்களிலுள்ள தேனையும் பக்ஷி ஜாதங்களும் வண்டினங்களும் வாயுவினால் பரவச் செய்ததை வாயுவினுதவியினால் மதுவும் பலன்களுமிருக்கும் திசையறிந்து சென்றுண்டு பருகி யானந்திப்பதுபோலவும் சத்யபலமும் சிவஞானானந்தாம்ருதம் அனுபவிக்க வெல்லாதிசைகளிலும் இருக்கிற பல தேச வாஸிகளும் வந்து தமது தமதபீஷ்டங்களைப் பெற்றுக்கொண்டு ஸ்ரீபாலசங்கரமூர்த்தியைச்சேவித்துச் சென்றார்கள். இப்படி மூன்று வருஷம் செல்லவே, இவரிலும் வேறல்லாதரான இவருடைய பிதாவாகிய விஶ்வஜித் தேவர், புத்திரருக்குச் செய்யவேண்டிய வைதிக ஸம்ஸ்காரங்களை யெல்லாம் காலானுஸாரமும் ச்ரௌதஸ்மார்த்த விதிவிஹிதமாயும் செய்து முடித்து "அக்ஷராப்யாஸம்" செய்விக்க வேண்டி யோசிக்கலானார்.

அதாவது :—நானே அஜன் அக்ஷரன் அகாராதி க்ஷகாராந்தமுள்ள ஒலிகளால் பிரதிபாஸிக்கிற க்ஷர மற்ற பிரஹ்மமென்ற ஆத்மா. அவ்யயன் இந்த எனது அவதாரனன பாலசங்கரனும் என்னைப் போலவே, அக்ஷரன், அகாராதி க்ஷகாராந்த ஸ்வ

ரூபன், என் ரூபமும் ஆத்மாவும் இவனுடைய ரூபமும் ஆத்மாவும் அவ்யயம், அஜரம், அம்ருதம், அபயம், அக்ஷரம், அனந்தம், அசோகம் முதலிய லக்ஷண லக்ஷிதமானதாயிருக்கிறது. ஆகையாலே நான் இத: பூர்வம் பாவித்த பாவனைகள் விட்டு ஸ்வபாவ பாவித ஸத்பாவனையால் புத்திர ரூபத்திலே ஐக்யமாவது தான் தகுந்ததென்று அனாதி ஸம்பிரதாயப்படி புத்திர பாலசங்கரரை யெடுத்து மடியில் வைத்துக் கொண்டு, அப்பா சங்கரா, நான் சொல்வதைக் கேள். கேட்டுக் கேட்டபடி நட, என்று மெய் யெல்லாம் தடவி, உச்சிமுகர்ந்து, சிரசில் தமது ஹஸ்தம் வைத்து (சுருதி) அதாத: ஸம்பிரத்திர்யதா ப்ரைஷ்ய நமன்ய தேஅத புத்ரமாஹ த்வம் பிரஹ்ம, த்வம் யக்ஞஸ்த்வம் லோக இதி, ஸபுத்ர: ப்ரத்யாஹா, ஹ° பிரஹ்மா, ஹ° யக்ஞோஹம், லோக -இதியத்வைகிஞ் சானூக்தம் தஸ்யஸர்வஸ்ய ப்ரஹ்மேத்யேகதா, யேவை கேச யக்ஞா ஸ்தேஷாக்ம், ஸர்வேஷாம், லோக இத்யேததை, தாவத்வா இதக்ம் ஸர்வமேத ன்மா ஸர்வக்ம் ஸன்ன யமிதோ அபுனஜ இதி தஸ்மாத் புத்ரமநுசிஷ்டம் லோக்ய மாஹுஸ்தஸ்மா தேன மநு சாஸதி ஸ யதேவம் விதஸ்மாப்லோகாத் ப்ரைத்ய தைபிரேவ ப்ராணைஸஹபுத்ர மாவிசதி ஸ யத்யநேன கிஞ்ச தக்ஷ்ணயா க்ருதாபவதி தஸ்மாதே னம்கு ஸர்வஸ்மா த் புத்ரோ முஞ்சதி தஸ்மாத் புத்ரோ, நாம ஸபுத்ரேணவா ஸ்மின், லோகே, பிரதிதிஷ்டதியதைனமேதே தைவா: ப்ராண அம்ருதா ஆவிசந்தி (பிருஹதாரண்யகம் III 5/17) என்ற சுருதியை யனுசரித்துச் சொல்லி யுபதேசித்து, அதாவது புத்ரா, நான் பிரஹ்மம், யக்ஞம், லோகம், எல்லாம் சொன்னதும் சொல்லாதவைகளும், அதுவே நீயும் பிரஹ்மம் யக்ஞம் லோகம்என்னிலிருந்தே தோன்றிய தால் நானே நீ, நீயே நானென்று பிரஹ்மோபதேசம் செய்து தமது சரீரத்திலிருந்து ஞானம் பிராணன் களோடு ஆத்மாவை (பிரதி பிம்பாத்மாவை) விட்டு

பிம்பாத்வாகிய புத்திரன் சங்கரர் ஆத்மாவிலே பிராணஞானங்களுடன் பிரவேசித்து, ஐக்கியமானார். பிறகு ஸ்ரீ சங்கரரால் தமது பிதா ரூபகளே பரத் துக்கு லோகத்தை யனுசரித்துக் கலக்கச் செய்ய அக்னி கார்யத்தால் கலக்க வைக்கப்பட்டது. இங் ஙனம் விஶ்வஜித் தேவர், ஸ்ரீ சங்கரரில் ஐக்கிய மாகவே, லோகத்தில் மஹிமைகள் அதிகரித்தது. இவ்விதமாய் தந்தையால் அக்ஷர பிரஹ்மோபதேச மடைந்த பால சங்கரரை ஞாதிகளெல்லாம் கூடி 5-வது ஆண்டில் லௌகீக உபனயனம் செய்து வேத சாஸ்திராதிகள் கற்க அருகராக்கி குருகுலத்துக்கு, அதாவது ஸ்ரீ ஸர்வக்ஞமுனி தீக்ஷிதர் மணைக்கு அனுப்ப, அங்கு அவா ஸர்வவித்யைகளும் நெப மாத் திரமாய்க் கற்று ஸர்வா ஸர்வ ஸர்வாதீதமும் தெரிந்து ஸர்வேச்வர வித்யாதிபதியானார்.

இவ்வாறு பகவான் கற்ற வித்தைகளுக்கு நிதர் சனமாய், ஆச்ரம சதுஷ்டயத்திலே, பிரதமமாகிய பிரஹ்மசர்யம், த்விதீய கிரஹஸ்தம், த்ரிதீய வான ப்ரஸ்தம், துரீயமாகிய எதியாச்ரமங்களிலே, அக்ர ஜன்மிகளான பிராஹ்மணருக்குள்ள விவித பேதங்க ளாகிற சதுர்வித பிரஹ்மசர்யம், சதுர்வித கார்ஹஸ்த் பத்யம், சதுர்வித வனித்வாச்ரமம் மற்றும் ஷட்வித துரியாச்ரமும், இவற்றின் பேதங்களுடன் ஸர்வமும், க்ஷத்திரியாளான பாஹூஜத்விதீய வர்ணிகளுக் குரிய (1) பிரஹ்மசர்யம் (2) கிரஹஸ்தம் (3) வனி யாச்ரமங்கள் மூன்றும் த்ரிதீயவர்ணிகளான, ஊருஜ வைச்யாளுக்கு, அடையக்கூடிய (1) பிரஹ்மசர்யம், (2) கிரஹஸ்தங்களாகிய இரண்டும் சதுர்த்த வர்ணி களாகிய பாதஜாளுக்கு (ஈஶ்வரன் நியமித்த) சூத்ரா ளுக்குரிய ஒரே ஒரு ஆச்ரமமாகிய கிருஹஸ்துவத்தின் தர்மம கர்ம்மாசார வித்யா ஜீவனுநிகளையும் மற்றும் இந்த சதுர்த்த வர்ணத்திலே சத்சூத்திராள் தவிர மற்ற இதர சூத்ரர்களுக்குள்ள உச்ச, மத்யம. கனிஷ்ட

அதமாதிகளாகிய பரஸ்பர ஸம்பந்தங்களையும் பரி பூர்ணமாய் தெறிந்துகொண்டவராய், தமது நைஷ் டிகப் பிரஹ்மசர்யாச்ரமத்திலே ஓர் அணுவளவுங்கூட தவருமல் ஸ்நானுதி சௌசம சமிதாதானுதி அக்னி கார்யம் பிக்ஷாடனம் மாத்ரு குருவிருத்த ஸேவை களோடு வித்யாவ்யாஸங்கம் செய்துகொண்டு, உலகி னுக்கு ஓர் நன்னடை காட்டியாயிருந்தார். ஸ்வக்ராம அயல் கிராமத்தாரும் இது கண்டு தெறிந்து தாமும் " யத்யதாசரதி ச்ரேஷ்டோதத்ததே வேத ரோஜன: ஸயத்ப்ரமாணங்குருதே லோகஸ்த்தநுவர்த்ததே" என்பதற்கிணங்க அந்த பாலசங்கரரைப்போலவே யாசரித்தும் பிறருக்குச் சொல்லியாசரிக்கச் செய்தும் ஸன்மார்க்கிகளானுர்கள். இதோடு திருப்தியடையா மல் எல்லோருமாக பல தேசங்களுக்கு ஸ்ரீ சங்கரரு டைய ஸகல கல்யாண குணுதிசயாதிகளைப் பரவச் செய்தார்கள். இதனுல் தேச தேசாந்தர வாஸிகள் இந்த மஹானுபாவருடைய அவதாரம் சர்யாதிகளும் கேரளத்திலே இவரது ஸான்னித்யத்திலேயேற்பட்ட ஸகால மழை, பயிர்கள் பலித்தல், வியாதிகளின்மை, ஆரோக்யம், ஈச்வர ப்ரணீதானம், வர்ணுச்ரமதர் மாபிவிருத்தி, ஜீவகாருண்யம், பரஸ்பர மைத்ரீயாதி கள், அதிகரித்ததும் தெறிந்து கும்பல் கும்பலாய் பக வானை தரிசித்து கடாக்ஷமும் அனுக்கிரஹமும் பெற்று சென்று தங்கள் தங்கள் சந்தோஷத்தை பிரஸித்த மாக்கினுர்கள். இவைகள் கேட்டு தெறிந்த அக் காலம் அந்த கேரள நாட்டை ஆண்டுகொண்டிருந்த இராஜசேகரனென்னும் பாரதவம்சத்து அரசன் தனது மந்திரி சுசர்மனை யனுப்பி, ஸ்ரீ பால சங்கரரை கஜாரோகணஞ் செய்வித்து அரண்மனைக்கு அழைத்து வரும்படியாய் சொல்ல, மந்திரி சுசர்மன் அவ்வாறே சென்று தமது அரசன் வேண்டுகோளைத் தெரிவிக்கக் கேட்ட, பால பிரஹ்மசாரி சங்கரர், மிகவும் ஆச்சர்ய பரிதராய் வேலி பயிரின் பாதுகாப்புக்கிடுவதுபோல ஸர்வவர்ண ஆச்ரம ரக்ஷணைக்காக க்ஷத்ரிய அரசர்களை

பிரஜைகளால் நியமிக்கப்பட்டு வருகிறது. நானே பிரஹ்மசாரி. எனக்கு நித்திரை துண்ய பிரஹ்ம வித்யை கற்கையும் முக்குணங்களிலே தமஸ்ஸூம் ரஜஸ்ஸூம் தவிர்த்து, சுத்த ஸத்வகுணப் பிரதானுய் அக்னிகார்யம், குருஸேவை, பிக்ஷாடனம், முதலிய ப்ரஹ்மசர்யமே, வ்ருத்தியாயிருக்க, ரஜோ குணேத்ரேகத்தால் அரசன் என்னை ஆணையேறி அரண்மனை யேகி அங்கு பலவித அலங்காரங்களையும் நர்த்தன கீதனங்களையும் கண்டும் கேட்டும் உணவுகளை யுண்டும், பானங்களைப் பருகியும், ஸ்பர்சன, ஆக்ராணதிகளாகிய பஞ்ச விஷயங்களால், மனம், மதிகலக்கமாய், ப்ரஹ்மசர்ய வ்ருதாப்பிரஷ்டனுகச் செய்ய வல்லவோ "ஸ்வயம் நஷ்ட: பரான்னுசயதி" யென்பதுபோல தான் அனுபவிக்கிறது. போதாமல் ரஜோகுண ஸமுத்பவ அக்ஞைக வென்னையுமாக்க வெண்ணிச் சசிவேசரான சுசர்மரே! உம்மை யிங்கு அனுப்பினன்! அது தகாததுவாகும். என்போன்ற வடுக்களுக்கு ஸ்வதர்மஹானியுண்டாகாமலும் மற்ற ஆச்ரமி வர்ணிகளுக்கும் ஸ்வதர்ம, கர்மம சிஷ்டத்வத்துக்கு, அனுகூலமாயும், பிரதிகூலங்களேற்படாமலும், காத்துவர வேண்டியதே தேசபாலக க்ஷத்திரியருக்கு வேத சாஸ்திர விஹிதமுக்ய தர்மமாதலால், நீர் திரும்பிப் போய் நாம் தெரிவித்தபடியே அரசர் சமூஹத்திலே அறிக்கையிடக் கடவீரென்று சொல்லி, அரண்மனைக்கேகாமல் தமது ஸ்வதர்ம அனுஷ்டான நிஷ்டா கரிஷ்டராகவே இருந்தார்.

மந்திரி சுசர்மர், பகவானிடம், கேட்டதை கேட்டபடியே அரசனுக்குத் தெரிவிக்க அறிவில் மிகுந்த அரசன்தான் செய்தது பிசகு, சங்கரர் சத்யதர்ம சீலராதலால் அப்பெரியாரை மன்னிப்புக் கேட்டுக்கொள்ள நானே நேரில் செல்லவேண்டுமென்றும் "பிக்ஷான்னம் அதாவது புத்ரமாம்ஸம் வரம்போக்தும் நதுராஜ பரிக்ரஹம்" என்ற தர்ம வாக்யம் பரிபாலனம் இந்த சங்க

ரிடமிருக்கிறது ; ஆதலாலே அப்படிப்பட்ட ஸதோ தித ப்ரஹ்மசாரியை தர்சித்து க்ருதார்த்தனுவேனுக வென்று புறப்பட்டு சங்கரரை தர்சித்து அடிபணிந்து க்ஷமாபணங் கேட்டுக்கொண்டு அருள்பெற்றுச் சென் ருன்.

ஒரு நாள் வழக்கம்போல் ஸ்வதர்மநிஷ்டரான பாலசங்கர ப்ரஹ்மசாரியானவர் தமது நித்யகடன் பாட ப்ரவசனுதிகள் முடித்துக்கொண்டு “மாது கரத் துச்கு” (பிக்ஷைக்கு ஒரு ப்ராஹ்மண க்ரஹத்துக் கேக. அக்கிரஹ, எஜமானியானவள் “எதிச ப்ரஹ்மம சாரீ ச பக்வான்னஸ்ய ஸ்வாமினௌ உபௌ” ஸன்னியாசியும் பிரஹ்மசாரியும் க்ரஹஸ் தர் வீட்டில் பக்குவமான அன்னத்தை முதலிலே பெறத்தக்க இருவிதமான ஸ்வாமிகள் என்பதையும் எதிக்கும் பிரஹ்மசாரிக்கும் பிக்ஷையிட்ட மிகுதியை ஸர்வயக்ஞங்களுக்கும், சிவபூஜைக்கும், நித்ய சிராத் தாதிகளுக்குங்கூட, உபயோகிக்கத் தகுந்தது, மற்றும எதிகள் வடுக்கள் பெறும் பிக்ஷான்னத்தால் அவர் களுங்கூட சமஸ்த தேவ பித்ரு கார்யாதிகளுக்கு பரி சுத்தமுள்ளதாய் உபயோகிக்கலாமென்ற ச்ரௌதஸ் மார்த்த விதியறிந்தவளாயும், மற்றும் எதி ஸாக்ஷாத் சிவஞானி நாராயணன், பிரஹ்மசாரியும் வேத ஸ்வ ரூபி, ஸர்வதேவமயன் என்றறிந்திருந்தவள், தனது இல்லத்திலே ஜேஷ்டா லெக்ஷ்மி வாஸமாகி ஸ்ரீலக்ஷ்மி துலங்கியிருந்ததையும் யோஜித்து யாது செய்யட்டும், இந்த ஸகல தேவ தேஜோராசியாயிருக் கிற இவ்வடுவுக்கு பிக்ஷையிடும் பாக்யம் எனக்கில்லா மற் போகிறதே யென்று மனங் கலங்கி குழறினவ ளாய் கையைப் பிசைந்துகொண்டு நிற்கக் கண்ட சங்கரர் பவதீ பிக்ஷாம் தேஹி எனக் கேட்டுக் கண் ணீர் உதிர்த்தாள். சங்கரர், அம்மையே வியஸனிக்க வேண்டாம், முன் த்ரௌபதி உம்மைப் போலவே, தயங்கி ஸ்ரீ தூர்வாஸருக்கும் சிஷ்யாளுக்கும் த்வாதசி

யில் வனத்திலே தபித்து ஸ்ரீகிருஷ்ணபகவானை ப்ரத்யக்ஷமாக்கிக்கொண்டு அண்ணா கிருஷ்ணா! த்வாதசி பாரணையானபின் அக்ஷயபாத்திரங்கூட அலம்பிக் கவிழ்த்துவிட்டேனே, மஹருஷி தூர்வாஸருக்கும் சிஷ்யாளுக்கும், அகாலத்தில் வந்தவர்களுக்கு, பிக்ஷையிட யாதுமில்லாததால் பாபம் சாபம் நேரிடும்போலிருக்கிறதே; நான் யாது செய்வேன் ரக்ஷகா, வென அம்மா தங்காய் (த்ரௌபதி எனக்குங்கூடத்தான் பசிக்கிறது) ஏதேனும் பாத்திரத்தி லொட்டிக்கொண்டிருக்கு மேல் பார்த்து வழித்து எனக்கிடு உண்டபின் உன்னை ரக்ஷிக்கிறேன், என, அக்ஷயபாத்திரம் தடவியதிலே ஒட்டிக்கொண்டிருந்து அகப்பட்ட வொரு அகத்தியிலையை பகவானுக்குக் காட்ட, அவரதை வாங்கியுண்ட மாத்திரத்திலே "எதிர் யஸ்ய க்ரஹே புங்தே தத்ரபுங்தே ஹரிஸ்வயம்—ஹரிர்யஸ்ய க்ரஹே புங்தே தத்ர புங்தே ஜகத்ரயம்" "தண்ட க்ரஹண மாதரேன நரோநாராயணோபவேத்" த்வே ரூபே வாசு தேவஸ்ய சரமசரமேவச சரம்ஸன்யாஸினப் ரோக்தோ அசரம் பிரதிமாதய: என்ற நிர்ணயப்படி ஸ்ரீ கிருஷ்ணரால் உடகொள்ளலான ஒரு பக்குவ அகத்தியிலை மூவுலகையும் திருப்தியாக்கி ஸ்ரீ தூர்வாஸர் சிஷ்யர்களுடன் வயிர் மந்தமாயிருக்கிறது பிக்ஷை வேண்டாமென்று சொல்லிப்போன விஷயம் நீர் தெறிந்திருப்பீராதலால், ஏதேனும் கிஞ்சித் பிக்ஷையிடலாமெனக் கேட்க, அந்த மாது இல்லமெல்லாந் தேடி உலர்ந்துபோன நெல்லிக்காய் ஊர்காயொன்றை மிகவும் சங்கோசத்துடன் கொண்டுவந்து சிரத்தா பக்தி பூர்வகம் சங்கரரிட பிக்ஷா பாத்திரத்திலிட்டாள். ஏற்றுக்கொண்டு பரிபூர்ண திருப்தியையடைந்த சங்கரர் கனகதாரா ஸ்தவம் செய்து, லக்ஷ்மீ தேவியைத் தருவித்து, அந்த நெல்லிக்காய் ஊருகாய் கொடுத்தவருக்கு, ஐஶ்வர்யமளிக்கச் சொல்ல அதன்

படியே லக்ஷ்மீதேவி அந்த வீடு நிறைய நெல்லிக்கனி போன்ற ஸ்வர்ண உருண்டைகளால் நிரைப்பித்து சங்கரரிடம் விடை பெற்றுச் சென்ருள்.

ஒருசமயத்தில் ஸ்ரீ விசிஷ்டா தேவி யார்! சூர்ணி கங்கையில் தீர்த்தமாடப் போய்த் திரும்பிவர விருத் தாப்பியத்தால் தளர்ந்து தள்ளாடிய பிரயாசையைக் கண்டு, ஸ்ரீ சங்கரர் கங்கையை அக்ரஹார சமீபமாய் ஓடும்படி யாக்ஞாபிக்க, அதன்படியே சூர்ணிநதி யென்னும் கங்கை பூர்வஸ்தலம் விட்டு கிராம சமீபம் பிரவாகிக்கத் தொடங்கியது. இவ்விஷயம் தேச மெல்லாம் பரவியது. இவ்வத்புதத்தைக் கேட்டு ஆச்சர்யப்பட்ட தேச தேச ஜனங்கள் இப்புண்ய தீர்த்தஸ்னானம் சங்கரதர்சனம் செய்ய திரள் திரளாய் நாள்தோறும் வந்து தமதபீஷ்ட ஸித்தியை யடைந்து கொண்டு செல்லும் வழக்கமாயிற்று. இதனுல் ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய ஆலயத்துக்கு அபாயம் நேரிட்டு வர, பகவான் கிருஷ்ணர் சங்கரர் முன் தோன்றி, ஹே, பசுபதே, சங்கரா, உமதம்ச ஸம்பூத னை நான் இங்கு உமது சமீபத்திலிருந்து உமது கார் யங்களை நிரைவேற்றியும் மற்றும் குருவாயூரிலிருந்து கொண்டு பூர்வம் உம்மால் எனது ஸ்ரீராமாவதார காலத்திலே போதிக்கப்பட்ட சிவகீதையை விஸ்தார மாக்கி ஸகலருக்கும் போதித்துக்கொண்டு மிருக்கிற குருவாயுமிருக்கிறேன். நீரோ லோகோத்தாரணத் தின் பொருட்டு அவதரித்தும் வந்த கார்யம் அஷ்ட வர்ஷங்களாய் செய்யாமலிருக்கிறீர்; இங்கே என்னை பத்திரமான விடத்திலே, நிலைக்க நிறுத்தி வைத்துப் பிறகு நானிருக்கும் குருவாயூருக்கு வந்து பார்த்து, நான் செய்யுங் கார்யங் கண்டு, இனி செய்யவேண் டிய கார்யமும் தெரிவித்தும் நான் முன் இராமாவ தாரத்திலே உம்மிடம் கேட்ட சிவகீதையை பாரத யுத்த காலத்திலே அர்ஜுனனுக்குபதேசித்த விதா னத்தையுமறிநது துறவியாய் பதரிகாஶ்ரமம் சென்று

அங்கே கோவிந்த யோக நாதனுயிருக்கும் என்னிடம் ஸம்பிரதாயனுஸாரம் ஸர்வமும் தெறிந்து ஸ்ரீவியாச ராகிய என்னாலே செய்த உத்தரமீமாம் ஸாவுக்கும் உபநிஷதங்களுக்கும் கீதைக்கும் வியாக்யானம் செய்து ச்ரௌத ஸ்மார்த்த ஆஸ்திக அத்வைத ப்ரஹ்ம வித்யை பிரசாரம் செய்தும், அதற்கிணக்கமாய் ஸர்வ ஜன கர்ம்ம தர்மானுஷ்டானுசாரங்களையும், விதீரிய கம் பண்ணி ஸர்வ ரக்ஷக அபயங்கர சங்கர, நாமம் அன்வர்த்தக நாமமாக்க வேணுமென்று பிரார்த்திக்க, அங்ஙனமே யாகட்டுமென்று சங்கரர் ஸ்ரீ கிருஷ்ண ருக்கு வாக்களித்து உடனே தமது மஹிமையாலே ஸ்ரீ கிருஷ்ண விக்ரஹத்தை நடத்திக் கொண்டுபோய் பத்திரமானவிடம் சேர்த்து ஆலயத்துக்குறிய ஸமஸ்த மும் வரவழைத்துக் கொண்டு பிரதிஷ்டித்து பின் தமது மாதாவாகிய விசிஷ்டா தேவியாரது அனுமதி யும் பெற்றுக்கொண்டு குருவாயூர் சென்று கீதை கேட்டு பிறகு "அபயம்வை ஸர்வபூதேப்ய: மத்தஸ் வரஹா" யென்று மும்முறை ஊர்த்துவ பாஹுவாய் உச்சரித்தும் "தாரேஷண, புத்ரேஷண, வித்தேஷ ணதி ஸர்வேஷணுதுத்திதோஹம்" என்பதாய் மூன் ருவர்த்தி ஸத்ய ஸங்கல்பமும் செய்து, ஸர்வலோக குருவான சங்கரர் லோக சங்கரராய் ப்ரேஷோச் சாரணை மந்திரம் சொல்லி அங்கு நிறைந்திருந்த ஸபாஸந்தாளாலே அனுமோதித்து ஸமர்ப்பித்த, ~~சாடீ~~, தண்ட, கமண்டலு, பாதுகா, கடிசூத்ர, கௌபீனம் முதலிய விஷ்ணு சின்னங்களை ஸ்வீகரித்து, பிக்ஷா வந்தன, பாத பூஜா, பூர்வகமாய் கிரஹஸ்தர்களால் சமர்ப்பித்த பிக்ஷான்னம், புஜித்து, தாயாரிடம் விடை பெற்றுக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணபகவானிட கோரிக் கைப்படி வடதிசை ஸ்ரீ கோவிந்த யோகீந்திரநாதரை தேடிக்கொண்டு பதரிகாஸ்ரமத்துக்குப் பிரயாண மானார். பல வன, வனந்தர, நதி, நத, கிரி, புரி, யாதி கள் கடந்து பாதசாரியாய் பதரி சேர்ந்ததும், இங்கு தான் நீர் நாடிவந்த ஸ்ரீ கோவிந்த யோகீந்திரநாதர்

வசிக்கிறார் குருவாயடைகவென்று ஆகாயவாணி யுரைத்ததைக் கேட்டு, அங்கும் இங்கும் எங்கும் சுற்றிப் பார்த்து ஸத்குருதேவரது வாஸமான குகையை, யடுத்து த்வார சமீபம் நின்று ஸ்தோத்திரம் செய்தார். அந்த ஸ்தோத்திரமானது ஸ்ரீமத் வைகுண்டநாதரான மஹாவிஷ்ணுவும் அவருக்கு மன்யமல்லாத தத்விஷ்ணுவேயாகிய ஆதிசேஷனும், ததுபரிசயனனும் ஸர்வக்ஞனும், வியாபகனும், சக்தனுமான லோககுரு ஸ்ரீமத் கோவிந்த யோகீந்திரநாதருடைய அவதார காரண காரிய மஹிமாதிகளை யெல்லாம் சுருக்கி வியக்தமாக்கிய ஸுபாஷித அத்வைத ஆனந்த தாயக ச்ராவ்யமாயிருக்க சுருதப்படுத்தியதை, ச்ரவணித்த ஸ்ரீ குருகோவிந்தநாதேந்திரர் குகை வாயிலில் வந்து, நின்று பார்த்து, ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவிராட்டான ஸ்ரீ சங்கரரை கண்குளிரக் கண்டு ப்ரச்னிக்க உத்தரமாய், நான் கேரளத்திலே விச்வஜித்-விசிஷ்டாதேவி குமாரனுயிருந்து தங்கள் திருவடி சேவக, பூஜக, சிஷ்யனுக, காத்திருக்கிறேன். அடியேனை ஆண்டு அருள வேண்டுகிறேன் என்று மொழிந்த, மறுமொழியால், மிகவுமானந்தம் பெருகியவராய், ஸ்ரீ கோவிந்த யோகீந்திர குருநாதர் "வித்யா குரூணும்குரு:" என்பதுபோல் சர்வலோக குரு மஹாதேவனுகிய உம்மை, உமக்கு நான் சிஷ்யனுயிருந்துங்கூட, எனக்கு சிஷ்யனுக விரும்புகிற உமது விருப்பப்படியே அங்கீகரித்து நெபமாத்திரமாயாகிலும் குருவாயிருக்கும்படியான பெரும்பாக்கியம் நான் பெற்றதே என் ஜன்மம் ஸார்த்தகமாயிற்று. ஆயினும் லௌக்ய தர்மமானுசாரம் நான்குருவாவேனுக வென்று சொல்லி, ஸ்ரீ பாலசங்கர யதீச்வர பரமஹம்ஸரை இரண்டு கைகளாலும் வாரி யெடுத்து மடியில் வைத்துக்கொண்டு, சமஸ்த தேவரிஷி சிஷ்ய கணங்கள் நிறைந்த ஸபையில், மெய்யெல்லாந் தடவி, உச்சி முகந்து, ஹஸ்த மஸ்தக தீக்ஷையுடன், ஏகாக்ஷரி ப்ரணவமும் மஹாவாக்யங்களாயிரத்தெட்டும், அவற்

றினங்கங்கள் ஸஹிதமுபதேசித்து, கிரம ஸன்யாஸ பரமஹம்ஸராக்கினர், மற்றும் குரு பரம்பரையையு முபதேசித்தார், அதாவது “ஆதௌஸ்வராஜம், குரு மத்விதீயய மபேத விஞ்ஞான மயம், மஹேசம, நாரா யணம், பத்மபுவம், வசிஷ்டம், சக்திஞ்ச, தத்புத்ர பராசாஞ்ச, வியாசம், சுகம், கௌடபாதம் மஹாம் தம், பக்த்யா ப்ரணதோஸ்மி நித்யம்” என்பதாக தமக்கு பூர்வீகமான ஒன்பது குருதேவர்களையும் தெரி வித்தார். இது தெரிந்துகொண்ட ஸ்ரீ சங்கரரும் பூர்வகுருதேவர்களுக்கு வந்தன பூஜனதிகள் செய்து துதித்து, தமது ஸ்வகுருவாகிய ஸ்ரீமத் கோவிந்த யோகீந்திரநாதரை பூர்வ ஒன்பது குருதேவரோடுஞ் சேர்த்து எல்லாரையுமபேதமாய் ஏகமாய் ஸ்வகுரு விலே கண்டு பூஜித்து பக்தியாய் நடந்து சேவை செய் தார். இப்படிச் செய்து வந்த ஸ்ரீ சங்கரருடைய பக்தி பூஜையாலே ஸர்வலோகதேவர், த்விஜர், மான வர்களெல்லாம் காரணந் தெரியாமலே பரமானந்த முடையவர்களாய், கால மழைகளாலும் திரிண காஷ்ட ஸம்ருத்தியாக பூமி செழிக்கச் செய்து, வேண் டியது வேண்டியபடியே ஸித்திக்க பதரிகாச்ரமத் திலே புஷ்பவிருஷ்டியும் பெய்தது.

சாஸ்திரவிஹிதப்படி ஒரு வருஷ காலம் குரு சேவை செய்துகொண்டு, ஸ்ரீசங்கரர் பதரிகாச்ரமத் திலே, குருகுலத்திலிருந்தார். இந்த ஒரு வருஷ காலத் திற்குள் ஸ்வாமி சங்கரபகவத் பூஜ்ய பாதாசார்யாள், ஸ்ரீகோவிந்த யோகீந்திரநாத குருதேவர் இச்சித்த படிக்கு ப்ரஸ்தானத்ரயமென்ற 1 உபநிஷத்துக்கள் 2 சாரீரகமீமாம்ஸாவென்னும் பகவான் ஸ்ரீ வியாஸா சார்யாள் செய்த ப்ரஹ்ம ஸூத்ரங்கள் 3 ஸ்ரீ கிஷ்ண பகவானலை அர்ஜுனருக்குபதேசித்த ~~சித்த~~ பாரத யுத்தகாண்டத்திய பீஷ்மபர்வாந்தர்பூத ஸர்வோப நிஷத் ஸாரஸங்கிரஹமான பகவத்கீதா வுபதேசம், பிறகு யுத்தம் முடிந்து சாந்தமாய் சந்தோஷமாயிருக்

கையிலுபதேசித்த அநு கீதா உத்தரகீதாதிகள் எல்லா வற்றிற்கும் ஸர்வ சாஸ்திரானுபவ யுக்தி விஹிதமாய் பாஷ்யஞ் செய்து குருதேவர் ஸன்னிதியில் ஸமர்ப்பித்தார். இதையெல்லாம் வாசித்துப் பேரானந்தங் கொண்ட குரு ஸ்ரீ கோவிந்த யோகிந்திர நாதர், அந்த ப்ரஸ்தான த்ரய பாஷ்யங்களைத் தமது குரு, பரமகுரு, பரமேஷ்டி குருதேவர்களான, ஸ்ரீ கௌடபாதர், ஸ்ரீ சுகப் பிரஹ்மம், ஸ்ரீ வியாஸாசார்யாள், கேட்டும் பார்த்தும் சந்தோஷித்தும், ஸ்ரீ சங்கரரை அனுக்கிரஹிக்கவும், செய்யக் கருதியவராய், அவர்களை ப்ரத்யக்ஷமாகும்படி பிரார்த்திக்க, பிரார்த்தனைப்படியே அம்மூன்று குருதேவர்களும் தமது சிஷ்ய பரிவார ஸமேதராளாய் ப்ரஸன்னமாய் பாஷ்யங்களைக் கேட்டும் பரீக்ஷித்துப் பார்த்தும் சந்தோஷித்து, குதூகலத்துடன் எல்லாரையும் பார்த்து, "இது சத்ய பாஷ்யம்" இந்த பாஷ்யமும் பாஷ்யகாரரும் சத்யாத்வைதப் பிரஹ்மமும் பிரஹ்ம வித்தையுமாக விருப்பதாலே இந்தமாதிரி இந்த பரமசிவ சங்கரரே யன்றி வேறு யாராலும் இவ்வளவு நல்ல நிஜ பாஷ்யம் செய்யமுடியாது. ஆதலால் இவைகளை இவரே லோகத்திலே பிரசாரம் செய்து ஜனங்களுடைய அக்ஞானம் நீக்கி, ஸுக்ஞானிகளாக்கி ஸத்ய, தர்ம்ம, பிரதிஷ்டை செய்யவேணும். ஏனெனில் சத்யமாகிய (சுருதி) வேதமும் தர்மமுமாகிய ஸ்முருதிகளும் ("ஸத்யே ஸர்வம் ப்ரதிஷ்டிதம்" "தர்மே ஸர்வம் பிரதிஷ்டிதம்"), அதாவது "(ஸர்வம் ஹஸ்திபதே மக்னம்") யென்பதுபோலிதிலே குடிகொண்டிருக்கிறது. இங்கிருக்கிற எனது சிஷ்யர் ஸ்ரீ ஜைமினிரிஷிமூலியமாய் நான் ஸமஸ்த சுருதி விஹித கர்ம்ம தர்மங்களை பூர்வமீமாம்ஸா அல்லது தர்ம மீமாம்ஸாவை யுண்டாக்கி வைத்து, இதற்கு அனுகரணமாய் ஸத்ய ப்ரம்ம ஸூத்ரத்தையும் நானே செய்~~வித்~~ததால், இவ்விரண்டிற்கும் "தர்ம்மஜிஞ்யாஸா" "பிரஹ்ம ஜிஞ்யாஸா" ஸூத்ரங்களென்

றும் பூர்வ உத்ரமீமாம்ஸாவென்றும் ஸர்வஸாமென்றும் லோகப்பிரசித்தியாய் விட்டதினுலே இவற்றின் பாஷ்யம் இச்சங்கரராலேயே லோக ச்ங்கரார்த்தம் பிரசாரமாதல் ஸர்வ சிரேயஸ்கரமாகும் என்று பகவான் ஸ்ரீ வியாஸாசார்யாள் சொல்ல, அங்கு நிறைந்திருந்த, ஸ்ரீ சுகப்ரஹ்மம், தாதாஸ்து, வென்றும், பைலர், சுமந்து, வைசம்பாயனர், ஜைமினி, கண்வர், முதலிய வேதரிஷிகள், ருக் 2/1 எஜுஸ் 2/2 சுக்ல எஜுஸ் 3 ஸாமம் 4 அதர்வணம் பரம்பரை விளங்க நான்கு குருபீடங்கள் திராவிடாசார்யாளால் பிரதிஷ்டாபணயாக வேணுமென்றும் சூதபுராணிகர் அப்படி ஏற்படும் பீடங்களும் பாஷ்யங்களும் ஆசாரங்களும் அஷ்டாதச மஹாபுராண அஷ்டாத சோபபுராணுனுஸாரமும் முக்கியமாய் தனது சூதஸம்ஹிதா விஹிதமாயுமிருக்கும் அத்வைதவித்யையா யிருக்க வேண்டுமென்றும், ஸ்ரீ கௌடபாதாள் தாம் ரசித்த மாண்டுக்யோபநிஷத் காரிகை நிஜாத்வைத வித்யையாதலாலே யதை யனுசரித்திருக்க வேண்டுமென்றும், இப்படியாக தங்கள் தங்கள் பெயர் சாஸ்வதமாயிருக்கச் செய்யவேண்டு மென்பதாய் பகவான் ஸ்ரீ வியாஸாசார்யாளிடம் அறிக்கையிட்டார். இதையெல்லாங் கேட்ட பகவான் வியாஸர் மிகவுஞ் சந்தோஷித்தவராய் ஸ்ரீ சங்கரரை யிருகைகளால் கட்டியணைத்து மார்போடு மார்பும் ஐக்யப்பட அழுத்தி, தேஹமெல்லாந் தழுவி மடியில் வைத்துக் கொண்டு மூர்த்தாவை யாக்ராணித்து, சிஷ்யர்களை விளித்து, நோக்கி, ஹே சிஷ்யர்களே, மனேமல த்யாகமே சௌசம், நிர்விஷயப்பட்ட மனமே தியானம், அபேத தர்சனமே, ஞானம் என்பதாய் நீங்கள் தெரிந்திருக்கிறீர்களல்லவா? இப்போது வேதநாயகனும் பாஷ்யகாரனும வேதவிபாகமும் ஸூத்ரகாரனுமாகிய இருவரும் ஏகராகவிருப்பது அகண்டைக்ய அத்வயாத்ம ஞான சக்ஷுவால் காணுங்களென்று ஸ்ரீசங்கர நாராயணன் ஏகமேவா அத்விதீயம் பிரஹ்மம யென்ற

சுருதி ஸார்த்தக நிதர்சனமாக்க, ஐக்யங் காட்டியும், பிரிந்தும், மறுபடியுங் கூடியும், தர்சிப்பித்து, சிஷ்யாளையெல்லாம் அகமகிழச்செய்து, பிரிந்து சபையில் ஸ்ரீ சங்கரரைப் பார்த்து, இவர்கள் சிவாய விஷ்ணு ரூபாய சிவ ரூபாய விஷ்ணவே, சிவஸ்ய ஹ்ருதயம் விஷ்ணு : விஷ்ணோச்ச ஹ்ருதயம் சிவ :, யதாசிவமயம் விஷ்ணு: ஏவம் விஷ்ணுமய: சிவ:, யதாந்தரம் நபச்யேத (இதி ஸ்கந்தோபநிஷத் சுருதி) யென்பது நிச்சயமாய்க் கண்டு திருப்தரானூர்கள். இது கேட்டறிந்த சங்கர பகவத் பூஜ்யபாதாள் அங்கு மஹரிஷிகளுடைய கோரிக்கையை யனுசரிப்பதாய் வாக்களிக்க, எல்லாரும் சந்தோஷ சித்தராய், ஸ்ரீசங்கரரை காசிக்கேகி அங்கிருந்து வைதீக தர்ம்ம ஸ்தாபனம் செய்யத் தொடங்கும் படிக்கும் காசியில் ஸ்ரீ விஷ்ணுவாகிய வியாஸாசாரியாளது அம்சாவதாரனை சனந்தனர் பெயரால் ஸ்ரீ வியாஸரே சிஷ்யராய்வந்து கூடிக்கொண்டு ஆசார்ய பகவான் சங்கரரை சேவிப்பதாகவும் சொல்லி தங்கள் தங்கள் ஆச்ரமங்களுக்குச் சென்றூர்கள். செல்லவே இதெல்லாம் கண்டும் கேட்டும் களித்த ஸ்ரீ கோவிந்த யோகீந்திரநாதரும் சிஷ்யாளும் பரமானந்தத்தில் மூழ்கினூர்கள். பிறகு தெளிந்து காசிக்குச் சென்று பிரசாரம் செய்யும்படியாய் அனுக்ஞை கொடுத்து, தமது குருமார்கள் பரம்பரையாய் பூஜித்து தமக்கு கொடுக்க லபித்த ஸ்ரீ சந்திர மௌளீச்வர லிங்கம், ஸ்ரீ சக்ரமென்னும் எந்திர ராஜம், ரத்ன கர்ப்ப கணபதி, நவக்கிரஹ யந்திரம், லக்ஷ்மீ நரஸிம்ஹ ஸாலக்கிராமமும் அவைகளின் வரலாறுகளும் சொல்லித்தந்து அனுப்பிவிட்டார்.

இப்படி தேவதார்ச்சனைகளும் ஆசீர் வசனங்களுடனனுக்கிரஹங்களும் பெற்றுக்கொண்டு விதிப்படி பூஜித்து ஸ்ரீமத் சங்கரபூஜ்ய பாதாள் குருபெரியார்களுக்கு விதிப்படி வந்தனம் செய்து, பதரிகாச்ரமம்விட்டு பாதுகா ஸித்தியால் ககனமார்க்கமாய்க்

இளம்பி கங்கா விச்வேச்வர விசாலாக்ஷியாகிய அன்ன பூர்ணே(ச்)வரி ஸன்னிதியிலே செல்லும்போது, பகலில் ஆதித்யனெளி மழுங்கிப் போய் அகண்ட சிவ ஞான தேஜோராசியாகிய சங்கர பகவத் பூஜ்ய பாதா ளுடைய பிரகாசம் ககனமுதல் பூமியெல்லாம் பரவி ஜ்வலிக்க, இவ்வாச்சரியத்தைக் கண்டு கொண்டு அங்காங்கு தேசதேச ஜனங்கள் திரள் திரளாய்க் கூடி இதென்ன ஏதுவென்று பேசிக் கொண்டிருக்க, காசி க்ஷேத்திரவாசிகளின் புண்ய பரிபாக விசேஷத் தால் விச்வேச்வர ஸன்னிதியிலிறங்கி, காசி விச்வனாதரைக் கண்டு, ஸேவித்து, கங்கைக்குச்சென்று, ஸ்னானுஷ்டான முடித்துக்கொண்டு அன்ன பூர்ணேச்வரியாகிய விசாலாக்ஷி ஸன்னிதிக்கேகி, அன்ன பூர்ணாஷ்டகம்செய்து துதித்தார். துதிக்கக் கேட்ட அம்பாள் ஸர்வரஸபரித அன்னத்தை ஞான வைராக்கிய ஐயஸித்தியர்த்தம் தந்து பிக்ஷையிட்டு, "ஓ, எதி சக்கிரவர்த்தியே, நீர் இக்காசியிலிருக்கும்வரை என் பெயர் "அன்னபூரணி" என்பது அன்வர்த்த நாமமாவதற்காக என் பிக்ஷையை நாள்தோறும் யேற்றுக் கொண்டு எனக்கு சிறப்புண்டாக்க வேணு"மென்று வேண்டிக்கொண்டாள்.

இதெல்லாம் கண்டும் கேட்டும் தெரிந்த ஜனங்களால் இவ்வத்புதம் பிரசாரமாகவே, முன்னிலும் காசி க்ஷேத்திரத்திற்கு பக்த கோடிகளின் யாத்திரை யதிகரித்தது. வழக்கப்படி க்ஷேத்திர தீர்த்தங்களில் செய்ய வேண்டியதான கர்ம்மாதிகள் முடித்து ஸர்வ அக்ஞான ஹர அபயங்கரராய் சிவ விச்வேச்வரரிலும் அன்னியரல்லாத பிரத்யக்ஷ சங்கரரையும் தர்சன வந்தன பூஜன ஸேவன பூர்வகமாய் சந்தோஷிப்பித்து தெரியவேண்டியதுகளை பிரச்னை செய்து உத்தரம் மூலமாய்த் தெரிந்து அக்ஞானம் தெளிந்து ஸுக் ஞான மேலீட்டால் ஆனந்தித்திருந்தார்கள். யாத்ரீகர்களால் உலகமெங்கும் பரவியதால் இம்மஹிமாத்புதம்

பர்த கண்டத்திலே ஆர்யாவர்த்தம் பிரஹ்மாவர்த்தம, பிரஹ்மரிஷி தேசங்களிலும் அன்னிய கண்டங்களிலும் கேட்டு, ஜனங்கள் ஸ்ரீமத் சங்கரபகவத் பூஜ்ய பாதாளை தர்சிக்க வந்து தெரியவேண்டியதுகளைத் தெரிந்துகொண்டு போனார்கள்.

இப்படியாக (9) ஒன்பதாவது வயதிலே ஆசாரியாளுடைய அவதார தபோ விக்ஞான மஹிமையால் 90,000 (தொண்ணூறாயிரம்) கிரஹஸ்தர்களும் பிரஹ்மசாரி வனிகளும் பிரஸ்தானத்ரய பாஷ்யங் கேட்டு சாந்தி செய்துகொண்டு பூர்ணமாய்த் தெளிந்தவர்களானார்கள்.

இதுகேட்ட பல தேசவாஸிகளான பண்டிதர்கள் 30,000 (முப்பதினாயிரம்) பேர்கள் லக்ஷண லக்ஷிதமாய் உபதேசம் பெற்றும் புண்ய பரிபாகம் போராததாலே, "ஸர்வம்கலு இதம் ப்ரஹ்ம" "பிரஹ்மே வேதகும் ஸர்வம்" "பிரஹ்மணோன்யம் நவித்யதே"- "நகிஞ்சன. நேஹநா நாஸ்தி கிஞ்சன" என்ற அத்வைதத்தை அனுபவித்துக் கொண்டிருக்க முடியாதவர்களாய் சம்சய சித்தர்களாகவே யிருக்கக்கண்டு ஆசார்யாள் தம்மிலும் அன்யரல்லாத விச்வேச்வரைத் தூண்ட அவர் வேத சதுஷ்டயத்தை, கர்ம்ம சுவானரூபமாக்கி, உபநிஷதாகிய பிரஹ்மாத்ம வித்யையை ஆனந்த கள்குடமாக்கி, அக்ரஜ அந்தணர் முதல் அந்தியஜர் வரையுமுள்ள நரரும் மற்ற சராசர ஜீவராசிகளும் ஏகனிலே ஏகனுடைய பற்பல மாயா தோற்றங்களே தவிர மற்றபடி பேதங்களெல்லாம் த்வைத பாவம் வேறில்லை அஸத்யம். அத்வைத பிரஹ்மம் ஸத்யம். அபேத தர்சனமே ஞானம் என்று ஸ்தாபிக்க, சிஷ்ய கோடிகளுக்கு ஸந்தேகம் நீங்கி, அவர்களானந்திக்க, விச்வேச்வரர் சிஷ்ய கோடிகளுடன், ஸ்ரீமதாசார்யாள் கங்கா ஸ்னனம் செய்து திரும்பி வரும் வழியில், சண்டாள ரூபியாய் எதிரிலே

வந்து கொண்டிருந்தார். இது கண்ட ஆசார்யாளின் சிஷ்யாள் அந்த சண்டாள ரூபியை விலகிப்போகச் சொல்ல, தேச தர்மப்படி விலகாமல் வழிமறித்து நின்ற சண்டாளன், ஆசார்யாளது சிஷ்யர்களோடு ஆசார்யாளையும் அடியில் குறித்தவாறு பிரச்னை செய்தான். அதாவது :—

1. ஸத்யமாத்மா ப்ரஹ்மைமவ, பிரஹ்மாத்மை வாத்ர நவிசிகித்ஸ்யம்.

2. த்வம் பிரஹ்மாஸி.

3. அஹம் பிரஹ்மாஸ்மி.

4. ஆவயோரந்தரம் நாஸ்தி.

5. த்வமேவாஹம். அஹமேவத்வம்.

6. கதா: கலா பஞ்சதச ப்ரதிஷ்டா தேவாச்ச ஸர்வே ப்ரதிதேவதாஸு கர்ம்மாணி விக்ஞான மயச்ச ஆத்மா பரேவ்யயே ஸர்வ ஏகீ பவந்தி.

7. ஏநேக்ஷதே ச்ருணோதீதம் ஜிக்ரதி வியாக ரோதிச ஸ்வாத்வஸ்வாது விஜாநுதிதத் பிரக்ஞான முதீரதம்.

8. சதுர்முகேந்திர தேவேஷு மனுஷ்யா சவக வாதிஷு சைதன்ய மேகம் பிரஹ்மாத: ப்ரக்ஞானம் பிரஹ்மமய்யபி.

9. பரிபூர்ண பராத்மாஸ்மின் தேஹே வித்யாதி காரிணி புத்தேஸ்ஸாக்ஷிதயா ஸ்தித்வா ஸ்புரன்னஹ மிதீர்யதே.

10. ஸ்வத: பூர்ண: பராத்மாத்ர பிரஹ்ம சப் தேன வர்ணித: அஸ்மீத்யைக்ய பராமர்ச ஸ்தேன பிரஹ்ம பவாம்யஹம்.

11. ஏகமேவாத்விதீயம் ஸன்னுமரூப விவர்ஜிதம் ஸ்ருஷ்டே: புராதுனுப்யஸ்ய தாத்ருக்தம் ததிர்யதே.

12. ச்ரோதுர் தேஹேந்திரியாதீதம் வஸ்வத்ரத்வம் பதேரிதம் ஏகதா க்ராஹ்யதே ஸீதி ததைக்ய மநுபூயதாம்.

13. ஸ்வப்ரகாசா பரோக்ஷத்வ மயமித்யுக்திதோமதும் அஹங்காராதி தேஹாந்தர ப்ரத்யகாத்மேதிகீயதே.

14. ஸர்வபூதாந்தரஸ்த்தாய நித்ய முக்த சிதாத்மனே ப்ரத்யக் சைதன்ய ரூபாய மஹ்யமேவ நமோ நம:

15. த்வம் வாஹமஸமி பகவோ தேவதேஹம் த்வமஸ்யஹி துப்யம் மஹ்ய மனந்தாய மஹ்யம் துப்யம் சிதாத்மனே.

16. நமோ மஹ்யம் பரேசாய நமஸ்துப்யம் சிவாயச கிங்கரோமி க்வ கச்சாமி கிம் க்ருஹ்ணாமி த்யஜாமிகிம்.

17. யன்ம யாபூரிதம் விச்வம் மஹாகல்பாம் புணயதா·நந்தஸ்ஸங்க பஹிஸ்ஸங்க மாத்ம ஸங்கச்யஸ்த்யஜேத்.

18. அஷ்டாங்கஞ்ச சதுஷ்பாதம் த்ரிஸ்தானம் பஞ்சதைவதம் ஓங்காரம்யோ நஜாநாதி பிராஹ்மணே ந வேத்துஸ:

19. ஓங்காரமே வேதகும் ஸர்வம்.

20. சிவபீஜ மிதகும் ஸர்வம் விஷ்ணு யோநி ஸமுத்பவம் ஸ்வஜாதி யன்யஜாதீனும் வர்ணணம் கிம் பிரயோஜனம்.

21. பிரஹ்ம தேஹத்வமா பன்னம் வாரிபுத் புததாமிவ யதைவ ம்ருண்மய: கும்ப ஸ்தத்வத்தே ஹோபி சின்மய:

22. எத்ரத்வஸ்ய ஸர்வமாத்மைவாபூத் தத் கேன கம்பஸ்யேத்.

23. யஸ்மின்ஸர்வம் யதஸ்ஸர்வம் யஸ்ஸர்வம் ஸர்வதச்சய: யச்சஸர்வம் யோநித்யம் தஸ்மை ஸர் வாத்மனே நம:

24. அத்ரபிதா அபிதா பவதி வேதா அவேதா: என்பதாய் இன்னும் பல சுருதி வாக்யங்களைச் சொல்லி அத்வைதாசார்யாள் மற்றும் சிஷ்யாளாகிய நீங்கள் அபேத தர்சனுனுபவ மில்லாமலும், எல்லோருக்கும் அத்வைதானுபவ முண்டாகாமலும் த்வைதமே யவலம்பித்தும் போதித்தும், வருகிறீர்கள் போலும், என்று நிந்தை செய்தான். சிஷ்யர்கள் கேட்டுப் பிரமைகொண்டு நமது ஆசார்யாள் நமக்கு போதித்த அத்வைதப் பிரபல சுருதி வாக்யங்களை இந்த சண்டாளனுங்கூட வல்லவோ அனுபவமாகும் படி சொல்லி நம்மையெல்லாம் ஸம்சயத்திலிருந்து நிவர்த்தித்தும் நம்மால் பதில் சொல்ல முடியாத நிலமையில் நிருத்திய இவன், நம்மை ஸத்ப்ராஹ்மணு ளல்லவென்றுங்கூட நிந்திக்கிறுன். இதற்கு நமதாசார் யாள்தான் ஸமர்த்தராய் விடைகூற வேணு"மென்று எல்லாரும் ஆசார்யாளைப் பிரார்த்திக்கவே, ஸமயம் நன்ருய் வாய்ந்ததென்று உடனே ஆசார்ய பகவத் பூஜ்ய பாதாப்ஜாள் மறுமொழி கூறியதாவது :—

ஹே, சண்டாள ரூபதாரியாகிய விச்வேச்வரனே! நீ கூறிய சுருதி வாக்யங்களை முன்னமே யறிந்துணர்ந் தனுபவிக்கும் யான் இந்த சிஷ்யவிப்ராளுக்குங் கூடவே சொல்லி யனுபவப்படுத்தி வருகிறேன். மற் றும் யான் அவைகளையும் மற்றும் வேறு ப்ரபல சுருதி

வாக்யானுபவங்களை ஸர்வகால ஸர்வாவஸ்தைகளி லேயும் பிரக்ஞானம் பிரஹ்மமாகிய சங்கரன் அக் ஞானனுகிவிடவில்லை. நான் பிராஹ்மணன், பிரஹ் மம், பிரஹ்மாத்மா வென்பதும் மறந்தவனல்ல.

நீயோ! வாயில் சொல்வது சுருதிப் பிரஹ்ம வாக்யம், நடவடிக்கையில், அக்ஞான சண்டாள கிருத்யமுள்ளவனுய், ஸத்ய தர்ம விரோதியாய், ஸ்வ ரூபம்விட்டு, அன்ய வேஷதாரியாய்த் தோன்றினை, நீ சிவம் என்பதும், என்னிலும் அன்னியனல்ல வென் பதும், ஸர்வனும் ஸர்வக்ஞனும் பிரக்ஞானகனனு மான நானறிவேன். சிவனுக்கு மங்கள ரூபமிருக்க அமங்கள சண்டாள ரூபந்தரித்தும் மாயையுடன்கூடி. மாயை செய்ததும் உன்னுடைய ஸ்வரூபம் மறந்தே யல்லவா?

நினைவும் மறதியுமுள்ளவனுகி ஸ்திதப்ரக்ஞனல்ல வானுய், நீ சொன்ன சுருதிப்படி உன் நிஜமங்கள ரூபத்தால் மாயையை போக்கி தர்சனமளிப்பாயேல் நீ சொன்னதும் செய்ததும் யுக்தமென்று நம்பி ஸ்வதர்மிகளாகிய இந்த விப்ரர்கள், அனுஷ்டித்தனுப விப்பார்கள். இவர்கள் உன் மாயா ரூபங்கண்டு வெறுத்து சைலூஷனைப் போன்றவனென்று விலகிப் போகச் சொன்னது. ஆர்ஷேய தர்மமானுஷ்டானங் களுக்கொத்த நியாயம் தகும். சிவ ஸ்வரூபனுகிய நீ இவர்களை நம்பச் செய்" என்றார். அந்த சண்டாள தேஹமும் சுவானமும் கள்குடமும் ஏகதேஜோ ராசி யாய் மாறி நிஜரூபியாகிய விச்வேச்வரராய் தர்சனம் தந்து சிஷ்யாளை நோக்கி, "நானே இவர்" "இவரே நான்" நாங்களிருவரல்ல ஒருவரே இரண்டில்லவே யில்லை என்று சொல்லி மறுபடியும் காசி விச்வநாதர், ஆசார்யாளுடைய பூஜைப் பெட்டியிலேயிருந்த சந் திரமௌலீச்வர லிங்கத்திலே ப்ரவேசித்து ஐக்ய மானதை ப்ரத்யக்ஷமாய்க் கண்டு, சிஷ்யர்கள் சந் தேஹம்விட்டு அத்வைதப் பிரஹ்மானந்திகளானார்கள்.

காசித் தெருவிலே நடந்த இவ்வத்புத ஸம்பவ சரித்திரம் கேட்டு காசிராஜன் பகவத்பாதாசார்யாளிடம் சென்று தர்சித்து பூஜித்து நமஸ்கரித்து கைகட்டி வாய் பொத்திக்கொண்டு, "பிரபோ, லோக குரு நாதா அடியேனை யாண்டருள்புரியவேணும், பாமரன் யான், அபராதங்கள் க்ஷமிக்கவேணும் இப்போது இலமாகிக்கொண்டிருக்கிற சாதுர் வர்ணாச்ரமங்களையும் உத்தாரணஞ் செய்யவேணும் பிரபோ" என்று வேண்டிக்கொண்டான். இன்னும் ஸமஸ்த பந்து மித்ர அரசர்களுக்குந்தெரிவித்து அவர்களைக் காசிக்கு வரச்செய்து ஆசார்யாளை தர்சனம் செய்வித்து ஸ்வதர்ம நிரதனானான்.

காசிக்கு வந்து தர்சித்த அரசர்களெல்லாம் ஆசார்யாளைப் பிரார்த்தித்துத் தங்கள் ராஜ்யங்களிலே திருவடி சாத்தி பிரஜைகளை உத்தாரம் செய்தருள வேண்டுமெனப் பிரார்த்திக்க, அப்படியே யாகட்டுமென்று ஆசார்யாள் வாக்களிக்கக் கேட்டு சந்தோஷமாய்த் தங்கள், தங்கள், ராஜதானிகளுக்குச்சென்று ஆசார்யாள் வரவை ஏற்க முன்னதாக சகல ஏற்பாடுகளும் செய்துகொண்டு காத்திருந்தார்கள்.

ஆசார்யாள் ஸ்வானுஷ்டானாதிகள் ஸகாலத்திலே முடித்துக்கொண்டு வழக்கப்படி ஒரு நாள் விச்வேச்வராதி தேவதர்சனத்துக்குப் போனபோது பிந்து மாதவ ராலயத்திலே அசரீரி வாக்குண்டாயிற்று பிந்து மாதவராகிய யான் பதரியிலே வியாஸ ரூபியாய் சொன்னபடி "சநந்தன் பெயரால் நானே உமக்கு சிஷ்யனாக வருவேனென்று சொல்லக் கேட்டார். சிஷ்யாளும் ஆச்சர்யமடைந்தனர். மறுநாள் விஷ்ணு அம்சாவதாரரான "ஸநந்தனர்" எனப் பெயருள்ள ஸர்வ லக்ஷணங்களுடன் கூடிய பிரஹ்மசாரி யொருவர், பக்தி வினயத்துடன் ஆசார்யாள் ஸன்னிதியில் சேர்ந்து நான் சிதம்பர ஸ்தலத்திலிருந்து ஜன்ம ஸாபல்யத்துக்காக விரக்தனாய் ஸ்ரீ சைலம் அஹிபிலத்

திலே தவமும் யோகமும் அப்யஸித்தேன். அங்கு ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்ஹர் பிரஸன்னமாகி, "அப்பா ஸநந்தனு, நீ, இங்கு செய்த தவம் யோகங்களின் பலன் அனுபவிக்க காலம் ஸம்பிராப்தமாயிருக்கிறது. நீயே நான், நானே நீ, நம்மையும் லோகத்தையும் உத்தாரஞ் செய்ய கைலாஸநாதரும் இந்த ஸ்ரீ சைல மல்லிகார் ஜுனருமான சிவன் சங்கரர், யவதரித்து துரீயாச்ரமி யாய் காசியிலே ஸகலருக்கும் பிரஹ்மவித்யை உப தேசித்துக்கொண்டிருக்கிறார். நீ அங்கு சென்று துரீயாச்ரமம் பெற்றுக்கொண்டு அவரை சேவித்து அபீஷ்டஸித்தியை யடைவாயாக. நம்மிருவருக்கு மபேதமாதலால் நீ நினைத்தபோதெல்லாம் உன்னுள் ளேயே நானிருந்து நீ நினைப்பதை நினைத்தபடியே செய்கிறேன். ஆலஸ்யம் செய்யாமல் உடனே காசிக் குப் புறப்படு" வென்றும் ஆக்யாபித்ததாலே நான் இந்த சன்னிதியைச் சேர்ந்தேன். என்தனு தன மனங்கள் தங்கள் திருவடி தொண்டுக்கு அர்ப்பணஞ் செய்தேன். ஆண்டவரே, யடிமையை யாண்டு கொள்ள சர்வ சுதந்திரமுள்ளவராதலால், அக்ஞன் அதிகமாய் விண்ணப்பித்துக்கொள்ள, ஸர்வஞ்ய, ஸர்வ, அஸர்வ, அதீத சிவத்தின் முன்பாக யாது மில்லை. பிரபோ" வென்று சொல்லி தீர்க்கமாய் அஷ்டாங்க விதிப்படி தண்டம் ஸமர்ப்பித்தார்.

இப்படி தண்டம் ஸமர்ப்பித்த ஸனந்தருடைய முகதேஜ காந்தியும், மித பாஷண அர்த்த புஷ்டி யுடன் கூடிய மாதுர்ய வாக்யத்தையும் கண்டு, முன் வியாஸாசார்யாளாலும் பிந்துமாதவ ராலயத்திலுங் கேட்ட ஸநந்தனரே யிவர், என்று தமது ஞான திருஷ்டியாலும் அறிந்த ஆசார்ய சங்கரபகவான், ஸமஸ்த வித்யார்த்திகளான பண்டிதர்களுடைய முகம் பார்க்க அவர்களெல்லாம் ஏகமனதாய் இச் சனந்தனரை அனுக்ரஹித்து அருள்புரிய வேணு மென்று வேண்டிக்கொண்டார்கள். கேட்டு சங்

தோஷ சித்தரான ஆசார்யாள் அச்சனந்தனருக்கு அபயம் தந்து கிரமப்படி பூர்வ பாகமாய் செய்விக்க வேண்டிய ஸம்ஸ்காரங்களைச் செய்வித்து, உத்தர பாகமாகிய கிரம ஸன்யாஸங் கொடுத்து காஷாய, தண்ட, கமண்டலு, [illegible], கௌபீனம், ஆச்சாதனம், ஆஸனம், பாதுகாக்களும் பூஜைக்குக் குரு பராம்பர்ய மாய் பூஜித்து லப்தமான சந்திர மௌலீச்வரலிங்கம் வகைரு தேவதார்ச்சிகளும் கொடுத்து, லோகாசார்ய பட்டாபிஷேகமுஞ் செய்து, விச்வரூபர், ஸர்வேஸ் வரர், யெனப் பல பெயருமிட்டார்.

ஸ்ரீமத் ஸனந்தனர் முதலியவாள் அவதார விவரம்:—

2. ஸ்ரீ வைகுண்டநாதராகிய மஹாவிஷ்ணு பகவான் ஸ்வஸ்தானத்திலிருந்து தமது அம்சத்தை சூர்ய மண்டலம் மூல்யமாய், பூவுலகிலே தில்லை கோவிந்த ராஜ விக்ரஹத்தில் தங்கி, அங்கிருந்து அந்தத் தில்லை கோவிந்தராஜப் பெருமாளின் அர்ச்சகர் வைதீகஸ் மார்த்தப் பிராஹ்மணர் (வாத்யமவர்) விஷ்ணு சர்ம தீக்ஷிதர் பத்னி ஸ்ரீ லக்ஷ்மிதேவியின் கர்ப்பத்திலே பாய்ந்து, பூர்ணமான அங்காங்கியாய் ஸனந்தனர் என்ற பெயரால் அவதரித்து, ஸர்வ வித்யாவானுய் விரக்தனுய் ஸ்வதேசம் விட்டு (ஸ்ரீ சைலமென்றும்) சேஷாசலமென்றும் பெயருள்ள பர்வதத்தின் முக்த் துவாரமாகிய அஹிபிலம் (அஹி-பாம்பு, பிலம் துவாரம் இக்காலத்தில் அஹோபிலமென்ற) குகையில் தவம் யோகம் புரிந்து ஸ்ரீ பகவான் நரஸிம்மதேவரது தர்சன, ஸ்பர்சன, உபதேச ஞானம் பெற்று, ஸர்வ ஸித்தி கூடியவராய்* சத்குருவைத் தேடிக்கொண்டு காசிக்குச் சென்று அங்கு பகவான் சங்கரரை தர்சித்து குருவாகவு மடைந்தார். *இச்சாரூபம் தரிக்க வல்லவராய் சுத்த மோக்ஷத்தையே விரும்பியவராய் இவர்தான் (விஷ்ணு ஸஹஸ்ரநாமம் 1, 21, 96, 235, 286) விச்வரூபர், ப்ருத்வீதரர், ஸர்வேஸ்வரர், நர

ஸிம்ஹர், பத்மபாதர், யென்று பல பெயர்கள் பெற்று ஆசார்யாளின் பிரதம சிஷ்யராய் ஆசார்யாளிட மார்க்கானுயாயிருந்து சிருங்கசிரியிலே ஸ்ரீ மதாசார் யாளுடைய ஸ்வயம ஸர்வக்ஞ வித்யோங்கார பீடாதி பராய் பூமண்டலாசார்யாராயிருந்தவர்.

3. ஸ்ரீமத் சத்யலோகநாதரான பிரஹ்மதேவர்:- கௌடதேசமாகிய மகத (தேசத்திலே) "ராஜ்யத் திலே" ரேவாநதி சமீபமுள்ள மஹிஷ்மதி பட்டணத் திலே, ஸாரஸ்வதப் பிராஹ்மணரான சுக்ல யஜுர் வேதி காஸ்யப கோத்ர கண்வ ஸூத்ரி விச்வ பட்டா ரகர் குமாரரான மணடனமிச்ரராக அவதரித்து, தனது வேத சாஸ்திர வித்யைக் கரசியான வாக் தேவியை (அதாவது பரமசிவனுரிட அம்சரூபிணி ஸரஸ்வதி) ஸரஸவாணி தேவியாக அவதரிக்க விவா ஹம் செய்துகொண்டு குமாரக் கடவுளின் அவதார குமரில பட்டரால் வித்யைகள் கற்றுக்கொண்டு, பிரக்ஞியாய் பகவான் சங்கரரின் அவதார வரவை யெதிர்நோக்கியிருந்தார். இவருக்குத்தான் இனிமேல் சுரேச்வராசார்யாள்யென்ற பெயராகப் போகிறது.

4. பகவான் சிவகுமாரர் சுப்பிரமணியர் :—காசி க்ஷேத்திரத்தில், சிவநாதபட்டாரகர், யென்ற வேதிய ருக்கும் விசாலாக்ஷி தேவியாருக்கும், குமாரரா யவ தரித்து அவைதீக அநீச்வரவாதிகளான பௌத்த ஜைன, சார்வாகர்களை, வாதில் வென்று நிக்ரஹித்து, பிரஹ்மாவதாரரான மண்டனமிச்ரருக்கு குருவாகி கலைகளெல்லாம் கற்பித்துத் தனது சகோதரி ஸரஸ வாணியை யவருக்கு விவாஹம் செய்து, தன் யோக மஹிமையால் தமது சரீரத்திலிருந்து யோகாக்னியைக் கிளப்பி தேஹத்தை தஹிக்க யோஜித்துக் கொண் டிருக்கையிலே, அசரீரிவாக்யப்படி பகவான் சங் கரரை பிரத்யக்ஷமாய் தர்சிக்க சிருங்ககரிக்கு வந்து ஞானோபதேசங் கொடுக்கப் பெற்று, கர்ம, தர்ம,

பாவனை நீங்கி, சுத்த ஞானியாய் ஸ்வஸ்தானமாகிய குமாராத்ரி சேர்ந்தார்.

5. மற்ற தேவதைகளில்(1) வாயுவடதேசத்திலே ஹஸ்தாமலகரென்றும், (2) அக்னி தோடகராயும், (3) வீரபத்திரர் கணபதியுங்கூடி உதங்கராயும் (4) நந்தி ஆனந்தகிரியாயும் (5) வருணன் சித்சுகாசார்யா ராயும், (6) எமதர்மர் காலானலராயும் இப்படியே பலவிடங்களில் பல தேவதைகள் அவதாரமெடுத்து பகவான் சங்கரராய் வருவார். அவருக்கு சிஷ்யர் களாய் கடமை செய்து உயர்நலம்பெற உலகினருக்கு அருளவேணுமென்று காத்திருந்தனர். தேவேந் திரன் யுதிஷ்டிரர் பேரனை, பாண்டவ வம்ஸத்திலே, சுதன்வ சக்ரவர்த்தியா யவதரித்தார்.

இவ்விதமாக அவதாரங்களை யெடுத்த தேவர்க ளெல்லாம்நரராகப்பிறந்துங்கூட பூர்வஞானம் மறவா மல் வேதசாஸ்திர மந்திர தந்திர யோகக் கிரிய ஆசார சீலர்களாய் தாமெல்லா மனுஷ்டித்து வந்ததோடு, பல ருக்கும் போதித்து, போதகாசார்யர்களாகவும், பிரகா சித்தார்கள்.

முதல் சிஷ்யரான ஸ்ரீபத்மபாதர் (ஸனந்தனர்) விஷ்ணுவாதலால், சஹஸ்ரநாமங்களுக்கு பாஷ்யஞ் செய்த ஆசார்யாள் ப்ரதம நாமமாகிய "விச்வம்" என்பதையும், "காவிஷ்ணுப்ரதி வீபதே" பூதேவிக் குப் பதியே விஷ்ணுவாதலால் "விச்வரூபாசார்யார், ப்ரதீவீதராசார்யார்" என்றும், பூமண்டலாசார்யாள், சர்வேஸ்வரர் என்றும் அந்த ஸனந்தனருக்குப் பெய ரிட்டார். பிறகு கங்கையைத் தாண்டும்போது ஸனந்தனருடைய திருவடிகளுக்கு தாங்கலாக தாம ரைப் புஷ்பங்களை கங்கை (பூர்வம் அந்த விஷ்ணு வாகிய ஸனந்தனரது பாதத்திலிருந்து உத்பவித்தவ ளானதினாலே பயந்தவளாய்) நிர்மாணஞ் செய்ததால்

இம்மஹிமையால் பெற்றது பத்மபாதரென்றும் பெயர். ஆதலாலே 1. விச்வரூபர் 2. ப்ருத்வீதரர் 3. பூமண்டலாசார்யாள் 4. பத்மபாதர் என்பன வெல்லாமும் இந்த ஸனந்தன சர்வேச்வரரது பெயர் களே யன்றி வேறு யாருக்குமில்லை. இருக்கவுமில்லை. ஸ்ரீமதாசார்யாளுடைய சிரேஷ்ட ஜேஷ்ட சிஷ்யோத் தம், அக்ரகண்ய, நாராயணாம்ச சமாதலாலே, ஆசார் யாள் இந்த பத்மபாதரை தமது ஸர்வக்ஞ வித்யோங் கார பீடத்திலிருத்தி, ஸர்வாதிஷ்டான பூமண்டலா சார்யா சர்வேச்வரராளாய் பட்டாபிஷேகம் செய்து, மூன்ருவர்த்தி தாம் ரசித்த் பாஷ்யமும் ரஹஸ்யமும் சொல்லி சாந்தியடைய வைத்தார்.

இந்த வர்த்தமானம் மற்ற சிஷ்யாளாலும் மஹா ஜனங்களாலும் கேட்டறிந்த தேச தேசஜனங்கள் ஸ்ரீபத்மபாதாளிடம் வந்து சாஸ்திர வித்யை கேட்டு தெளிந்து பக்தி செய்தவரும் மற்றும், பொருமை யால் தர்க்கித்து தோற்றுப்போய் சரண் புகுந்தவரும், சேவித்து அனுக்ரஹம் பெற்றுப் போனவரும், கணக் கிட முடியாத சங்கியையராவர்.

இப்படி ஜகத் ப்ரக்தியாய் காசி க்ஷேத்திரத்திலே ஆசார்யாள் தமது 9 முதல் 12 வயது வரையிலும் சிஷ்யர் ஸ்ரீ பத்மபாதருடன் கூடியிருக்கும்போது, அயல்தேச அரசர்களும பண்டித மஹா ஜனங்களும் வந்து தங்கள் தேசத்துக்கு ஆசார்யாள் விஜயம் செய் தனுக்ரஹித்து ரக்ஷிக்கவேணுமாய் பிரார்த்திக்க, பிரார்த்தனைக்கிணங்கிய மனத்தராய் இவ்விஷயம் காசிராஜனுக்கும் பகவதி அன்னபூர்ணேச்வரி, விச்வ னுதருக்கும் தெரிவிக்கவே, அன்னபூர்ணேச்வரி தேவி யும் விச்வனுதரும் நீர் செலலுமிடத்திலே யெல்லாம், சங்கரரே நாங்களே பிக்ஷையிடுகிறேமென்றும் காசி ராஜா தான் கூடவே பரிவாரத்துடன் தொடர்ந்து வந்து சேவை செய்கிறேனென்றுஞ் சொல்லி, ஆசார்

யாளுடன் சிஷ்ய கோடிகள் போலவே தொடர்ந்து சென்று சேவை செய்தார்கள். இது கண்ட மற்ற அரசர்களும சதுர்வர்ண ஆச்ரமிகளும் "யத்யதாசரதி சிரேஷ்டோதத்த தேவேதரோஜனு: ஸயத்ப்ரமாணம் குருதே லோகஸ்ததநுவர்த்ததே" யென்று தெறிந்து பக்தி விநய பூர்வகம் அழைத்துப்போய் சேவை செய்ய, அதனல் ஆசார்யாள் தமது மஹா தேவசக்தி மஹிமையால் பூமண்டலமெல்லாஞ் சஞ்சரித்து அவை திகமும் ஸ்மார்த்த விரோதங்களாகியதும் மனுஷ்ய க்ருதங்களுமாகிய 28 தந்திரானுஸாரமாகிய சைவம், 64 தந்திரானுஸார சாக்தம், பாஞ்சராத்ரவைகான ஸாகம், வைஷ்ணவம், ஸௌராகம், ஆதித்யமதம், கணபத்யாகம மதம், காபாலிகாகம, பைரவமதம், ஸரஸ்வதி மதம், குமார மதம், சதுர்முக ப்ரஹ்ம மதம், விசிஷ்டாத்வைத நீலகண்ட மதம், துர்க்கா மதம், பாசுபத மதம், நிரீச்வர ஸாங்கிய மதம், குபேர மதம், இந்திர மதம், சேஷ மதம், வாயு மதம், விருஷப மதம், ஹனுமத் மதம், பாதஞ்சல மதம், தன் வந்திரீதம், கருட மதம், இரேணுகா மதம், நவக்கிரஹ மதம், கால்ஞான ஜோதி மதம், மல்லாரி மதம், ஜ்வாலாமுகி மதம், நரஸிம்ஹ மதம், ஸ்ரீராம மதம், கிருஷ்ண மதம். காயஸ்த்த மதம், கராடி மதம், வாமாசார மதம், காணுதர மதம், கௌதம மதம், கபில மதம், பௌத்த மதம், ஜைன மதம், ஜைமினி மதம் முதலிய 86 பிரபல மதங்களையும், வேறு சில சிறு மதங்களாகிய 248 மதங்களையும் ஆக 334 மதங்களும் அவை திகங்களும் அதர்ம மதங்களாயிருந்தவைகளை கண்டித்து, அம்மதத்தார்களை யெல்லாம் ஆஸ்திக மதங்களாகிய வேத சாஸ்திர விஹித (1) வைதீக சைவம் (2) வைதீக வைஷ்ணவம், (3) வைதீக சாக்தம, (4) வைதீக காணபத்யம், (5) வைதீக ஸௌரம், (6) வைதீக காபாலீக மதங்கள் சிருஷ்டித்துக் கொடுத்து விதாயகங்களும் செய்து, இச்சண்மத ஸ்தாபனசார்யாளாகிய பகவான் சங்கரர், மேல்குறித்த

334 வித கண்டிக்கலான மதங்களிலிருந்து தவிர்த்து வைதீக ஷண்மதஸ்தர்களாக்கி, போதித்து அனுஷ்டிக்கச் செய்து, சித்த சுத்தியான பின் இவ்வாறு மதங்களுக்கும் அதீதமாயும் ஆத்மாவாயு மிருக்கிற சுத்த வேத வேதாந்தப் பிரதிபாத்ய பிரஹ்மாத்வைத மதானுயாயிகளாய் ஜீவன் முக்தியடைந்து பூர்ண பிரஹ்மானுபவிகளாக போதித்து காஸ்மீரத்திலிருந்த சாரதா தேவியின் ஸர்வக்ஞ வித்யோங்கார பீடம், சமஸ்த தேச இராஜாக்கள், பண்டிதர்கள், பிரார்த்தனுஸாரம் ஸ்ரீபத்ம பாதருடைய ஹஸ்தம் பிடித்துக்கொண்டு 101 (நூற்றியொரு) படித்துறையில் 100 (நூறு)வதிலே பக்தியாய் பத்மபாதர் நின்று, ஆசார்யாளை 101-வது ஸர்வக்ஞ வித்யோங்காராஸனரோஹணம் செய்விக்க, அங்கு நிறைந்திருந்த ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்ய சிவாவதார மூர்த்தி ஸர்வஜித் பகவான் சங்கர ஜகத் குருவின் சிஷ்யாளான எதீச்வரர்களாகிய

1. ஹஸ்தாமலகாசார்ய
2. தோடகாசார்ய
3. மண்டனமிச்ர சுரேச்வராசார்ய
4. சித்சுகாசார்ய
5. ஸமித்பாணியாசார்ய
6. விஷ்ணுகுப்தாசார்ய
7. சுத்த கீர்த்தியாசார்ய
8. பானுமாரீசியாசார்ய
9. கிருஷ்ணதர்சனாசார்ய
10. புத்திவிருத்தியாசார்ய
11. விரிஞ்சிபாதாசார்ய
12. சுத்தாநந்தகிரியாசார்ய
13. முனீஸ்வராசார்ய

14. திம்மாணுசார்ய
15. பரமதகாலானலாசார்ய
16. இலக்ஷ்மணுசார்ய
17. திவாகராசார்ய
18. திரிபுரகுமாராசார்ய
19. கிரிஜாகுமாராசார்ய
20. ஆனந்தகிரியாசார்ய
21. வடுகனுதாசார்ய
22. திருடபக்தாசார்ய
23. பாரதீவம்சாசார்யா

மற்றும் வானப்ரஸ்தாச்ரமிகள், கிரஹஸ்தாள், பிரஹ்மசாரிகளும், பாரதகண்ட மாண்டுவந்த எல்லா தேச அரசர்களும் க்ஷத்ரியாளும், வைசியர்களும், பல பல விருத்தியும் ஆசார பேதமுமுள்ள சதுர்த்த வர்ணி களான சூத்திர மஹா ஜனங்களும், மற்றும் அன்ய தேச பண்டிதர்களும் தேவர்களும், மஹரிஷிகளும் ஜய ஜயத்வனிகளோடு ஆவலுடன் அனுமதி கொடுக்க, ஸ்ரீபத்ம பாதர் தமது இருகைகளால் ஜகத் குரு பரமசிவ மஹாதேவ சங்கர பகவத் பூஜ்யபாதாப் ஜாளின் பாதாப்ஜங்களை வேத மந்திரங்களால் அர்ச் சித்து சிரஸா வணங்கி ஆசார்யாளின் திருமேனியை தூக்கி ஸபாஸந்தாள் வேண்டுகோள்படி அந்த 101 (நூற்றி ஓராவது)வது (சோபானம்) படியாகிய ஸ்ரீ ஸர்வக்ஞ வித்யோங்கார பீடத்திலே யமர்த்தி, ஹரஹர சம்போ மஹா தேவா, சிவசங்கர ஸர்வாத்ம அபயங்கர ஜகதீசா, ஆனந்த கருணுவருணுலய பர மேசா, வென்று பிரார்த்தித்து பிரதக்ஷணஞ்செய்து நமஸ்கரித்து கைகூப்பி வினயத்துடன் பகவன் "பக்தி நிஷ்டாம்மே ப்ரயச்ச த்வதபின்னம் மாம் பரி பாலய கிருபாலய" வென்று துதிக்கவே, ஸபாஸந்தா ளெல்லாம் கண்டு கேட்டபடியே யெல்லாரும் நமஸ்

கரித்து பிரார்த்திக்க, அவர்கள் பிரார்த்தனைக்கு மகிழ்ந்து ஆசார்யாள் எல்லாருக்கும் ஸ்ரீ தக்ஷிண மூர்த்தி தேவரூபராய்த் தோன்றி அபயந் தந்து எல்லாரும் ப்ரௌத ஸ்மார்த்த விஹித தர்ம கர்மங்களாகிய தங்கள் தங்கள் வர்ண ஆச்ரமங்களை யனுஷ்டிக்க வேண்டுமென்றும், தவறலாகாதென்றும், திட்டம் செய்து, அவர்களெல்லாரும் பிரார்த்தித்துக்கொண்டபடி, தமது நிஜவிச்வ விச்வாதீத தர்சனம் கொடுக்கத் தமது சரீரத்திலிருந்து, ஜெகதம்பிகா தேவியை வெளிப்படுத்த அவ்வம்பிகையின் திவ்ய திருமேனியிலிருந்து பார்வதி பரமேச்வரர் லக்ஷ்மி நாராயணர் வாணி ஹிரண்ய கர்ப்பராகிய சதுர்முக பிரஹ்மா, கணபதி, குமாரக்கடவுள், ஆதித்யர், நந்திகேச்வரர், இந்திர, சந்திர, வருண, வாயு, அக்னி, குபேராதி ஸர்வ தேவர்கள், சப்தரிஷிகள், சபையிலிருந்த எதி முதலியவர்களுக்கு சமான எதிகள், வனஸ்தர், கிருஹஸ்தர், பிரஹ்மசாரிகள். அரசர், க்ஷத்திரியர், வைசியர் சூத்திரர் முதலிய சர்வ நரரூப ப்ரதிரூபமும் பசு மிருக, பக்ஷி, பூசர, ஜலசர கேசராதி ஸ்தாவர ஜங்கம ஸர்வமுந் தோன்றவைத்து ஸமஸ்தரும், தம்மையும், தமதுருவங்களையும், அச்சங்கர மஹாதேவ குருவுருவத்திலும் அச்சங்கர குரு மஹாதேவருடைய ஆத்ம ரூபத்தை தமதாத்ம ரூபமாயும் அகம் புறங்களும் ஞானதிருஷ்டியால் தர்சித்து, தம்மையும், தமது நிலைமையும் மறந்து, ஸ்வஸ்ரூபமாகிய அத்வய பிரஹ்மாத்மானுபவம் ஏககால முகூர்த்தத்தில், அடைந்தானந்திக்க பின் ப்ரக்ஞானகனரும் ஸ்திதப்ரஞ்யருமாகிய சங்கர ஆசார்ய தக்ஷிணாமூர்த்தி பகவானருளாலே முன்போல் ஸ்தூல, சூக்ஷ்ம, காரண, சரீராபிமானமுண்டாகி, எல்லாம் மறைந்து, ஆசார்யாளில் லயமாகிவிட, பூர்வம்போல சபை, தோன்ற வாக்கு மனங்களுக்கெட்டாத ஆனந்தங்கொண்ட சபாஸந்தாள் அந்த ஸர்வக்ஞ வித்யோங்கார பீடாரூடராயிருந்த அமானுஷ அத்புத சர்யாதீச்வர பகவத்

பாதாப்ஜரை சத்ய அத்வைத ப்ரஹ்மமாகவும் மற்ற வெல்லாமும் த்வைத மாயையாகவும் நம்பினவர்களாய் "மாயாமத்ர மிதம் த்வைதம், அத்வைதம் பரமார்த்தத: நதேவோ சங்கராத்பரம்" யென்று பயபக்தி மேலீட்டால் யாதும் பிரார்த்திக்கவும் கேட்கவுங்கூட தோன்றாமல் மெய்மறந்து நிற்கக்கண்ட சிஷ்ய கோடிகளுடைய பயம் சந்தேகம் தீர்த்து ஸ்ரீமதாசார்யாள் ஸர்வக்ஞபீட ஸரஸ்வதியை தம்முடன் வந்து தாம் வாஸம்செய்ய நிச்சயித்திருக்கும் விபாண்டக ரிஷியாச்ரமம் துங்கபத்திராநதி தீரத்தில் வஸித்து பீடாதீச்வரியாய் பீடம் சிறப்பிக்க வேணுமென்று கோரி, சூக்ஷ்மமாய் ஆகர்ஷித்து அழைத்து வந்து தமது சிஷ்யர் பத்மபாதருடைய பூஜா ஸ்ரீசக்கரத்திலே ஆவாஹணம்செய்து பூஜித்து வரும்படி அப்பத்மபாதருக்கு ஆக்ஞைசெய்ய அப்படியே அவர் பூஜித்து வந்தார்.

ஸ்ரீ ஸர்வக்ஞ வித்யோங்கார பீடாதிபராயிருந்த ஸ்ரீமதாசார்ய பகவானே அங்கு நிறைந்திருந்த பக்த கோடிகள் வர்ண ஆச்ரம தர்மாதிகளை நாங்கள் அனுஷ்டிக்க விவரமாய் சங்க்ஷேபமாய் போதிக்க வேண்டுமென்று பிரார்த்திக்க கருணாஸாகரரான ஸ்ரீமத் ஜகத்குரு மஹாதேவ சங்கரர் களிகூர்ந்து அடியிற்குறித்தவாறு அப்படியே போதித்தார். அதாவது :—

## ப்ராஹ்மணர்.

I பிரஹ்மசர்யம் :—

1. காயத்ர 2. பிரஹ்ம 3. பிராஜாபத்ய 4. நைஷ்டிக. என நான்கு விதமாகும்.

அவர்களின் விருத்தி :—(1) பிராத ஸ்னனம், ஸந்தியாவந்தனம், ஜபம், தர்ப்பணம், பிரஹ்ம எக்ஞம், வேதவிருத்தம், ஸமித்ஹோமம் பிக்ஷாடனம்,

சிகா, கௌபீனம், மேகலா, உபவீதம், அஜினம், தண்டதாரணம், ஆசார்யாபி வந்தனம், மௌனம், சுசீலம், தேவ, பிராஹ்மண, வ்ருத்தஸேவா, குரு ஸேவா முதலியன.

II கிரஹஸ்தம் :—4 விதம்.

1. வார்த்தாக விருத்தி 2. சுவாதீன விருத்தி 3. யாயாவர விருத்தி. 4. கோர சன்யாசிகா.

விருத்தி :—திருஷவண ஸ்ஞனம், ஸந்தியாவந்தனம், ஜபம், தர்ப்பணம், ப்ரஹ்மயக்ஞும், தேவயக்ஞும், பிதுர்யக்ஞும், பூதயக்ஞும், மனுஷ்ய யக்ஞாதி கர்மானுஷ்டானம், ஸ்தாலீபாக, ஆக்ரேண, இஷ்டி, பிண்ட பித்ருயக்ஞ, மாசஸ்ரார்த்த, அஷ்டகாஸ்ரார்த்த, ஸப்த பாக யக்ஞ, ஊர்த்துவஹா, அக்ஞம்யேய, அக்னி ஹோத்ர, தர்சபூர்ணமாஸ, சாதுர்மாஸ்ய, பசுபந்த, ஸௌத்ராமணி, ஸப்தஹவிர்யக்ஞ, அக்னிஷ்டோம, அத்யக்நிஷ்டோம, உக்த்திய, ஷோடஸி, வாஜபேய, அதிராத்ர, ஆப் தோர்யாம, சப்த மஹாயக்ஞ, யஜன யாஜன, அதயையன, அத்யாபன, தான, பிரதிக்ரஹாதி ஷட்கர்ம நிருதாஹா, பரமேச்வரார் சனபரா: தயா, சத்ய, சௌசாதி, நியமாசார வந்தோபவந்து.

III வான பிரஸ்தம் :—சதுர் விதம்.

1. வைகானஸ 2. ஔதும்பர 3. வாலகில்ய 4. பேன பாஹ.

விருத்தி :—வனவாசின:, ஆசரித்த, திருஷவணஸ்ஞன, சந்தியாவந்தன, வேதாத்யையன, ஜப, தர்ப்பண, அக்னிஹோத்ர, ஸ்ராவணி காக்னி, வைச்வதேவ, வந்யஜன்ய, தான்ய போஜனுஹா, ஜடாவல்குல தாரிணஹா, ஸ்பத்நீகா, தநத உலூகலிக, ஆஸ்மகுட்டக:, சாந்த்ராயண விருத, நிரதாஹா, உஞ்சவிருத்

திகா, சதம்ஸவிருத்திகாஹா, மிருகசாரிகா, பில்
வாசிஞ, குஸுமாசிஞஹா, பாண்டுபத்ர ஆசீனஹா,
காலாந்தர போஜனஹா, ஏக காலிகா, சதுஷ்காலிகா,
கண்டகசாயிஞோ, வீராஸனசாயினஹ, பஞ்சாக்னி
மத்ய வாசிஞ தூமவாசிஞ, பாஷாணசாயிஞோ, உதக
வாசிஞ, ஏகபாதவாஸிஞோ, மௌனினஹா, சூர்யப்
பிரதிமுகோ ஊர்த்வபுஜா, அதோமுகாதிவிவித ஆசா
ராஹா, சதாசிவ பாராயணஹா, யமநியமாசனதி அஷ்
டாங்க யோக, தத்வஞான, தாத்பர்ய வந்தஹா, கேவல
மபவர்க்க மேவப்ராப்தி யந்தோபவந்து.

IV சந்யாசம் :— சதுர்விதம்.

1. குடீசக, 2. பஹூதக, 3. ஹம்ஸ, 4. பரம
ஹம்ஸ.

விருத்தி :— திருஷவணஸ்நான, திருதண்ட,
கமண்டலு, பவித்ர, மாதா பிதா ஆராதன, காஷாய
வஸ்த்ர தாரண, சௌசாசமன, காயத்ரீ
ஜப, ஸ்வாத்யாய, பிரஹ்மசர்ய, பிக்ஷாபாத்ரதாரண,
சிகாயக்ஞோபவீததாரண, ஸ்வக்ரஹே, ருஷியாஸ்ர
மேவ, ஊர்த்வ புண்ட்ரதாரண, அஷ்டகிராசாதி குடீ
சக ஆசார்யுதாஹா.

2. பஹூதக :—திரிஷவணஸ்நான சந்த்யாவந்
தன, காயத்ரீஜப, ஜப, தர்ப்பண, மாத்ரு பித்ரு ஆரா
தண, காஷாயாம்பர தாரண, திரிதண்ட, கமண்டலு,
பவித்ரதாரண, சப்தஸு, கிரஹேஷு சாதுவிருத்
தேஷு, பிராஹ்மண கிரஹேஷு, பிக்ஷாசரண,
வேதாந்தார்த்த வபோதகாஹா, திருபுண்டதாரண,
பொஹூது கதர்ம நிரதாஹா.

3. விவாத, க்ரோத, மத, மாத்சர்ய ஹிம்ஸாதி
ரஹிதஹ, கிராமேச ஏகராத்ரம் நகரே பஞ்சராத்ரம்
வாஸந்தஹ:, ததுபரிகவ சந்தஹா, சிகாரஹிதஹ,

ஏகதண்ட, கமண்டலு தாரிணோ, கோமூத்ர கோமய யாஹாரிணோ, சாந்திரயணவிருத, நிரந்தாஹா, யோக மார்க்க, தத்வஞானநிதி ஹம்ஸ தர்மர்சாராஹா இத் யாதி.

4. விருக்ஷமூலே, சூன்யாகாரே, ஸ்மாசானேனி வாசினஹ ஸாம்பரா, திகம்பரா, அனவலும்பித, தர்ம, அத்வைத, பிரதிபாதனநி சமலோஷ்ட காஞ்சனஹா, க்ஷேத்ரக்ஞ, பரமாத்மா, சம்யோஜன பராஹா, சர்வஜகத்பீஜா சேவ, விசேஷமயஹாய, நிர் விசேஷ நித்யானந்தாமருதரு சபான திருப்திமந்தஹா, பரஞ்ஜோதிஷி பிரவேச பரமஹம்ச தர்ம நிறதஹ பவந்து.

க்ஷத்திரியாள்

விருத்தி :—மஹி அனவரதப் யாசித, வேத வேதாந்த பாஷ்ய, பிராபாகர, நியாய, வைசேஷிக, பாணினி, பாதஞ்சல, வித்யா விசேஷண பரிபூர்ண: ஸ்னான, சந்தியாவந்தன, அத்வர கர்மகிருத: பிராஹ் மண சிசுருஷா சக்தா: தைர்ய சௌர்யாஹவிஜய, பரமேச்வரார் சனநி சத்குண வந்தா பவந்து.

வைச்யாள் :—ஸ்னான, ஸந்தியானுஷ்டான, பர சிவாராதன், பூசுர சேவாசக்தாஹ, முக்தா, பிரவாள, மாணிக்யா திரத்ன பரீக்ஷா, கிருஷிவாணிஜ்ய, பசு பால்யாதி சுவதர்மநிரதா:

மேல்கண்ட மூன்று வர்ணத்திரயம். (த்விஜாள்)

சூத்ர :—ஸர்வே சூத்ராஹா வர்ணத்திரய சிச் ருஷாரதா: களத்ராதி போஷண, கர்ஷண, பசுபாலன பாரோதவாஹா இத்யாதி. ~~(இத்யாதி)~~ ஸ்வகுலதர் மாஸக்த: பவந்து.

குலஸ்திரீகள் :—ஸ்வபதி சிஸ்ருஷா விருதாரண யோபவந்து.

ஸர்வேஜன :—அக்ஷரலேக்ய, கணித, காந்தர்வ, யுக்தி, இதிஹாஸ, ஆயுர்வேத, ஸாமுத்ரிகாலக்ஷண, யந்திரவாத, மந்திரவாத, வஸ்ய, ஆகர்ஷண, வித்வே

ஷண, தனுர்வேத, காவ்ய, பரீக்ஷா, நரபரீக்ஷா, பூபரீக்ஷா, கூடசாஸ்திர, சித்ரலேகன, பத்ரசோதன, வீணா, வேணு, மிருதங்க, பணவவாத்ய கிரியுகீத, ந்ருத்த, நாடக, குஸும, கிரீடா, அக்னிஸ்தம்ப, ஜலஸ்தம்ப, வாயுஸ்தம்ப, கதிஸ்தம்ப, இந்திரஜால, மஹேந்திரஜால மாயாவாத, மஹேந்திரஜால, ரசவாத, கன்யாவாத, ஆத்மவாத, நஷ்டமுஷ்டி சிந்தாலாப, சுகதுக்க ஜனன, மாரண, மோஹன, உச்சாடன, பூதபௌதிகவர்த்த மான, ஞானசித்தி, அஞ்சனசித்தி, அணிமா, மஹிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிராகாம்ய ஈசித்வாதி அஷ்டைச்வர், மஹாநிமித்த, ஷட்ஸம்ய, பாலசிக்ஷா, தேசபாஷா, பரகாயப் பிரவேச, அத்ருஸ்ய, ஆகாசக மனதி சதுர்ஷஷ்டி வித்யா என்று முடிக்கவே அதன் படி நடப்பதாய் எல்லாரும் சம்மதித்தார்கள்.

ஸ்ரீ ஸர்வக்ஞ வித்யோங்காரபீடாதீச்வரி வாக் பவநாத நாதாந்தவேத வேதாந்த வித்யாராக்ஞீயாகிய ஸ்ரீ சாரதாதேவியாகிய சிவனார் (சகோதரி) தங்கை ஸ்ரீபத்மபாதரிட பூஜை ஸ்ரீ சக்கிரத்திலேயேயிருந்து கொண்டு மஹிமைகாட்டி வந்தாள். (சிலர் மண்டன மிச்ரருடன், மாஹிஷ்மதி பட்டணத்திலே, வாக்யார்த் தம் செய்து தோற்கடிக்க தோற்றுப்போனவரின் பார்யையை ஸரஸ்வதியென்றும் இவ்வம்மையாரால் பிரச்னை செய்த காம கலாசாஸ்திரத்துக்கு விடை பகரமாட்டாமல் ஆறுமாதங்கழித்துப் பகருவதாகக் கெடுத்தவணை (வாயிதா) கேட்டுக்கொண்டு போய் பரகாயப் பிரவேசத்தாலே சவமாயிருந்த அமருக ராஜன் சரீரம் புக்கு உயிர்ப்பித்தெழுந்து அவன் பத் தினிகளோடு ரமித்து மெய்மறந்து கிடக்க சிஷ்யாள், மறை பொருளாய் "தத்துவமசி ராஜன், தத்துவமசி ராஜன்" யென்று பாடி வந்ததைக் கேட்டு பூர்வ ஞாபகமுண்டாக, அரசன் சரீரம் விட்டு சுய சரீரம் புக அச்சரீரம் அக்னி தக்தமாய்க் கொண்டிருந்தமை யால் ஸ்ரீ லக்ஷ்மீ நரசிம்ஹரைப் பிரார்த்திக்க அவர்

பிரஸன்னமாகி அக்னியை சமனப்படுத்தி உடலைக் காப்பாற்றிய பின், சாரதையை மாஹிஷ்மதி நகரத்தில் ஜெயித்தார் யென்றும், எழுதியிருக்கும் புஸ்தகங்கள் பலவிதமாய்ப் பிரசுரமாகிவிருப்பது வெல்லாம் ஆசார்யபகவத் பூஜ்ய பாதாப்ஜாளுடைய பெயர் சொல்லிக்கொண்டு வயிர் வளர்க்கிற குக்ஷிமபராளும், துரோகிகளும், தான் தோன்றிகளுமே, தங்கள் வசமுள்ள அதர்மிகளைத் தூண்டி யெழுதிவைத்த அபத்தக் களஞ்சியங்களென்று, அதே காலத்திலிருந்த விக்ரமாதித்தன் சரிதையை யிதில் நுழைத்திருக்கிறார்களென்றுங் கருதி, சத்புருஷர்களால் த்யஜிக்கத் தக்கதுவாகும். ஏனெனில் ஸர்வக்ஞவித்யோங்கார பீடாதீச்வரியின் ஷோடச கலைகளிலே யொரு கலையானது மாஹிஷ்மதியிலே மண்டன மிச்ரருடைய பார்யை ஸரஸவாணியின் நாவில் வசித்தது. அணணுகிய நமது ஜெகத்குரு ஸ்ரீமத் பகவத்பாதாளை தர்சித்து தன்பதி சிஷ்யராகவே தானும் காச்மீர தேசத்து ஸ்வஸ்தானம் செல்கிறேன், அங்கு நீர் சர்வக்ஞ வித்யோங்கார பீடமேறி எனனை சிறப்பிப்பதோடு உலகத்தின் சிறப்புக்காக நீரும் சிறப்படைய வேணுமென்று பிரார்த்தித்து, அந்த சரீரம் விட்டு காச்மீரத்திலிருந்த 15 (பதினைந்து) கலைகளோடு கூடி 16 கலை பூர்ணையானளே யொழிய வேறில்லை. ஆசார்யாள் ஸரஸ்வதியோடு மஹிஷ்மதியில் தர்க்கம் செய்யவுமில்லை. இங்கு ஜெயிக்கவுமில்லை. ஒரே தடவையாய் காச்மீரத்திலே ஸரஸ்வதியானவள் ஸமஸ்த பண்டிதோத்தமாள் வாக்ஸ்தானத்திலிருந்து ஆசார்யாளை ப்ரச்னை செய்து ப்ரச்னைகளுக்கெல்லாம் சுருதி யுகதி யனுபவங்களுடன் கூடிய உத்தரம் சொல்லக் கேட்டு மேல் ப்ரச்னைசெய்ய யாதுந் தோன்றுமல் பண்டிதாள் மௌனமாகியதை ஸரஸ்வதியானவள் கணடு பண்டிதர்களாலே காம கலா வித்யா பிரச்னை செய்விக்க, உடனே, ஆசார்ய பகவத்பாதாள், சரீரத்திலிருந்து காமேச்வர, சாமேச்வரிகள், மன்மத ரதி

யும் வாத்ஸ்யாயன ரிஷியும் வெளிக் கிளம்பி, ஆசார்யாளை வணங்கி நின்று, ப்ரபோ, தங்கள் திருவடி தொண்டர்களாகிய எங்களுக்கு அனுக்ஞை தந்தால் இச்சரஸவதியின் தூண்டுதலால் கேட்ட காம கலா தந்திர ப்ரச்னைக்கு நாங்கள் விடைபகர்வோ"மென்று வேண்டிக் கேட்டதை ஸரஸ்வதி யறிந்து திடுக்கிட்டவளாய் பண்டிதர்களை மௌனமாயிருக்கச் செய்து, ஸரஸ்வதி, அசரீரியாய் "ஸ்ரீ சங்கரரே" நீர் ஸர்வஜ்ஞரும், ஸர்வாதிதரும், ஸர்வக்ஞருமாதலாலும், எதியாச்ரமத்திலே ஸர்வ-அஸர்வ-ஸர்வாதீதியாதலாலும் அசாஸ்திர-அனார்ய அஸம்பாவித ப்ரச்னை மன்னித்துக் கார்த்து ஓங்கார வித்யா பீடா ரோஹணம் செய்து யெங்களை சிறப்பித்தருள வேணுமென்று பிரார்த்திக்க, அதன்படியே ஆசார்யாள் அந்த காச்மீரத்திலே அந்த மஹிமை தங்கிய பீடாரோஹணம் செய்தார்.

ஸர்வர், ஸர்வக்ஞர், ஸர்வாதீதரான, ஆசார்யாளை தர்சித்த ஸமஸ்த தேவரிஷி மானுஷாதி ஸர்வரும் ஜெகத்துக்கு ஆசார்யாளாக பூஜித்தார்கள். மண்டனமிச்ரர் சிராத்தம் செய்துகொண்டிருக்கையில், அங்கு சென்று தர்சனமளித்த, ஆசார்யாளை சிராத்த நிமந்தரணமாய் வந்திருந்த ஸ்ரீ ஜைமினி மஹரிஷியும் ஸ்ரீ வியாச பகவானும் சொன்னதைக் கேட்ட மாத்திரதிலேயே சிஷ்யனாய் விட்டார். பிறகு ஆசார்யாள் சிஷ்ய கோடிகளை சிருங்ககிரிக்கு வந்து தம்மை தர்சிக்கும்படிக்கு திட்டம் செய்துவிட்டு, ககன மார்க்கத்தில் பாதுகாஸித்தியுள்ள ஸ்ரீ பத்மபாதரையுமழைத்துக்கொண்டு, துங்கபத்திராசங்கமத்திலிறங்கி, சில காலம் வசித்து, சாரதா தேவியின் பிரார்த்தனைப்படி, அங்கே அந்த தேவியாருக்கு ஆலயங் கட்டி வைத்து பூஜிக்கச் செய்தார் பிறகு விபாண்டகருடைய ஆச்ரமம் சிருங்ககிரிக்குப் போக எத்தனிக்கையில் நான் இங்கேயே 15 கலைகளுடன் இருக்

கிறேன், ஸஞ்சாரத்துக்குக் கொண்டுபோகும் ஸ்ரீ சக்கிரத்தில் ஒரு கலையோடு இருக்கிறேனென வேண்டிக் கொண்டதனால், ஸ்ரீ சக்கிரம் முதலிய தேவதார்ச்சனைகளோடு அங்கு ஆறுமாதம் தங்கி சிஷ்யாளெல்லாம் தேச ஸஞ்சாரிகளாய் 1 சைவ 2 சாக்த 3 வைஷ்ணவ 4 காணுபத்ய 5 ஸௌர 6 காபாலிக மதங்களை போதித்து ஸ்தாபித்துக்கொண்டு எல்லோருமாய் ஆசார்யாளை வந்தடைந்து, துங்கபத்திரா நதி ஸங்கமத்திலே கூடவே (இவ்விடத்திற்கு "கூடலி" யெனப் பெயர் "துங்கபத்திரா கூடல்") மற்றும் சிஷ்யாள் ஆசார்யாளிடம் வந்து கூடிக்கொண்ட ஸ்தலமாதலால் "கூடலி" எனப் பெயர் ஸார்த்தகமாயிற்று. துங்கா-பத்ரா இரு நதிகள் (இடா-பிங்களா) ஸ்வரூபம் விட்டு ஸரஸ்வதி யென்னும் (ஸுஷுமனு) ஸ்வரூபமாய்க் கூடியது கூடலி.] இங்கு பீடம் ஏற்படுத்தி சிருங்ககிரிக்குப் போய் அதை. தபோ யோகவன மாக்கிக்கொண்டு இவ்விரு ஸ்தலங்களிலுமிருந்து 12 வருஷ காலம் சிஷ்ய கோடிகளுக்கு ஸர்வ வித்யைகளும் போதித்து வந்தார். சிருங்ககிரியிலே ஆசார்யாள் யாதொரு கோவிலும் கட்டவாவது கட்டிவைக்கவாவது செய்யவில்லை. பழய கோவில்களு மிருக்கவில்லை. (சிருங்ககிரியிலுள்ள ஸ்ரீ வித்யாசங்கராலயமும் ஸ்ரீ சாரதாலயமும் அக்ரஹாரமும் ஸ்ரீ வித்யாரண்ய புரமும் ஆசார்யாளுக்கு 1400 வருஷங்களுக்குப் பின், இப்பரம்பரையில் குருவாய் வந்த ஸ்ரீ வித்யாரண்யரென்னும் ஸர்வக்ஞஸஹிமாதவ: என்னும் கர்னடக ஸிம்ஹாஸன ப்ரதிஷ்டாபனுசார்யாளாலே, கட்டிவைக்கப் பட்டது. மற்றும் ஸ்ரீந்த வித்யாரண்ய ஜெகதகுரு ஸ்வாமிகள், ஆசார்ய சங்கரவிஜய காவ்யம் எழுதவுமில்லை. எழுதி வைக்கவுமில்லை. இககாலத்திலே ஸ்ரீ வித்யாரண்ய குருதேவர் பெயரால் பிரஸித்தமாயிருக்கிற சங்கர விஜயமென்னும் காவ்யமானது, மைசூர் ராஜ்யம் பெங்களூர் டிஸ்டிரிக்ட்டு ஆனேகல் தாலுக்கா ஜிகினி கிராம

வாஸியும் கல்யாணபுர ஸித்தாந்திகளுமான, ஓரிகல்லு சுப்பிரமணிய சாஸ்திரிகள் (சம்ஸ்க்ருதம மற்றும் கனடை பண்டிதராய் மதராஸ் கிரிஸ்டியன் காலேஜ் பிரசிடெண்ஸி காலேஜிலிருந்தவரும் பெரிய பள்ளா புரம் ஜெகத் பிரஸித்த பண்டித வித்யாநிதி வாசுதேவ சாஸ்திரிகளுடைய சிஷ்யருமானவர்.) இவரால் எழுதப்பட்டு இவருடைய சகபாடி (வாவிள்ள இராமஸ்வாமி சாஸ்திரி) களால் அச்சடிக்கப்பட்டது இந்த சுப்பிரமண்ய சாஸ்திரிகளும் இவர் குரு வாசுதேவ சாஸ்திரிகளும் வேலநாடு தெலுங்கர்கள் பந்துக்கள். சென்ற 1872 - 1873 வருஷங்களில் சிருங்ககிரியிலே யிருந்து அந்த ஸ்தலம் அபகரித்துக்கொண்டவரும் கைவசம் வைத்திருந்தவருமான ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபருடைய சிஷ்ய பரம்பரையைச் சேர்ந்த ஸ்ரீ நரசிம்ஹபாரதி ஸ்வாமி (முலக நாடு-செவிடர்) தாண்டுகோல்படி லஞ்சம் வாங்கிக்கொண்டு இந்த ஸித்தாந்தி சுப்பிரமணியசாஸ்திரிகளும் இவருக்கு சகாவுமாகிய ஸ்ரீவாவிள்ள இராமஸ்வாமி சாஸ்திரிகளுங்கூடி இந்த சிருங்ககிரி புஸ்தக சன்னியாசி (தனக்குத் தானே வேஷம் தரித்து புஸ்தகத்தை பூஜித்து குருவின் அனுக்கிரக வுபதேசமில்லாத தான் தோன்றிகளுக்கு புஸ்தக சன்னியாசி எனப் பெயராகும்) ஸ்ரீ நரசிம்மபாரதி ஸ்வாமி செவிட புஸ்தக சன்னியாசிகளை சிறப்பிக்கவும் நிஜமான சங்கராசார்ய ஜெகத்குருவின் அவிச்சின்ன (வாழையடி வாழை போல்) பரம்பரையார்களான 1 சிருங்ககிரி கூடலி 2 சிருங்ககிரி ஆவணி ஸ்வாமிகளுக்கு விரோதமாய் சிருங்ககிரி பஞ்சாங்கமென்றும் சங்கரவிஜயமென்றும் கற்பித்தெழுதியதே யொழிய சத்யமும் நிஜமும் போதிப்பனவல்ல. இது நாம் எமது பூர்வாச்ரமத்திலே மேற்படி சுப்பிரமணிய சாஸ்திரிகளிடம் நேரில் கேட்டறிந்த விஷயம். இதன்பேரில் கும்பகோணத்திலே வஸிக்கும் நிஜகாமகோடி பீடாதிபர்களான ஸ்ரீ சுரேஸ்வராசார்யாளுடைய பீடாசார்யாள்

தெரிந்து அதுமுதல் அவாளுடைய சிஷ்யாளாகிய சிருங்ககிரிஸ்தலம் ஆக்கிரமித்துக்கொண்டு மைசூர் அரசர் தயவால ப்ரபலதனிகாளா யிருக்கிறவர்களுடன் வியாஜ்ஜியங்கள் செய்துகொண்டிருப்பதுவும் லோகப் பிரசித்தமா யிருப்பதினாலே, அதிக மெழுத அவசியமில்லை யல்லவா? ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீட சிஷ்ய சன்னியாசி சிருங்ககிரி ஸ்தல மாக்கிறமித்த போது அந்த ஸ்தல பீடாதிபதிகள் தேச சஞ்சாரஞ் சென்று 45 வருஷம் வடதேசத்திலே சஞ்சரித்து பதரிகாச்ரமத்திலே 14 வருஷம் தங்கியிருக்க, அக்காலத்திலே காஞ்சிபுரத்கிலிருந்து சிருங்ககிரிக்கும் போன பாரதீ கிருஷ்ண தீர்த்தர் ஸ்தலம் பிடித்துக் கொண்டு நிஜபரம்பரை ஸ்வாமிகளுக்கு விட்டுக் கொடாமல் இடைஞ்சல் செய்த காரணத்தால் ஸஞ்சாரத்திலிருந்து திரும்பிய நிஜ சிருங்ககிரி வித்யாபீட ஸ்வாமிகள் மிகப் பெரியாராதலால் (துஷ்யந்து துர்ஜனா: துஷ்டர் சந்தோஷிக்க ஸஜ்ஜனர் தூர விலக) கூடலியிலேயே தங்கிவிட்டார்கள்.

இப்படித் தங்கிய ஸ்வாமிகள் ஸ்ரீ நரஸிம்ஹ பாரதி தீர்த்தர். இவராலே உபதேசம் பெற்ற ஸ்ரீ அநந்த சாயனர் ~~(சாயனர்)~~ மற்றும் ஸ்ரீ ஸர்வக்ஞ மாதவாசாரியார் என்ற ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிகள் சிருங்ககிரி ஜெகத்குரு ஸம்ஸ்தானத்தை இரண்டு பாகங்களாக்கிப் பிரித்து ஸ்ரீ சாயனராகிய நரஸிமஹ பாரதிகள் கூடலியிலும், ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிகள் கோலாரிலுமாக விருந்து, தென்திசை, வடதிசைகளை யாண்டு அனுக்கிரஹித்து வந்தாகள்.

இவர்கள் சிருங்ககிரியிலே ஸ்ரீ சங்கரபகவத்பாத பூஜ்யாளுடைய ஸர்வக்ஞவித்யோங்கார பீடாதிபராய் பட்டாபிஷேகம் பெற்று முதல் சிஷ்யர் ஸ்ரீமத் பத்மபாதாசார்யாள் (விச்வரூபர், ப்ருத்வீதரர்) சிஷ்ய பரம்பரையார். இப்போது அக்கிரமமாய் சிருங்ககிரி

யிலிருக்கும் காஞ்சி காமகோடி பீடாதிபதி சுக்ல யஜுர்வேதி கண்வசாகா (பிரதமசாகை) மண்டன மிச்ரரென்னும் கௌடப்ராஹ்மணரான ஸ்ரீ சுரேச்வராசார்யாள் பரம்பரையில் வந்தவர்களல்லவேயல்ல. ஸ்ரீ வித்யாரண்யரும் ஸ்ரீ நரஸிம்ஹ பாரதியாரும் கிருஷ்ண யஜுர்வேதி. பஞ்சத்திராவிடரிலே ஆந்திரர்கள். இவாளுக்கு முன் ஸ்ரீமத் சங்கரபகவத் பூஜயபாதரும் ஸ்ரீ பத்மபாதரும் பின்னரும் இப்பரம்பரை பீடாதிபதிகளாய் சிருங்ககிரியில் 1346 வருஷ காலமிருந்த ஸ்வாமிகளெல்லாம் பஞ்சதிராவிடரிலே தமிழ் பிராஹ்மண "வாத்யமர்கள்" வாத்யார்மாரகளென்றும் "உபாத்தியாய்" மாத்யமாள் யென்றும் பெயர் பெற்றவர்கள்.

இனி ஆசார்யாளுடைய நிஜ சரித்திரம் தொடங்குகிறேன்.

சிருங்ககிரியிலே ஸ்ரீமதாசார்யாள் சேர்ந்தவுடன் அத்தல வாஸிகளான விபாண்டக மகரிஷியாரும் குமாரர் ருச்ய ச்ருங்கர் (கலைக் கோட்டுமா முனிவர்) ஸ்ரீ வராஹஸ்வாமி, தத்தாத்ரேயர், ஸ்ரீ நரஸிம்ஹர் முதலிய மஹா பெரியவாளெல்லாம் ஆசார்யாளிடம் வந்து, இங்கேயே சுகமாய் வசியுங்கள். சாதுர் மாஸ்யாதி சகல விருதானுஷ்டானம் புரியுங்கள். நாங்களும் சக்தியானுசாரம் ஸேவைகளால் உதவி செய்கிறோம், என்று சொல்லக்கேட்டு, ஆசார்யாள் சிஷ்யகோடிகளுடன், மிகவும் களிகூர்ந்திருந்தார்கள். அதன்படியே அங்கு அந்த வராஹ க்ஷேத்திரத்திலேயும் "கூடலி"யிலுமாக பன்னிரண்டு வருஷந் தங்கிய நமது ஜெகத்குரு ஸ்ரீ சங்கரபகவத் பூஜ்யபாதாப்ஜாள் தமது பீடத்துக்கு ஜேஷ்ட சிரேஷ்ட சிஷ்யரான ஸ்ரீ பத்மபாதாசார்யாளை அதிபராக்கி பட்டங்கட்டி அவரால் சேவை அங்கீகரித்துக்கொண்டிருந்து, ஸ்ரீ பத்மபாதரை சிறப்பிக்கவேண்டி. சிஷ்

யார்ஜனை திக்விஜயத்துக்காக போய் வரும்படியாயும் ஸ்ரீ சுரேச்வராசார்யாரை நைஷ்க்கர்மஸித்தி வார்த்திகாதிகள் சங்க்ஷேப சாரீரகம் யெழுதும்படியாயும் அநந்த சுருதிகளுக்கனுசார[ங்]களாய் சுக்ல எஜுஸ் கண்வ சாகைக்கும் கிருஷ்ண எஜுஸ்ஸுக்கும் வேறு வேறு யெழுதும்படிக்கும் தாம் ஸ்ரீபத்மபாதருக்கு சாரீரக மீமாம்ஸா சூத்ரபாஷ்யம் நனருய்ப் புகட்டி அவரைக் கொண்டு சுதந்திரமாக விஜய டிண்டிமம் பஞ்சபாதிகாதி அநேக கிரந்தங்கள் ரசிப்பித்துவித்து தயாராயிருப்பதாயும், அவைகளை அவரிடம் பெற்றுக் கொண்டு முன்னுரைகளுக்கு முரண்படாமல் பார்த்து யெழுதும்படியாயும், ஆக்ஞயாபிக்கக் கேட்ட மற்ற சிஷ்யர்கள் பகவத்பாதாளிடம் பக்தி விநய பூர்வகம் சென்று, "ஸ்வாமின், இவர் மண்டனமிச்ரச்சுரேச்வரர், சுத்த கர்ம்மி, காமி மனோநாசம் வாஸனக்ஷயமாகாமல் 16 (ஷோடச) வருஷங்களாயும், பூர்ணமத பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவா வசிஷ்[ய]தே, என்ற சுக்ல எஜுஸ்சாகையின் சாந்தி பாடம்படி அபேத தர்சன ஞானனுபவியாகவுமில்லையே, ஸ்ரீ ஜெய்மினி மஹருஷியும் பகவான ஸ்ரீ வியாசரும் தங்களைப் புகழக் கேட்டு பயந்தல்லவோ ஸன்னிதானத்தின் சிஷ்யரானர். ஸன்னிதானத்தின் சித்தானுகுண்யரான அத்வையாத்மானுபவி ஸ்ரீ பத்மபாதர் செய்திருக்கும், சுதந்திர பாஷ்ய கிரந்தங்களே போராதா? இந்த மண்டனராகிய சுரேச்வரருங்கூட வேருக யெழுதுவது அவசியந்தான? சித்தமபுனராலோசனை செய்தருள வேணுமென்று பிரார்த்திக்க, பகவத்பாதாள் கேட்டு, "அன்பிலே சிறந்த சிஷ்யர்களே, ஸ்ரீ பத்மபாதருடைய பாஷ்யக் கிரந்தங்கள் எல்லாம் மிகவும் சிலாக்கியமானவைகள் தான். ஆயினும் அவை அமித அதிக ஞான பண்டிதர்களுக்கு மாத்திரம் பிரயோஜன கரமாகுமே யல்லாது ஸாதாரண ஜனங்களால் க்ரஹிக்க நடக்க வனுகூலமல்ல. ஆதலால் பண்டித பாமரா

ளுக்குங்கூட எளிதி லறியக்கூடியதாய் செய்யட்டு மென்று இந்த சுரேச்வரரை நியமித்தேன். அதற்கு ஆதரவு கொடுங்கள்" யென்றூர் அது கேட்ட சிஷ்யாள், ததாஸ்து, வென்று ஒப்புக்கொண்டு ஸ்ரீ சுரேச்வரருக்கு உதவியாயிருந்து கிரந்தரசனை செய்வித்தார்கள் ரசித்தவைகளை ஆசார்யாளும் மற்றவர்களு மொப்புக்கொண்டார்கள். பிறகு சுரேச்வரர் பாஷ்யங்கள் ஸ்ரீ பத்மபாதருடைய ஒப்புமுயர்வு மற்ற மஹாபாஷ்யங்களுக்கு ஈடற்றிருந்ததைத் தெறிந்து, பொருமையால், தன் பெயர் விளங்கவேண்டி, ஸ்ரீ பத்மபாதரிடம் பெற்றுக்கொண்ட சுதந்திர பாஷ்யாதி கிரந்தங்களை அக்னியால் தஹித்துவிட்டுத் திருப்பிக் கொடுக்கவேயில்லை. இதறிந்த ஆசார்யாள் ஸ்ரீ பத்மபாதருக்கும் சுரேச்வரருக்கும் மனஸ்தாபம், ஏற்பட்டதால் அனர்த்தங்கள் நடக்காமலிருக்கும் பொருட்டு நன்ருக யோஜித்து, ஸ்ரீ பத்மபாதர், சோள, சேர கேரள, பாண்டியதேசமெல்லாம் பிரக்யாதியாய் திக்விஜயம் செய்துவந்த பின் அவரை சிருங்ககிரி பீடத்திலிருத்திவிட்டு, ஸ்ரீ மண்டன சுரேச்வரர், முதலான மற்ற சிஷ்யாளோடு பிரயாணமாகி அவந்தி (ஆவணி) ஸ்ரீ சைலம் திருப்பதி யென்னும் வேங்கடாசல மார்க்கமாய்க் காஞ்சிபுரம் சேர்ந்து, அங்குப் பிரஜைகள் வேண்டுகோள்படி "காஞ்சி மஹா பட்டணத்தை ஸ்ரீ சக்ராகாரமாகத் திருத்தியமைத்து பிந்துஸ்தானத்தில் ஸ்ரீ காமாக்ஷிதேவி யாலயமும் ஸ்ரீ சக்கிரமும் இதற்காவரண தேவதைகளாக மற்ற சகல தேவாலயங்களையும் ஸ்ரீ சக்ராகார காஞ்சியிலமைத்து தேவாலய பூஜாதிகளுக்கு வைதீகர்களை சைவ, வைஷ்ணவ, சாக்த, காணுபத்ய, கௌமார, ஸௌர, காபாலிகாதி தீக்ஷை கொடுத்து நியமித்து இவைகளுக்கு தர்ம்ம கர்த்தாவாய் ஸ்ரீ காமாக்ஷிதேவியாரின் பீடமாகிய ஸ்ரீ காமகோடிக்கு ஸ்ரீ சுரேச்வராசார்யாளை நியமித்தார். பிறகு சிதம்பரம், மத்யார்ஜுனம், ஜம்புகேச்வரம்,

இராமேச்வரம், மதுரா, கன்யாகுமரி, அநந்தசயனம் மார்க்கமாய் யாத்திரை செய்து, அங்காங்கு ஜனங்கள் ஸ்ரீ பத்மபாதரைப் புகழக் கேட்டானந்தத்தோடே, "காலாடி" சேர்ந்தவுடனே தமது தாயார் ஸ்ரீ விசிஷ்டாதேவியாரை தர்சித்து சேவித்து அபீஷ்டம் வினவ, அந்த தேவியானவர், "அப்பா சங்கரா நீ யென்னைப் பிறிந்து சென்றது முதல் அடிக்கடி யாத்ரீகர்களால் உன் க்ஷேம மஹிமாதிகள் தெரிந்து நான் பரம பாக்கியத்தாலே யுன்னைப் புத்திரனாக வடைந்ததற்குச் சந்தோஷித்திருந்தேன்.

காச்யாந்து மரணான் முக்தி அதவா புத்திர ஸன்னிதே~~ஷ~~—வென்பதற்கிணங்க நீ பிரஸன்னமானாய். இனி இப்பூலோக வாழ்வு திருப்தியாயிற்று. அடைய வேண்டியது யாதும் பாக்கியில்லை. என்னுடைய ஸ்வஸ்தானமாகிய சுதாஸிந்து மத்யமணி த்வீபத்திலே சிந்தாமணி கிரஹத்துக்குச் செல்ல விச்சிக்கிறேன். செல்லும் மார்க்கத்திலே என் சகோதரன் வைகுண்டநாத கோவிந்தனென்னும் கோ லோக நாதன் கோபாலசுந்தரனைக் கண்டுகொண்டு கைலாயம் மார்க்கமாய் சிந்தாமணிக் கிரஹம் சேர்வேன். அங்கிருந்து உன்னுடைய ஸர்வ ஜெய சிந்தையை ஜயப்ரதமாக்கி வருவேன்" என்றனர். அதுகேட்டு ஸ்ரீ பகவத் பூஜ்ய பாதாப்ஜாள் ஸ்ரீ பத்மபாதரை நினைக்க, உடனே அவர் ககனமார்க்கமாய்ச் சிருங்ககிரியிலிருந்து காலாடி சேர்ந்து, உத்திரவு பெற்றுக்கொண்டு வைகுண்டத்திலிருந்து விஷ்ணு தூதர்களை திவ்ய விமானங்களோடு வருவித்து, ஸசரீரியாய் விமானமேறி செல்லச்செய்து, பிறகு லௌகீக தர்மப்படி தர்ப்பையில் கூர்ச்சம்செய்து, மாதாவின் கலையை, ஆவாஹனாதிகள், செய்து அபரகர்மம் முடிக்க தஹனத்துக்கு அந்த தேச "நம்பூதரி" பிராஹ்மணனை அக்னி தரும்படி கேட்டார். அதற்கு அவர்கள் எதிகளுக்கு மாத்ரு பித்ரு கர்மாதிகாரம் இல்லையாதலால்

அக்னி தரமாட்டோமென்று கக்ஷிகூடிப் பிடிவாதமாய் அக்னி தரவில்லை. உடனே பத்மபாதாசார்யாள் அனந்தசயன வரசனுக்குத் தெரிவிக்க, அரசர் வந்து அபரக்கிரியைகளை ஸாங்கமாய் நடத்தி முடிப்பித்து விட்டு, லோக குரு பரமசிவசங்கரர் விருப்பத்துக்கு விரோதிகளாய்ப் போன நம்பூதரிகளை வேதமோதவும், வைதிக கர்ம தர்மங்கள் நடத்தவும், எதிகளுக்கு பிக்ஷையிடவும் அருகரல்லாமற்போகவும், அவர்களில் லங்களே ஸ்மசானமாகவுங் கட்டளையிட்டு, ஆசார்யாளை வணங்கி அனுக்ஞை பெற்றுச் சென்றான். ஆசார்ய பகவத்பாதாளும் ஸ்ரீ பத்மபாதாசார்யாளும் இந்த வவிவேக நம்பூதரிகளது வாஸபூமி கேரளத்துக்கு பரமஹம்ஸ பரிவிராட்டுகள் (சந்நியாசிகள்) செல்லக்கூடாது. சென்றால் பிரஷ்டராகக் கடவது, என்று சொல்லி சபிக்குமுன், ககனத்திலே கிளம்பி சபித்துவிட்டு, நேராய் சிருங்ககிரிக்கு ஆகாயமார்க்கமாய்ப் போய்ச் சேர்ந்தார்கள். குமரிளபட்டர் இங்கு நேரேவந்து ஞானோபதேசம் பெற்று, பூர்வ வாஸனை மனே, நாசாதிகளாக்கிக்கொண்டு, ஸசரீரியாய் குமாராத்ரி சேர்ந்தார். ஆசார்யாள் சிருங்ககிரியிலே சில நாள் தங்கியிருந்து சிஷ்யாள் விருப்பப்படி ஜெகன்னுதத்துக்குச் சென்று ஸ்ரீ கிருஷ்ணபகவானுக் காலயங்கட்டி பிரதிஷ்டித்து மடங்கட்டி ஸந்தானபீடம் நிர்மித்து ஸ்ரீ ஹஸ்தாமலகாசார்யாளை பீடாதிபதியாக்கி, ஸமஸ்த பிருதுகளோடு பூர்வாம்னுய பீடேச்வரரை அங்கு விட்டுவிட்டு, பதரிகாச்ரமம் சென்று, அங்கு ஸ்ரீமந்நாராயணராலயம் கட்டி ஆனந்தகிரியாசார்யாளை உத்தராம்னுய பீடாதிபதியாக்கி, யங்கிருந்து, துவாரகைக்குப் போய் ஸ்ரீ கிருஷ்ணுலயம் வெள்ளியால் கட்டி புனருத்தாரஞ் செய்து, ஸ்ரீ தோடகாசார்யாளை பச்சிமாம்னுய பீடாதிபராக்கி, அங்கிருந்து சிருங்ககிரிக்குத் திரும்பிவந்து மௌனயோகிகளுக்கு ஸர்வ சித்திக்காக கோலூராத்ரியிலுள்ள ஸ்ரீ மூகாம்பிகா ஸன்னிதியிலே ஸ்ரீ சக்கிரம்

பிரதிஷ்டித்து, தர்ம ஸதளத்துக்குப்போய் சத்ய தர்மிகளுக்கு சத்ய தர்மபலன் கிடைக்கவேண்டி, கோவில் கட்டிவைத்து ஸ்ரீ தர்மேச்வரர் - தர்ம ஸம்வர்த்தன ஸம்வர்த்தனி எந்திரம் ஸ்தாபித்து, ஸ்ரீ குமாராத்ரிக்குப் போய் (சுப்பிரஹ்மண்யம்) பக்த கோடிகளுக்கு வேண்டிய வரன்களை வேண்டியவாறெல்லாம் கொடுக்கும் நாற்பத்தி முக்கோண ஷட்கர்ம முதலிய காம்ய பலனும் ஷட்சக்ராதீத சுத்த ஸஹஸ்ரார சக்ராதிஷ்டித ஸ்ரீ சுப்பிரஹ்மண்ய குஹகுரு யந்திரம் ஞான ஸித்திக்காக ஸ்தாபித்து திரும்பி சிருங்ககிரிக்கு வந்து, ஸமஸ்ததேச சிஷ்யாளையும் பீடாதிபரையும் தருவித்துக்கொண்டு அவர்கள் முன்பாக தாம் பூவுலகிலே தர்ம்ம ஸ்தாபனம் செய்வதற்காக சரீரமெடுத்து வந்த கார்யம் முடிந்ததாலே, தமது சக்தியினிடம் இரவலாய்ப் பெற்றுக்கொண்ட தநுவின் ஆயுள் பரிமாணம் வருஷம் முப்பத்திரெண்டும் முற்றுப்பெற்றதாலே, ஸ்வஸ்தானமாகிய கைலாயஞ் செல்வதாகத் தெரிவித்தார். இதுகேட்ட சிஷ்யாளெல்லாம் அன்பின் மேலீட்டால் ஆசார்யாளைப் பிரிந்திருக்க பயந்தவர்களாய், பாலகர் தாயைக் காணாமல் விம்மிவிம்மி யழுவதுபோல் அழத்தொடங்கினார்கள். ஆசார்யாள் அவர்களைத் தாம் காச்மீரத்தில் ஸர்வக்ஞவித்யோங்கார பீடாரோஹணஞ்செய்து கொடுத்த அத்வயானந்தகோடி விவித அபேதைக்ய தர்சனம் நினைத்துக்கொண்டு சந்தோஷிக்கும்படி சொல்லி தேற்றிய போது சிருங்ககிரிக்கு சமீபமுள்ள சந்திர துரோண பர்வத (பாபா புதன்கிரி) (புதனுடைய தந்தையாகிய சந்திரனுடைய கிரி) ஸஞ்சீவி பர்வத குஹையிலிருந்து மும்மூர்த்திகளுங்கூடிய ஏகஸ்வரூபரான பகவான் தத்தாத்ரேயர் வந்து, ஸபரிவாரத்தோடு, சிஷ்யாளையும், ஆசார்யாளையும் தமதாச்ரமத்துக்கு, அழைத்துப்போய் அதிக சிறப்பாய் தமது கல்பக விருக்ஷ காமதேனு சிந்தாமணிகளாலே, அத்ய திசயானந்தகரமான பிக்ஷாதிகளால், சத்கரிக்கச் செய்து,

சர்வருக்கும் ஸ்ரீ மதாசார்யாளுடைய நிஜஸ்வரூபத்தையும் அவதார காரணமும், செய்த அத்புத அபூர்வ சர்யைகளையும், சிலாகித்துச் சொல்லி, பூஜித்தார். பிறகு சிஷ்யாளெல்லாம் சந்தேஹங்களை யெல்லாங் கேட்டுத் தெளிந்தார்கள்.

பிறகு ஸ்ரீமதாசார்யாள் நந்திகேச்வரரை வரும்படி யழைத்தார். உடனே நந்திகேச்வரர் ஸமஸ்த சிவகணங்களுடன் பிரஸன்னமாக, தேவர்களெல்லாருங்கூட, மஹரிஷிகள் வைதீக ஸ்தோத்ரஞ்செய்ய, சதுர்வர்ணாச்ரமிகளும் பூஜித்து சேவிக்க, சந்தோஷித்தவராய் பகவான் சங்கரர் சிஷ்யகோடிகளைப் பார்த்து "வேத விதியிலும், ஸ்மார்த்தாதி குலாசாரத்திலும், தவறுதீர்கள். தெய்வமிகழாமல் ஆஸ்திக பக்தர்களாயிருங்கள். என்னிடமுள்ள பக்தி விச்வாஸங்களையுந்தவறுமல் என்னிலும் அன்னியரல்லாத நானே அவர் அவரே நானுகிய என்னிட சர்வாம்னுய பீடாதிபதி ஸ்ரீ பத்மபாதருக்கும் மற்ற அம்சபீடாதிபருக்கும் அவரால் நியமிக்கப் போகிற பீடாசார்யாளுக்கும் பவ்யமாய் அனுசாரமாய் நடந்தானந்தியுங்கள். "மோக்ஷ மார்க்க ஸாமக்ரியாம் பக்திரேவ கரீயஸி ஸ்வஸ்வரூபாநு ஸந்தானம் பக்திரித்யபிதீயதே-நந்தந்து ஸஜ்ஜனு: - துஷ்யந்து துர்ஜனு: - என்று சொல்லியவுடன் நந்திகேச்வரர் சின்மயரூபியானுர். ஆசார்ய பகவான் சங்கரரும் ஸத்சிதானந்த சிவமாய் சின்மய விருஷபாரூடராய் ஆகாயப் பரவெளியில் கிளம்பி மறைந்து கைலாயம் சேர்ந்து நமக்கெல்லா மபீஷ்ட சித்தி தந்து கொண்டிருக்கிறுரென்பதாய் சத்ய தர்ம பராயணுளாகிய சர்வ வர்ண ஆச்ரமிகளும் ஸர்வேச்வராம்ச ஸம்பூதர்களெல்லாம் இரண்டாயிரம் வருஷ காலமாய் நம்பி சிரத்தா பக்தி ஞானுசாரங்களுடன் நமது மூதாதைகள் நடந்து ஆனந்தித்தது போலவே நாமெல்லாரும் அனுஷ்டாதாக்களாய் உலகத்திலே ஸமானுதிக வர்ஜிதமாகிய நமது பாரதபூமியை சிறப்

பித்து அத்வைதிகளாய் வாழ்வோமாக. த்விதீ யாத்வை பவம் பவதி குருரேவசிவ: நதே வோஸ்வாத் யனப்பரம். ஸ்வாத்மனோன்யம் நவித்யதே - நாஸ்தி. ஸர்வம்கலு இதம் பிரஹ்மா ஓம் நகுரோரதிகம் நகு ரோரதிகம் நகுரோரதிகம் சிவசாஸனத: சிவசாஸனத: சிவசாஸனத:

இனி ஸ்ரீமதாசார்யாளால் ஸ்தாபித்த குரு பீடங் களின் விவரணம் எழுதுகிறேன்.

தற்போது அச்சாகி பலவிடங்களில் பிரசுரமா யிருக்கிற பல புஸ்தகங்கள் ஸ்ரீ சங்கர விஜயமென் னும் பெயரால் நிகழ்கிறது. அவைகளெல்லாம் ஸ்ரீமதாசார்ய பாஷ்யகாரராகிய சங்கரர் மற்றும் ஸ்ரீமத் கோவிந்தயோகீந்திர நாதருடைய சிஷ்யரிட விஜயமல்ல. யார்யாரோ அவர் பெயரால் எழுதியும் எழுதிவைத்ததுகளுமான கட்டுக்கதைகள், யென்று ஸத்புருஷாளும் ஸ்ரீமதாசார்யாளுடைய நிஜபக்தாளும் அபத்தக் களஞ்சியங்களென்று த்யஜித்துவிடத் தக் கவைகளாகும்.

ஆசார்யாள் ஸ்ரீமத் பாஷ்யகாரர் (கோவிந்த யோகீந்திரநாதருடைய சிஷ்யர்) ஸ்ரீசங்கர பகவத் பூஜ்ய பாதாப்ஜாளுடைய பாண்டவ யுதிஷ்டிர சகம்.

(1) அவதாரம்.

2631 வைசாக சுக்ல 5.

(2) உபநயனம்.

2636 சித்திரை சுக்ல 9. பாண்டவ யுதிஷ்டிரசகம்.

(3) ஸ்ரீமத் பரம ஹம்ஸாச்ரம ஸ்வீகாரம்.

2639 கார்த்திக சுக்ல 11.

(4) பதரிகாச்ரமத்தில் ஸ்ரீ கோவிந்த யோகீந் திரநாதரை யடுத்து கிரம ஸன்யாஸோபதேசம்

பெற்று அவராக்ஞைப்படி ப்ரஸ்தானத்திரியத்துக்கு பாஷ்யம் செய்து, பாஷ்யங்களையெல்லாம் ஸ்ரீ கௌட பாதர், ஸ்ரீசுகர், ஸ்ரீவேதவ்யாஸர், ஜைமினி, பைலர், வைசம்பாயனர், சுமந்து, கண்வர், சூதபுராணிகர், கண்டொப்புக்கொள்ள சிலாக்கியமானவைகளை காசியில் பிரசாரம்செய்ய வனுமதி தரல் (அத்வைதப் பிரசாரம்).

2640 பங்குனி சுக்ல 2.

(5) ஸ்ரீமத் நாராயணம் சாவதாரியான ஸனந்தனர் (பத்மபாதர்) அகோபில ஸ்ரீலக்ஷ்மீ நரசிம்மருடைய உத்திரவுப்படி ஸ்ரீமத் பகவத்பூஜ்யபாதாப்ஜாளிடம் சேர்ந்து உபதேசம்பெற்று பரமஹம்ஸரானது.

2641 ஆனி கிருஷ்ண 30.

(6) ஆசார்ய பகவத்பூஜ்ய பாதாப்ஜாளை காச்மீரத்திலுள்ள ஸர்வக்ஞவித்யோங்கார பீடமாரோஹணம் செய்ய வேண்டுமாய் ஸ்ரீ சரஸ்வதி வேண்டிக் கொண்டது.

2647 மார்கழி கிருஷ்ண 2.

(7) ஆசார்ய பகவத்பாதாளிடம் மண்டனமிச்ரர் சுதன்வராஜன் முதலியவர்கள் அநேகர் சிஷ்யரானது.

2648 சித்திரை சுக்ல 4.

(8) ஆசார்ய பகவான் காச்மீரம் சென்று ஸமஸ்த மதத்தாரையும் ஜெயித்து சந்தோஷிப்பித்து அவாள் வேண்டுகோள்படி ஸர்வக்ஞவித்யோங்கார பீடாரோஹணம் செய்தது.

2648 கார்த்திக சுக்ல 15.

(9) ஸமஸ்த சிஷ்யகோடிகள் ஸமேதராய் ஆசார்யாள் துங்கபத்திரா கூடலியில் ஸ்ரீ சாரதா பிரதிஷ்டை செய்தது.

2648 பங்குனி சுக்ல நவமி.

(10) ஸ்ரீ பத்மபாதரை (ஸனந்தனர்) சிருங்ககிரிக்கு அழைத்துப் போய், ஆசார்யாள் அவரைத் தமது ஸர்வக்ஞ வித்யோங்கார பீடாதிபராக்கி, பட்டாபிஷேகம் செய்து, விச்வரூபர் என்றும் ப்ருத்வீதரர், பூமண்டலாசார்யார் என்றும் பெயரிட்டு பத்மபாதரிடம் சேவை பெற்றுக்கொண்டு மற்ற சிஷ்யாளுக்கு வித்யோபதேசம் செய்துகொண்டுமிருந்தது.

2648 பங்குனி சுக்ல பௌர்ணமி முதல்
2660 வைசாக சுக்ல 13 சி வரையில்.

(11) ஸர்வக்ஞ வித்யோங்கார பீடாதிபரான (ஸனந்தன, ப்ருத்வீதர, விச்வரூப பூமண்டலாசார்யாள், ஸர்வேச்வர, (நரசிம்ஹ) பத்மபாதரை சிருங்ககிரியிலே நிறுத்திவிட்டு மற்ற சிஷ்யாளோடு திக்விஜயம் சென்றது.

2660 வைசாக சுக்ல 13 சி.

(12) ஆசார்யாள் சிஷ்யாளோடு அவந்தி (ஆவணி) ஸ்ரீசைலம், திருப்பதி முதலிய க்ஷேத்திரங்களை சிறப்பித்துவிட்டு காஞ்சீபுரம் சேர்ந்து, பட்டணத்தை ஸ்ரீ சக்கராகாரமாக்கி, பிந்துஸ்தானத்திலே ஸ்ரீ காமாக்ஷி தேவியையும் காமகலா சக்ரமும் பிரதிஷ்டித்து, அந்த காமகோடி பீடேச்வரி காமாக்ஷி தேவி கோவில் மற்ற கோவில்களுக்கும் ஸ்ரீ மண்டன மிச்ரரை துரீயாச்ரமியாக்கி காமகோடி பீடத்தின் தர்மகர்த்தா. சுரேச்வராசார்யாள் என பெயரிட்டு லோக ப்ரஸித்தியாக்கியது.

2660 ஆனிமீ தசமி.

(13) ஆசார்யாள் மற்ற சிஷ்யாளோடு ஜெகன்னாதம் சென்று அங்கு ஸந்தான பீடமும் மடமும் நிர்மாணம் செய்து ஸ்ரீ ஹஸ்தமலகாசார்யரை பீடாதிபதிபராக்கியது.

2661 ஆடி 11.

(14) ஆசார்யாள் ஸபரிவரம் சிஷ்யாள் ஸமேத ராய் பதரிகாச்ரமம் சென்று ஜோதிர் மடம்கட்டி பதரிநாராயணாலயமும் உஷ்ணோதக தீர்த்தமும் ஏற் படுத்தி ஆனந்த கிரியாசார்யாளை பீடாதிபராக்கியது.

2661 புரட்டாசி 15.

(15) ஆசார்யாள் துவாரகைக்கு சிஷ்யாளோடு போய் ஸ்ரீ கிருஷ்ணருக்கு வெள்ளியாலாலயமும் ஸித் தேச்வரப் பிரதிஷ்டை பத்திரகாளி யந்திரோத்தாரஞ் செய்து ஸ்ரீ தோடகாசார்யாளை பீடாதிபராக்கியது.

2662 வைகாசி 10.

(16) ஆசார்யாள் சிருங்ககிரிக்குத் திக்விஜயஞ் செய்துகொண்டு திரும்பி வந்து சேர்ந்தது.

2662 ஆடி சுத்த 13 சி.

(17) ஆசார்யாளை ஸ்ரீ சந்திரத்ரோண (ஸஞ் ஜீவி) பர்வதத்துக்கு (பாபாபுடன்கிரி) தத்தாத்ரேயர் அழைத்துப் போக, அவரோடு அவரது குஹாப் பிர வேசஞ் செய்திருந்து அங்கிருந்து ஸ்ரீ கைலாஸத்துக் கேகுமுன் சகல சிஷ்யாளுக்கும் நிஸ்ஸம்சயமான ஞானஞ்சொல்லி திடப்படுத்தியபின் சின்மய நந்தியா ரூடராய் சச்சின்மய சிவமாய்ச் சகலருக்குங் காக்ஷி தந்து ஆனந்திக்கச்செய்து ஸ்திரஸ்வ ஸ்தானமாகிய தமது கைலாயமேகியது.

2663 கார்த்திக சுக்ல 15.

இவ்விதமாய் பரமசிவனார் ஸ்ரீ சங்கரபகவத் பூஜ்யபாதாளாய் அவதரித்து பூமியில் துர்மதங்களை யெல்லாங் ஸன்மதங்களாக்கி, நாஸ்திகரை யாஸ்திக ராக்கி, யெல்லாரையும் வேத ப்ரதிபாத்யங்களான (1) சைவ, (2) சாக்த, (3) வைஷ்ணவ, (4) ஸௌர, (5) காணாபத்ய, (6) காபாலிகமென்ற பைரவ மதங் களை யுண்டாக்கி யனுஷ்டிக்க விதாயகங்களுஞ்செய்து போதித் தனுஷ்டிக்கச்செய்து மற்ற சிஷ்யாளை பஞ்ச

சதுர்

பீடாதிபதிகளுக் கனுகூலமாய் ஸஞ்சரித்து அபிவிருத்தி செய்யும்படி திட்டஞ்செய்து ஷண்மத (ஷட தர்சன) ஸ்தாபனாசார்ய வைதீகமார்க்கப் பிரவர்த்தக வத்வைத ப்ருஹ்மாத்ம வித்தியானந்த ரஸிகராய் ஸர்வரையுமாக்கி, நிஜஸ்தானமாகிய (முக்காலத்திலு மெக்காலத்திலு மழியாத) கைலாஸஞ் சேர்ந்து ஸர்வ லோகாதிஷ்டான தேவாதிதேவ மஹாதேவ சங்கரர் எக்காலும் நமமுன்னோர்க்கும் நமக்கும் நம் சந்ததியாருக்கும் அனுக்கிரகஞ் செய்யுங் கருணாகர மூர்த்தியாய் இருக்கிறார்

இப்புண்ய சரிதம் பக்தி சிரத்தைகளோடுங் கேட்டு, கேட்டபடி படித்தபடி நடந்து பாபங்களாகிய வக்ஞானம் நீங்கப்பெற்று புண்ய பரிபாக மிகுதியால் ஸுக்ஞானமுண்டாகி அத்வைதப் பிரஹ்ம ஸித்தியை யெல்லாரு மனுபவிப்பார்களாக. பகவான் சங்கரரருள்புரிவாராக.

சுபமஸ்து.

இனி சிருங்ககிரி பீட வரலாறுகள் எழுதுகிறேன்;—அதாவது,

ஸ்ரீமந் நாராயணாம்சாவதாரரான ஸ்ரீபத்ம பாதாசார்யாள் எப்போதுஞ் சிருங்க கிரியிலிருந்துகொண்டு ஸர்வாம்னாய பீடாதிஷ்டாதாவாய் ஸர்வக்ஞ வித்யோங்கார பீடாதீச்வரராய் லோகானுக்கிரஹம் செய்து வந்தார்.

(ஸ்ரீசுரேச்வராசார்யார் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீட தர்மாதிபராயிருந்தார்) ஸ்ரீ காமாக்ஷி தேவியினுடையதன்றோ காமகோடி பீடம். ஸ்ரீ சுரேச்வராசார்யாளை யெப்படி காமகோடி பீடாதிபரெனலாம் என்றால் "அர்ச்ச அர்ச்சகயோரபேதத்வாத்" என்ற

நியாயம் இந்த பீடத்துக்கு ஐந்திர ஸரஸ்வதியதிஷ்டான தேவதை. அகாராதிக்ஷ காராந்தமுள்ள 51 அக்ஷர பீடங்களிலே காமகோடி பீடம் "ஐ" என்ற "வாக்பவபீஜ" ஸரஸ்வதி பீடமென்றும், காமகோடி பீடமென்றும், ஸ்ரீ வித்யையில் பூர்ணாபிஷேகமடைந்த "நாத"ர்களுக்குப் பலவித நியாஸத்திலே "ஐ." காம கோடிபீட நியாஸங் தமது சரீரத்திலே செய்து கொள்ள வேண்டுமாதலால், இந்த "ஐ." ஸம்பந்த பீடம் காமகோடி பீடமென்பதும் மூகருக்கு வாக் ஸித்தி கவித்வஸித்தியுமளித்ததாலே காமகோடிபீடம் சாரதாபீடமே ஸரஸ்வதி தேவியின் பீடமேயொழிய வேறல்ல. இந்த பீடாதிகாரிகள் ஐந்திர ஸரஸ்வதி யென்று பட்டந்தரித்தலும் நியாயமேயாகும். ஸ்ரீகாளி தாசருங்கூட ஐந்திரஸ்யேவ சர[?]ஸனஸ்ய தததி மத்யே லலாடம் ப்ரபாம் ஸௌ:க்லீம்காந்திரித்யாதி சுலோக மூல்யமாய் ஸரஸ்வதி தேவியைத் துதித்திருப்பதுவே சாக்ஷியாகும். (ஐந்திர ஸரஸ்வதி யென்பது தேவேந்திரன் கொடுத்த பட்டப்பெயர்பற்றி நாம் யாதும்சொல்ல விஷ்டப்படுகிறதில்லை.)

ஸ்ரீமதாசார்யாளுக்குப் பின் ஸ்ரீமத் ஸர்வக்ஞ வித்யோங்கார பீடாரூடரளான ஸ்வாமிகளும் அனுதி முதலிது யெழுதிய ~~சாலிவாஹன~~ சகம் 1985 ஹு ஆடி மீ 27 தேதிவரையில் அவிச்சின்ன குருபரம் பரையடியிற் குறிக்கிறோம்.

இந்த பீடத்துக் காசார்யாளெல்லாம் தங்களது ஜீவித தசையிலேயே உத்தராதிகாரிகளை யாராய்ந்து நியமித்து பழக்கி பட்டங்கட்டி, வாழையடி வாழையாய் மூங்கிலடிமூங்கில் வம்சம்போல் வந்து கொண்டிருக்கிறது. எப்போதும் பரம்பரை விச்சித்தி (அருபட)யில்லை.

| | ஆசார்யாள் பெயர் | | வாஸஸ்தலம் |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ பரசிவ ஜெகத்குரீசர் | | கைலாயம் |
| 2. | ஸ்ரீ ஸதாசிவர் | | சிதம்பர கைலாயம் |
| 3. | ஸ்ரீ ஈஶ்வரர் | | ,, |
| 4. | ஸ்ரீ ருத்ரர் | | ,, |
| 5. | ஸ்ரீ மஹாவிஷ்ணு | | திரிபாத் விபூதி நாராயண வைகுண்டம் |
| 6. | ஸ்ரீ பிரஹ்மதேவர் | | ஸத்யலோகம் |
| 7. | ஸ்ரீ பிரஹ்மானந்தநாதாம்பா | | ,, |
| 8. | ஸ்ரீ ஸனகர் | ஜெகத்குரு | ,, |
| 9. | ஸ்ரீ ஸனந்தனர் | ,, | ,, |
| 10. | ஸ்ரீ ஸனாதனர் | ,, | ,, |
| 11. | ஸ்ரீ ஸனத்ஸுஜாதர் | ,, | ,, |
| 12. | ஸ்ரீமத் வசிஷ்டர் | ,, | ,, |
| 13. | ஸ்ரீமத் சக்திஸ்வரர் | ,, | ,, |
| 14. | ஸ்ரீமத் பராஶரர் | ,, | தேவதாருவனம் சத்யலோகம் |
| 15. | ஸ்ரீமத் வேதவியாஸர் | ,, | பதரீவனம் சத்யலோகம் |
| 16. | ஸ்ரீ சுகப்பிரஹ்மம் | ,, | சுமேருகிரி |
| 17. | ஸ்ரீ கௌடபாதாசார்யாள் | ,, | பதரிகாஶ்ரமம் |
| 18 | ஸ்ரீ கோவிந்த யோகீந்திரநாதர் | ,, | பதரிகாஶ்ரமம் |
| 19. | ஸ்ரீ சிவாவதாரமூர்த்தி சங்கரபகவத் பூஜ்ய பாதாள் | | சிருங்ககிரி ஷி கைலாயம் ஸர்வக்ஞ வித்யோங்கார பீடம் |
| 20. | ஸ்ரீமத் விஶ்வரூப பாரதி - பிருதிவீதரர், பத்மபாதர் (பூர்வம் ஸனந்தனர்) | | சிருங்ககிரி ஷி ஸர்வாம்னயம் - திரிலோகம் |
| 20. | (1) ஸ்ரீ சுரேச்வராசார்யாள் | | காஞ்சீபுரம் - காமகோடிபீடம் ~~தக்ஷிணாம்னாயம்~~ தேசம் |

| ஆசார்யாள் பெயர் | வாஸஸ்தலம் |
|---|---|
| 20. (2) ஸ்ரீ ஹஸ்தாமலகாசார்யாள் | ஜகன்னாதம் - ஸந்தான பீடம் பூர்வாம்னாயம் |
| 20. (3) ஸ்ரீ ஆனந்தகிரியாசார்யாள் | பதரிகாச்ரமம் உத்தராம்னாயம் |
| 20. (4) ஸ்ரீ தோடகாசார்யாள் | துவாரகா பஸ்சிமாம்னாடம் |
| 21. ஸ்ரீமத் சித்ரூப பாரதீ ஜெகத்குருஸ்வாமி | சிருங்ககிரி வித்யாரண்யபுரம் |
| 22. ஸ்ரீ கங்காதர பாரதீ ஜெகத்குருஸ்வாமி | சிருங்ககிரி வித்யாரண்யபுரம் |
| 23. ஸ்ரீமத் சித்கன பாரதீ ஜெகத்குருஸ்வாமி | சிருங்ககிரி வித்யாரண்யபுரம் |
| 24. ஸ்ரீமத் போதகன பாரதீ ஜெகத்குருஸ்வாமி | சிருங்ககிரி வித்யாரண்யபுரம் |
| 25. ஸ்ரீமத் ஞானோத்தம பாரதீ ஜெகத்குருஸ்வாமி | சிருங்ககிரி வித்யாரண்யபுரம் |
| 26. ஸ்ரீமத் நிருஸிம்ஹ பாரதீ ஜெகத்குருஸ்வாமி | சிருங்ககிரி வித்யாரண்யபுரம் |
| 27. ஸ்ரீ மதீச்வர பாரதீ ஜெகத்குருஸ்வாமி | சிருங்ககிரி வித்யாரண்யபுரம் |
| 28. ஸ்ரீ வித்யாசங்கரபாரதீ ஜெகத்குருஸ்வாமி | சிருங்ககிரி வித்யாரண்யபுரம் |
| 29. ஸ்ரீ கிருஷ்ண பாரதீ ஜெகத்குருஸ்வாமி | சிருங்ககிரி வித்யாரண்யபுரம் |
| 30. ஸ்ரீ சங்கர பாரதீ ஜெகத்குருஸ்வாமி | சிருங்ககிரி வித்யாரண்யபுரம் |
| 31. ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஜெகத்குருஸ்வாமி | சிருங்ககிரி வித்யாரண்யபுரம் |

| | ஆசார்யரள் பெயர் | வாஸஸ்தலம் |
|---|---|---|
| 32. | ஸ்ரீ ஸச்சிதானந்த பாரதீ ஜெகத்குரு ஸ்வாமி | சிருங்ககிரி வித்யாரண்யபுரம் |
| 33. | ஸ்ரீ பிரஹ்மானந்த பாரதீ ஜெகத்குரு ஸ்வாமி | சிருங்ககிரி வித்யாரண்யபுரம் |
| 34. | ஸ்ரீ சித்கன பாரதீ ஜெகத்குருஸ்வாமி | சிருங்ககிரி வித்யாரண்யபுரம் |
| 35. | ஸ்ரீமத் புருஷோத்தம பாரதீ ஜெகத்குரு ஸ்வாமி | சிருங்ககிரி வித்யாரண்யபுரம் |
| 36. | ஸ்ரீ மதுசூதன பாரதீ ஜெகத்குருஸ்வாமி | சிருங்ககிரி வித்யாரண்யபுரம் |
| 37. | ஸ்ரீ ஜகன்னாத பாரதீ ஜெகத்குருஸ்வாமி | சிருங்ககிரி வித்யாரண்யபுரம் |
| 38. | ஸ்ரீ விஶ்வானந்தபாரதீ ஜெகத்குருஸ்வாமி | சிருங்ககிரி வித்யாரண்யபுரம் |
| 39. | ஸ்ரீ விமலானந்த பாரதீ ஜெகத்குருஸ்வாமி | சிருங்ககிரி வித்யாரண்யபுரம் |
| 40. | ஸ்ரீ விக்ஞானாரண்ய பாரதீ ஜெகத்குரு ஸ்வாமி | சிருங்ககிரி வித்யாரண்யபுரம் |
| 41. | ஸ்ரீ விஶ்வரூப பாரதீ ஜெகத்குருஸ்வாமி | வித்யாரண்யபுரம் சிருங்ககிரி |
| 42. | ஸ்ரீ போதகன பாரதீ ஜெகத்குருஸ்வாமி | வித்யாரண்யபுரம் சிருங்ககிரி |
| 43. | ஸ்ரீமத் ஞானோத்தம பாரதீ ஜெகத்குரு ஸ்வாமி | வித்யாரண்யபுரம் சிருங்ககிரி |
| 44. | ஸ்ரீ மதிஶ்வர பாரதீ ஜெகத்குருஸ்வாமி | வித்யாரண்யபுரம் சிருங்ககிரி |

| ஆசார்யாள் பெயர் | வாஸஸ்தலம் |
|---|---|
| 45. ஸ்ரீ விஜயசங்கர பாரதீ ஜெகத்குருஸ்வாமி | வித்யாரண்யபுரம் சிருங்ககிரி |
| 46. ஸ்ரீ வித்யாதீர்த்த ந்ருஸிம்ஹபாரதீ ஜெகத் குருஸ்வாமி | சிருங்ககிரி கூடலி |
| 47. ஸ்ரீ ந்ருஸிம்ஹ பாரதீ ஜெகத்குருஸ்வாமி | சிருங்ககிரி கூடலி |
| 48. ஸ்ரீ மத் வித்யாரண்ய பாரதீ ஜெகத்குரு ஸ்வாமி | சிருங்ககிரி கூடலி கோலாஹலபுரி |
| 49. ஸ்ரீ மத் வித்யாசங்கர பாரதீ ஜெகத்குரு ஸ்வாமி | சிருங்ககிரி கோலா ஹலபுரி |
| 50. ஸ்ரீ மத் வித்யாரண்ய பாரதீ ஜெகத்குரு ஸ்வாமி | சிருங்ககிரி கோலா ஹலபுரி |
| 51. ஸ்ரீ ந்ருஸிம்ஹ பாரதீ ஜெகத்குருஸ்வாமி | சிருங்ககிரி கோலா ஹலபுரி |
| 52. ஸ்ரீ புருஷோத்தம பாரதீ ஜெகத்குரு ஸவாமி | சிருங்ககிரி கோலா ஹலபுரி |
| 53. ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஜெகத்குருஸ்வர்மி | சிருங்ககிரி கோலா ஹலபுரி |
| 54. ஸ்ரீ ந்ருஸிம்ஹ பாரதீ ஜெகத்குருஸ்வாமி | சிருங்ககிரி கேரலா ஹலபுரி |
| 55. ஸ்ரீ புருஷோத்தம பாரதீ ஜெகத்குரு ஸ்வாமி | சிருங்ககிரி கோலா ஹலபுரி |
| 56. ஸ்ரீ ந்ருஸிம்ஹ பாரதீ ஜெகத்குருஸ்வாமி | சிருங்ககிரி கோலா ஹலபுரி |

| | ஆசார்யாள் பெயர் | வாஸஸ்தலம் |
|---|---|---|
| 57. | ஸ்ரீ வித்யாசங்கர யோகீந்திரபாரதி ஜெகத் குருஸ்வாமி | சிருங்ககிரி கோலாஹலபுரி |
| 58. | ஸ்ரீ வித்யாரண்யபாரதி ஜெகத்குருஸ்வாமி | சிருங்ககிரி கோலாஹலபுரி |
| 59. | ஸ்ரீ த்ரிவிக்ரம பாரதி ஜெகத்குருஸ்வாமி | சிருங்ககிரி கோலாஹலபுரி |
| 60. | ஸ்ரீ குருசங்கர பாரதி ஜெகத்குருஸ்வாமி | சிருங்ககிரி கோலாஹலபுரி |
| 61. | ஸ்ரீ வித்யாரண்யபாரதி ஜெகத்குருஸ்வாமி | சிருங்ககிரி கோலாஹலபுரி |
| 62. | ஸ்ரீ வித்யாசங்கரபாரதி ஜெகத்குருஸ்வாமி | சிருங்ககிரி கோலாஹலபுரி |
| 63. | ஸ்ரீ மதுத்தண்ட வித்யாரண்ய பாரதி | சிருங்ககிரி கோலாஹலபுரி |
| 64. | ஸ்ரீ மதுத்தண்ட வித்யாசங்கர பாரதி ஜெகத்குருஸ்வாமி | சிருங்ககிரி கோலாஹலபுரி அவந்தி |
| 65. | ஸ்ரீமத பினவேதத் தண்ட வித்யாரண்ய பாரதீ ஜெகத்குரு ஸ்வாமி | சிருங்ககிரி கோலாஹலபுர அவந்தி |
| 66. | ஸ்ரீமத பினவேதத் தண்ட வித்யாசங்கர பாரதி ஜெகத்குரு ஸ்வாமி | சிருங்ககிரி கோலாஹலபுர அவந்தி |
| 67. | ஸ்ரீ மத [நிஜ வேதத் தண்ட] வித்யாரண்ய பாரதி ஜெகத்குரு ஸ்வாமி | சிருங்ககிரி கோலாஹலபுர அவந்தி |
| 68. | ஸ்ரீ மத [நிஜ வேதத் தண்ட] வித்யாசங்கர பாரதி ஜெகத்குரு ஸ்வாமி | சிருங்ககிரி கோலாஹலபுர அவந்தி |

மானகோட, நைஜாம் ராஜ்யம், வாரங்கல் ஜில்லா, மாபூபாபாத் என்கிற மானகோடா சிவாலயத்திலே 11-4-1925ல் பிருந்தாவனம் சமாதி.

69. ஸ்ரீபிரஹ்ம வித்யானந்த நாதபாரதீமேல் குறித்த 68.வது குருஸ்வாமியால் 24-10-1916 ல் பட்டாபிஷேகம் உபதேசம் பீடாதிகாரம் பெற்றதும் 11-4-1925 வரை குரு சேவை செய்து அநுக்கிரஹம் பூர்ணமாய்ப் பெற்றுக் குருவை சுமார் தச வர்ஷம் பூஜித்ததும் மேல் குறித்த குருதேவர்களிலே 46. வது ஸ்ரீவித்யாதீர்த்த ந்ருஸிம்ஹ பாரதிஸ்வாமிகளும் 47. வது ந்ருசிம்ஹ பாரதிஸ்வாமிகளும் நிஜ சிருங்க கிரியிலிருந்து பதரிகாச்ரமம்வரை 40. வருஷம் சஞ்சரித்துப் போய்த் திரும்பி வரும்போது, சிருங்ககிரி ஸ்தலத்தை காஞ்சிகாமகோடி பீடாதிபர் ஸ்ரீ சுரேச்வரா சார்யாளுடைய பரம் பரை சிஷ்யர் கிருஷ்ண தீர்த்தர் சிருங்ககிரி சேர்ந்து ஸ்தலம் பிடித்துக் கொண்டு இடைஞ்சல் செய்ததாலே, கூடலி முகாமிலேயே பூர்வ மடத்திலே ஸ்ரீ சாரதாதேவி ஸன்னிதி துங்கபத்ராநதி மத்ய ஸ்தலத்திலே நின்றுவிட நேரிட்டது.

(இந்த கிருஷ்ண தீர்த்தர்) நிஜ சிருங்ககிரி ஸ்ரீ பத்மபாதாசார்யாளுடைய பரம்பரையாரல்ல. இந்த ஸ்ரீ கிருஷ்ணதீர்த்த ஸ்வாமிக்கும் மேல் குறித்த 48-வது ஸ்ரீ வித்யாரண்ய பாரதி ஸ்வாமிகளுக்கும் பரம்பரை வேறு. தீர்த்தர்—பாரதி பெயர் புதிதாய் வஹித்துக்கொள்ளாமலிருந்தும் இப்பால் யாரோ சேர்த்து ஸ்ரீ பாரதி கிருஷ்ண தீர்த்தர் (கேட்டு-வாசல்) போலிகிளர்கள்.

ஆதலால் பாதராயண ஸம்பந்தமே தவிர நிஜ ஸம்பந்தம் யாதுமில்லை. இந்த பாரதி கிருஷ்ண தீர்த்த ஸ்வாமிகளிடம் (ஸர்வக்ஞ ஸ்ரீமாதவ:) வித்யா

ரண்ய பாரதீ ஸ்வாமிகள் (48-வது) ஸ்ரீ பத்மபாதா சார்யாளுடைய பரம்பரையைச் சேர்ந்தவர் யாதொரு உபதேசமும் பெறவில்லை. உபதேசம் பெற்ற சிஷ்யர் யென்தாகப் பொய் யெழுதிச் சிலர் பிரசுரம் செய்திருக்கிறார்கள். அது அசத்யம் நம்பத் தக்கதல்ல.

மோசடியாய் சிருங்ககிரிஸ்தலம் அபகரித்ததற்கு பொய் சாக்கு போக்குகள் யென்று தியஜிக்கத் தக்கது "விஷ்வ்ருக்ஷோபி ஸம்வர்த்ய ஸ்வயம் சேத்து மநர்ஹதி" யென்பதை யனுசரித்து பூர்வ வாசார்யர்கள் தயா ஸமுத்ரர்கள் இந்த பாரதிகிருஷ்ண தீர்த்தரை சும்மா விட்டு விட்டார்கள்.

இதற்குப் பின் 48 வது ஸ்ரீ வித்யாரண்ய பாரதி (ஸர்வக்ஞஸ்ஹிமாதவ: யென்பவரான) வேத பாஷ்யாதியநேக கிரந்த கர்த்தர் கர்னாடக ஸிம்ஹாஸனாதீச்வர ப்ரதிஷ்டாபனாசார்யாள் 46 வது குரு ஸ்வாமிகளின் உத்திரவுப்படி (சிஷ்யராதலால்) பரம்பரா ப்ராப்த நிஜசந்திர மௌளீச்வரலிங்காதி தேவதார்ச்சனைகள் யெடுத்துக்கொண்டு கோலார் (குவலால—கோலாஹலபுரி) பட்டணத்தை யடைந்து சிருங்ககிரி ஸர்வக்ஞவித்யோங்காரபீடத்தை ஸ்தாபித்து வஸித்து சில காலத்துக்குப் பின் வடதிசையில் கரவீர—ஸங்கேஸ்வர மடமும், தாம்ஸ்தாபித்த வித்யா நகரம் (ஹம்பி-பம்பா) கிஷ்கிந்தையில் விரூபாக்ஷ மடமும் கட்டிவைத்து, சிஷ்யாசார்யர்களை நியமித்து விட்டு வந்து கோலாரில் அதாவது கோலாஹலபுரியில் பீடத்திலே சிஷ்யர் ஸ்ரீவித்யா சங்கர பாரதிஸ்வாமிகளை 49-வது ஜெகத்குருவாக்கி பட்டங்கட்டி ஸமஸ்த வித்தைகளும் போதித்து விட்டு சாலிவாகன சகம் 1338ஞ அக்ஷய, ஜேஷ்ட சுத்தத் திரயோதசி யன்று ஸ்ரீகுமாரிள பட்டரென்றும், ஸ்ரீகுமாரக்கடவுளென்றும் ஸ்ரீசுப்பிரமண்ணிய அவதாரமாகிய விவர்(ஸர்வக்ஞஸ் ஸ்ஹிமாதவ: ஸ்ரீவித்யாரண்ய மஹாஸ்வாமிகள்) கோலார் மலையில் ஸ்ரீகங்காதரேச்வரஸ்வாமி ஆலயங்

கட்டி, அதில் ஸர்வக்ஞ வித்யோங்காரபீடம் புதைந்து, தாமும் ஸஜீவஸமாதியாய், ஸமாதியின் பேரில் ஸ்ரீகங்காதரேஸ்வர லிங்கம் 49-வது ஸ்வாமி குரு வாக்யானுசாரம் பிலதிஷ்டிக்க மேற்படி ஸமாதி லிங்கம் நாள்தோறும் பூஜிக்கப்பட்டு வருகிறது. இங்கிருந்து அந்தர்வாஹினி கங்கா மலையடிவாரத்தில் தோன்ற, பல தேசங்களிலிருந்து பக்த கோடிகள் தீர்த்த யாத்திரை செய்து பாபம் தீர்ந்து புண்ய தேஹிகளாக வானந்திக்கிறார்கள்.

நாற்பத்தியொன்பதாவது (49) ஜெகத்குரு ஸ்வாமிகள் முதல் 62-வது ஸ்வாமிகள் வரை கோலாரிலிருக்கையில் 1780 கி.பி. யில் மைசூர் டிப்பு ஸுல்தான் சாயிப் பஹதூர் அவர்களுக்கும் மதிராஸு ஈஸ்டிண்டியா கம்பெனி ஜெனரல் வெல்லஸ்லீயவர்களுக்கும் நடந்த யுத்த காலத்தில் கோலார் கோட்டைக்குள்ளிருந்த மடத்தை விட்டு 18-மைல் தென்கிழக்குமூலையில் ஸ்ரீமத்வால்மீகி மஹருஷி(ஸ்ரீப்ருகுபிரஜா பதியின் புத்திரர் "கவி" யெனப்படுகிற ஸ்ரீசுக்ராசார்யாள் பேரனும் ஸ்ரீமத் ராமாயணமெனும் ஆதிகாவ்யகர்த்தாவு மானவரின்) ஆச்ரமம் "அவந்தீ" ஆவணியெனப் பெயருள்ள க்ஷேத்திரஞ் சேர்ந்து "பூமண்டலா சார்யாள் அவனி பீடாதிபதிகள் நிலைத்தார்கள். அது முதல் அவனீ (பூமி)பீடாதிபரான நிஜ சிருங்ககிரி பூமண்டலா சார்ய ஸர்வா(ஸா)ம்ஞய பீடாதிபதிகளான விந்த ஜெகத் குரு பரம்பரையாருக்கு சிருங்ககிரி—கோலாஹலபுர— அவந்தீ—அவனி பீடாதீஸ்வரரென்று பெயர் வந்தது. இங்கு ஸ்ரீசீதாபிராட்டி பூர்ணகர்ப்பிணியா யிருந்த போது ஸ்ரீராமர் காட்டுக்கு வனுப்பிவிட ஸ்ரீமத் வால்மீகி மஹரிஷியானவர் கண்டு பரிதாபத்தால் தமது ஆச்ரமம் இந்த பிரஸ்தாப அவந்திக் கழைத்து புத்திரி போல் ரக்ஷித்து வர ஸ்ரீலவ—குசலவர்களைப் பிரசவித்து வித்யா உபாஸனதிகளால் வளர்த்தும்

வளர்த்தியும் வருகையில் அயோத்திமா நகரிலே ஸ்ரீராமரது அச்வமேதயாகக்குதிரை பூப்பிரதக்ஷிணத்திற்கு விடலாகியந்த அச்வம் இந்த ஆச்ரமஞ்சேர ஸ்ரீலவ—குசலவர்கள் அதைக் கட்டி வைத்து அதன் பின் ரக்ஷகர்களாக வந்த வெல்லா மானவ தானவ வானர ஸைன்னியங்களோடு சத்ருக்ன, பரத, லக்ஷ்மண, ஸ்ரீராமர்களையும் யுத்தம் செய்து தோர்கடித்து மூர்ச்சிப்பித்து அவர்களது கிரீட ஹார புஜகீர்த்தி வில் முலிதிய பாவையும் பறித்துக் கொண்டு ஜாம்பவான் ஹனுமான்களால் சுமப்பித்துக் கொண்டுவந்து, ஆச்ரமத்தில் ஸ்ரீ சீதாதேவி முன் காணிக்கையாய் ஸமர்ப்பிக்க அது கண்ட தேவியார் விபசனப் பட்டதால் விவரமறிந்து பின் ஸ்ரீமத் வால்மீகி மஹர்ஷிகளால் ஸ்ரீராமாதிகளை மூர்ச்சை தெளிய வைத்து, ஸீதாதேவி லவ, குசவாதிகளுடன் கூட்டி, அவர்களானந்தமாய் வசிக்கையில், ஸ்ரீராமரும் சகோதரர்களும் மற்ற சைன்ய வானரர், நரர், தானவர்களெல்லாரு, மாளுக்கொரு சிவலிங்கமும் பிரத்யேக தீர்த்தங்களும் பிரதிஷ்டை செய்து பூஜித்தது, பிரஸ்தாப அவந்தி யென்ற மஹா புண்ய க்ஷேத்திரம் ஒரு கோடி லிங்கமுந் தீர்த்தங்களும், அது ஸப்த புரிகளிலே (அயோத்யா, மதுரா, மாயா, காசி, காஞ்சீ, அவந்திகா, வேதத்துவாரவதீ சைவ ஸப்தைதே முக்திதாயிகா:) என்பதில் 6-வது அவந்தி யிதுவேதான். இங்கு ஸ்ரீமத் ஜெகத்குரு பரமசிவாவதாரமூர்த்தி ஸ்ரீ சங்கரபகவத் பூஜ்ய பாதாப்ஜாள் திக்விஜய காலத்தில் தங்கி, ஸ்ரீமத் ஸகல ஜனனீ ஸீதாபிராட்டியை ஸ்தோத்திரஞ் செய்து, சீதாராம யந்திரம் பிரதிஷ்டித்து, பூஜித்து, தங்கிய மடத்திற்கு கோலாஹலபுரத்திலிருந்து போய் வசிக்க நேரிட்டதால், நிஜசிருங்ககிரி கோலாஹலபுர பீடாதிபர்களுக்கு அவந்தி—அவனி—ஆவணி மடாதிபதிகளெனப் பெயராயிற்று.

டிப்புஸுல்தானை வென்று கொன்று ஜெனரல் வெல்லஸ்லியவர்கள் மைசூரில் அரச வம்ச பாலகரா

யிருந்த 3 வயது குழந்தை ஸ்ரீ கிருஷ்ணராஜர் III க்குப் பட்டாபிஷேகம் செய்வித்தது இந்த பீடாதிபதியான ஸ்வாமிகளால்தான் (அப்போது இக்காலத்திலே சிருங்ககிரியிலிருக்கும் ஸன்யாச பரம்பரையாருக்கு ஜெகத் குருத்வமாவது வேறு யாதுமாவது கிடையாது. அனுமதேயர்களா யிருந்தார்கள்). மறுபடியும் இந்த மைசூர் மஹாராஜா ஸ்ரீ கிருஷ்ணராஜ ஒடையார் III ப்ரௌடராகி ராஜ்ய பரிபாலனஞ் செய்யும்போது, அதாவது இந்த அவந்தீ ஸ்தலத்திலிருந்த ஜெகத்குரு ஸ்வாமிகளின் ஆக்ஞைப்படிக்கு ஸ்ரீ கரளபுரி யென்னும் ஸ்ரீ சாமுண்டேச்வரி பேட்டாவென்றும் பிரசித்த புண்ய மஹிமை க்ஷேத்திர பூஜைகள் லிங்கதாரி வீரசைவ சூத்திரர்கள் செய்து வந்ததை நிவர்த்தித்து, ஆசார்யாளை ஆவணி (அவந்தி) யிலிருந்து குருபிருது ராஜ பிருதுகளோடு மைசூருக்கும், நஞ்சனகுடிக்கும் (கரளபுரி) சாமுண்டி (பெட்டா) ஈஸ்வரிகோவிலுக்கும் அழைத்துப் போய், பிராஹ்மண பூஜையாக்கி கும்பாபிஷேகமும், கோபுர கலசப்பிரதிஷ்டையும் செய்வித்து (மைசூர், கெஜட், வால்யூம் II பக்கம் 289 படி) 1845 கி. பி. கீலக வருஷத்தில் பாதபூஜாதிகளும் செய்து வணங்கினர்.

(அந்த சமயத்தில் சிருங்ககிரியிலிருந்தவர்கள் யாதொரு மதிப்புக்கும் கௌரவத்திற்கும் குருபட்டத்திற்கும் அர்ஹரல்லாராயிருந்தனர்). மற்றும் பிரஸ்தாப கீலக வருஷத்தில் மைசூர் அரண்மனையில் இந்த ஜெகத்குரு பீடாதிபர் தங்கியிருந்தபோது மஹாராஜாவின் க்ஷேமார்த்தமாய் லிங்கதாரி சூத்ரர்களுடைய ஆதிக்யம் நீக்கி வைதீகப் பிராஹ்மணர்களாகிய வேல நாடு, முலக நாடு, தெலகாண்யம், வடமர், பிருஹத் சரணம், ஹோயிஸலநாடு, கர்ணடகர், உலசகர்மி, பரப்பரகர்மி, முதலிய ச்ரௌத ஸ்மார்த்தாளையும், ஸ்ரீ மத்வ, ஸ்ரீ ராமானுஜீய வைஷ்ணவர்ளாகிய வித்வத் சிரோன்மணிகளை பாராயண ஹோம

பூஜாதிகளுக்கும், பௌரோகிதத்திற்கும் நியமிப் பித்து, ப்ராஹ்மணாதி—பஞ்சமர்பர்யந்தம் ஸமஸ்த் வர்ண ஆச்ரமி—அனாச்ரமி, அவர்ணிகளுக்கும் குரு வாகவும், ஸமானாதிகவர்ஜிதமாயுமிருந்த இந்த நிஜ சிருங்ககிரி ஜெகத்குரு ஸர்வாம்னாய பீடாதீச்வரானை ஆஸேது ஹிமாசலம் வரையில் ஸேவித்து, பூஜித்து, பக்தியோடிருந்த மடத்தின் எதி சக்கிரவர்த்திகளைப் பற்றி அதிகமெழுதிப் புகழவும் வேண்டுமோ! அனா வச்யமல்லவா?

இப்பால் அரசர்களுக்கும் பிரஜைகளுக்கும் அன்னிய தேச நடவடிக்கை வித்தை பழக்கமாய் குரு, தேவதா, வேத-சாஸ்திர, மாதா—பிதா—பந்துக்கள், ஆச்ரிதாள், வர்ணாச்ரம தர்ம, கர்ம வாசாராதி யனுஷ்டானங்களில் விச்வாசம் குறைந்து அக்ஞான மேலிட்டு, இதி கர்த்தவ்யதா மூடத்தனம் பலித மானது காரணமாய்.

1. எவ்வனம் தன ஸம்பத்தி:
அதிகாரஞ்ச அவிவேகதா
ஏகைக மபயனர்த்தாய
கிமுயத்ர சதுஷ்டயம்

2. அபிமானம் ஸுராபானம்
கௌரவம் கோர ரௌரவம்
ப்ரதிஷ்டா ஸுகரீவிஷ்டா
த்ரேணி த்யக்த்வா ஸுகீபவா:

3. அஸந்துஷ்டோ த்விஜோ நஷ்ட:

4. ஸ்வயம் நஷ்ட: (பிரஷ்ட:) பரான் நாசயதி.

5. பராப பகுணர்த்தம் ஸ்வநாஸாச்சேத னம் வரம்.

6. எதா ராஜா ததா ப்ரஜா:

என்றபடி ஜெனங்களுடைய புத்தி பேதமாகிய தால் கர்ம தர்மாதி யாசாரானுஷ்டான ஸத்விருத்தி கள் குறையவே அக்ஞான வஹங்கார ஆசா பிசாச, மதாவது.

7. ஸ்வாத்மாவ போதஹீந:—குண பரமீரர் பிமான பரிதுஷ்டா:—வாரிஜ புத்புத ரக்ஷரம் மூடா: குர்வந்தி லோகபங்தேன, என்பதற்கிணங்க தேச, குலம், கர்மம், தர்மம் இழந்து பரதேசிகளைப்போல் நடிக்கிறதும்.

மூத்தோர் சொல் வார்த்தை யமிர்தம்.
ஏவாமக்கண் மூவா மருந்து.
ஐயம் புகினும் செய்வன செய்.
ஓதுவ தொழியேல்.
ஒன்னாரைச் சேரேல்.
தந்தை தாய்ப் பேண்.
ஐய மிட்டுண்
பெரியாரைத் துணைகொள்.
சேரிடமறிந்து சேர்.
இனத்தோடிரு.
மாற்றானுக் கிடங்கொடேல்.
தொழுதூண் சுவையிலும் உழுதூணினிது.
அறஞ்செய விரும்பு
ஈவது விலக்கேல்.
ஊக்கமது கைவிடேல்.

முதலியதமிழ்ச்சொல்லிரத்தினங்களிருக்கக் கைவிட்டு இம்மை மறுமை பயனளியாத, தீய பரதேச சொற் கள் கற்று நாட்டையும் தாய் தந்தை குருபந்து மீதேச நலம் தேடாமல் நிந்தித்து, பரிகஸித்து கிருதார்த்தர்

களாய் விட்டோமென்பதாய் வீண் கனுக் காண்கிற வர்கள் பலர் தோன்றி நாடு அடிமைத் தனத் துக்கு வந்தது. இப்படியாக நமது நாடும் ஸர்வமும் ஆசாபிசாசம் பிடித்துக் கொள்ள நாமெல்லாரும் ஸ்ரீராமர் சூர்ப்பனகையை அவமானப் படுத்தித் துரத்தியது போலந்த பிசாசின் மூக்குங் காது மறுத்து கோரப்படுத்துவதற்கு பதிலாக, நம் மூக்கையும் காதையு மறுத்துக்கொண்ட மூளிகளா யிருப்பதே காரணமென, தேசாபிமானி சஜ்ஜனங் களுக்கு நன்ருய்ப் புலப்படாமலிருது. விகாரமற்ற நாம் நம்மையே விகாரப்படுத்திக் கொள்ளுந்திறமை மாத்திரம் வாய்ந்திருப்பதற்கு சபாஷ்பட்டம் பெறத் தான் வேண்டுமல்லவா ?

இப்படிப் பட்டவர்களில் மைசூரில் மஹாராஜா ஸ்ரீ சாமராஜேந்திர ஓடயார் சிருவராய் யிருந்தபோது, திவான் குமரபுரம் சேஷாத்திரி ஐயரும் இவருடைய பிரியத்துக்கு பாத்திரனை ஆற்காடு பஞ்சாங்கி சோழியப் பிராஹ்மணன் ஸ்ரீ னிவாசய்யன் (ஸ்ரீனிவாசாசாரியார்) யென்ற இருவருங் கூடி யொரு சட்டமெழுதியதில் கோவில்கள் மடங்கள் தமது சர்க்காரா தீனத்திலிருக்கும்படிக்குஞ் சர்க்கார் சாங்கிஷன் பெருமல் மடாதிபதிகள் தங்களுக்குப் பின்னதிகாரி ஸ்வாமிகளை நியமிக்க கூடாதென ஒதிட்டமுண்டாக்கி, யப்படி சாங்க்ஷன் பெருத மடத்து சொத்துக்கள் சர்க்காரைச் சேர வேண்டிய தென்று மெழுதி, மஹாராஜாவின் கையெழுத்து வாங்கி ஆபீசில் ரஹஸ்யமாய் வைத்துக் கொண்டிருந் தார்கள்.

இந்த ரஹஸ்யரூல்கள் தெரியாததால் மாமூல்படி யென் குருதேவர் எனக்குப் பட்டாபிஷேகம் செய்து வதிகாரம் கொடுத்தார். நானந்த வதிகாரம் நாளது வரையில் நடத்துகிறேன். என் குருதேவர் 11-4-1925-ல் மான கோடாவிலிருக்கையில் நான்

மைசூரிலிருந்தேன். குருதேவர் 11-4-1925-ல் விதேஹ கைவல்ய மடைந்தார்.

ஆவணியில் மடத்தையும் மடத்து ஸ்திர சர சொத்துக்களை யாதொரு நோட்டீசுமில்லாமல் ரஹஸ்யமாய் சர்க்கார் கைப்பற்றிக் கொண்டது. சுமார் 5-6 லக்ஷம் சிஷ்யாள் பென் விஷயமாய்த் தூது போயும் மஹாஜரனுப்பியும் யென்னுடைய பல கடிதங் களுக்கும் சிஷ்யாளுக்குஞ் ஜவாப்புக்கொடாமல் 1925 முதல் 1928 வரை ரஹஸ்யமாயிருந்து சொத்துக்கள் கொடுக்கவில்லை, அதற்குக் காத்திராமல் என் சிஷ் யாள் விருப்பப்படி வட ஆற்காடு ஜில்லாவுக்கு வந்து தங்கினேன். நான் இங்கிருக்கும்போது, சிலர் பூர்வ குருதேவரின் விரோதிகளுஞ் சர்க்காருமாய்க் கலந்து கொண்டு ஒரு சிறுவனை ரஹஸ்யமாய்ச் சரிப்படுத்தி (அதாவது மடத்துக்குத் துரோகிகளான அஸத்வம் சத்திலுதித்த சிறுவன் ஒருவனை) சன்யாஸ வேஷந் தரிக்கச் செய்து 6 வருஷம் படிப்பித்தும், படிக்காம லிருந்தவனுக் கதிகாரங் கொடுத்து சஞ்சாரத்துக் கனுப்பி பணம் சம்பாதித்து மைசூருக்குக் கொண்டு வரும்படி யிந்த மதராசு கவர்ன்மெண்டு யெல்லைக் கனுப்ப வந்த பாலசன்னியாச வேஷதாரி (குருவில் லாமல் தான் தோன்றி) நன்ருய் சஞ்சாரஞ் செய் கிறது. இதுதான் சமயமென்று மற்ற மடாதிபதி களும் என்னுடைய சமஸ்தானத்தில் நேரிலும் ஏஜண்டுகள் மூல்யமாயும் பிரவேசித்து லஞ்சங்கள் கொடுத்து சிஷ்யாளைக் கலைக்கிருர்கள்.

நான் சத்யமே ஜெயமென்று நம்பி சிஷ்யா ளுடைய மேன்மைக்காக தபஸ்ஸு செய்துகொண்டு தரித்திர சங்கராசார்யனுய் விருத்தனுய் தேகபடுத்வம் தவறியதால் சிஷ்யாளை நம்பியிருக்கிறேன்.

என் மட ஆசாரவிசாராதி சர்வாதிகாரத்துக்கு கடப்பை, சித்தூர், நெல்லூர், வட ஆற்காடு, சேலம், தென்னுற்காடு, செங்கல்பட்டில் சிலபாகம் இந்த

மதராஸ் எல்லையில் சேர்ந்தது. மைசூரில் கோலார், பெங்களூர், தும்கூர் ஜில்லாக்கள்—மடந்தரித்திரமாயும் ஸ்வாமி விருதாப்பிய முள்ளவராயு மிருப்பதாலிதன் பொறுப்பு ஸர்வமுஞ் சிஷ்யாளுக்குச் சேர்ந்தது.

கும்பகோண வாசிகளான காஞ்சி காமகோடி பீடத்திய கண்வசாகா சுக்ல எஜுர்வேத பீடம் ஸ்வாமிகள் இப்பால் பல சரித்திரங்கள் யெழுதி வைத்து பிரசுரித்திருக்கிறார்கள். அதில்கண்ட 35 வது ஸ்வாமி ஸ்ரீ வித்யாகணேந்திராளுக்கும், கிலமாய்ப் பரம்பரையற்றுப் போயிருந்த காமகோடி பீடத்துக்கு சிதம்பர முகாமில் ஸன்யாஸங் கொடுத்ததோடு தமது பாதுகைகளையுங் கூட கொடுக்கலாகி எங்கள் மடத்து என் பூர்வகுரு 30 வது ஸ்வாமி (அவதூதராய்ப் போன) ஸ்ரீ சங்கர பாரதீ ஸ்வாமிகளாலும் 33 வது ஸ்ரீ பிரஹ்மானந்த பாரதீ ஸ்வாமிகளாலும் காமகோடி பீடம் புனருத்தாரணஞ் செய்து தர்ம ஸம்ஸ்தாபனம் செய்திருக்க வந்த பாதுகைகளை யின்று வரையில் பூஜித்தும் பூஜிப்பித்தும் வருகிற அந்த காமகோடி பீடபரம் பரையார் மறந்தோ அல்லது நன்றி பாராட்டாமலோ, இருப்பதோடு திருப்தியடையாமல் இதற்கு மாறு பாடாக இந்த காம கோடி பீடத்தார், எங்கள் மடத்துக்கு பிடைஞ்சல் செய்வதுந் தூஷிப்பதுஞ் சிஷ்யர்களைக் கலைத்தும் யெங்க ளெல்லையில் யெங்களுக்குள்ள காணிக்கை கப்பங்களை அபகரித்து அக்கிரமபிரவேசஞ் செய்ததுந்தவிர, அவாள் புஸ்தகத்தில் 1797 கி. பி. ல் என குருதேவர் ஜம்புகேஸ்வர சமீப கொண்டையம் பேட்டையில் பாத பூஜை பெற்றுக் கொண்டது குற்றமென்று ஒப்புக் கொண்டபடி இனி செய்வதில்லை யென்பதா யெழுதிக் கொடுத்ததாய் சிருஷ்டனை செய்து, யெழுதிப் பிரசாரம் பொய் போர்ஜரி விஷயம் மிகவும் வியஸனத்துக்கும்

ஆச்சர்யத்துக்கும் காரண மாயிருக்கிறது. சமஸ்த சிஷ்யாளும் தெறிய வேண்டியது மிகவு மவசியமாகும். பல விஷயங்கள் தேச கால நிலைமையை யோஜித்து இதில் யெழுதாமலடக்கி யிருக்கிறேன்.

---

## முடிவுரை

சத்ய தர்மதேவ பருமமரிஷிகளின் புத்திர பௌ திர புத்திரி பௌத்திரிகளே வேத சாஸ்திர வி வர்ணாச்ரமிகளே!

கைப் பொருள் தன்னின் மெய்ப்பொருள் க யென்பது ஸ்வதர்மமாகும். பரதேசிகளின் பா நடையனுஷ்டானங்களல்ல. பரதேசிகளால் மைக் கெடுக்கலாயிற்று. நாம் நமது ஜன்ம தர்மங் கடை பிடித்தால் கெடாமல் நன்ருய் வ வோம். திண்ணம். உங்கள் குருபீடம் உங்களு யது, உயர்த்தினுலும் தாழ்த்தினுலு மிழந்தா லாபம் நஷ்டம் மானம் அவமானம் சுகந்துக்கம் எ முங்களுடையது.

இவ்வளவுதான் அன்புடனெழுத மனம் வந் நதேவோஸ் வாத்மனப்பரம் ஆத்மனே அ நவித்யதே.

நாஸ்தியேவ சத்யே சர்வம் பிரதிஷ்டிதம் த ஸர்வம் பிரதிஷ்டிதம்.

ஆசானே ஈசானேப்போல் கார்—

ஆசானே ஸர்வமும் — ஆசானுக்கயலன் யாது மில்லை:—

ஆற்காடு, 12-8-1942.

ஸ்ரீ பிரஹ்மவித்யாநந்த நாத பா
நிஜ சிருங்ககிரி 69-வது குரு
சங்கராசார்யார்.

சுபமஸ்து

Giri Press, Triplicane C. 500—19-7-46—Q.H. M.S. 173.